www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

தිනමුරසු වාරමලර් ஜூன் 28–ஜூலை 04,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 263



# திரை மறைவில் திட்டமிட்ட சதி

## வாஜ்பேயி விஜயம்





## சரச நாயகன் இரகசியம்

## முள் நிலவு

## ராஜேஸ்குமார்

www.padippakam.com

# முரசம்

## அன்று மட்டுமா?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வன்னியில்
நடைபெற்ற குண்டுவீச்சு
பொதுமக்களை
விழுங்கிக் கொண்டது!

இவ் விடயம்
பாராளுமன்றத்தில் தெளிவாக
எடுத்துக் கூறப்பட்டிருந்தது!

ஜோசப் பரராஜசிங்கம்
வெளிப்படுத்தி இருந்தார்.

இன்றுவரை அரச தரப்பு
துளியளவுகூட
அக்கறைப்பட்டதாகத்
தெரியவில்லை?

நீதியமைச்சின் மீதான
விவாதம் ஒன்றிலேயே
குண்டுவீச்சு கொடுமை
எடுத்துக் கூறப்பட்டது!
இனப்பிரச்சனைத் தீர்வு
தொடர்பாக
அடிக்கடி பேசிவருபவர்
பேராசிரியர் பீரிஸ்!

"ஆரம்பகாலம் முதல்
தமிழ் மக்களை அரவணைக்காமையே
இனப்பிரச்சனைக்குக் காரணம்!"
என்று சமீபத்தில்
அவர் கூறியுமிருக்கிறார்!

ஆனால், குண்டுவீச்சும்
பொதுமக்கள் சாவுகளும்
பற்றிக் கூறப்பட்டதற்கு
பாராளுமன்றத்தில்
எந்தப் பதிலையும்
அவரும் கூறவில்லையே!

பாராளுமன்றத்திற்கு
புறம்பாக என்றாலும்
தமிழ் எம்.பி.களை அழைத்து
தனிப்பட்ட வகையில்கூட
அவர் விசாரித்ததாகத்
தகவல் இல்லை!

அப்பாவி மக்களுக்கு
அநீதி இழைக்கப்பட்டுள்ளதா,
என்பதை ஆராய்வது
நீதியமைச்சரின் கடமையில்லையா?

ஆரம்பம் முதல்
தமிழ் மக்களை அரவணைக்கத்
தவறியது கூட
பெரிய விடயமல்ல!

அரவணைத்தபடியே
முதுகில் குத்த முயன்றதே
தமிழ் மக்களை
தென்னிலங்கை அரசுகள்மீது
நம்பிக்கை இழக்கச் செய்திருந்தது!

'அணைக்காவிட்டாலும்
பரவாயில்லை- எங்களை
அழிக்க நினைக்காதீர்கள்!'
என்று கூறவேண்டிய
கட்டாயம் ஏற்பட்டது!

நாவினிக்கப் பேசியபடி
தமிழ்பேசும் மக்களின்
தனித்துவங்களைக்
கருவறுக்க முற்பட்ட
தென்னிலங்கை தலைமைகள்
பலதைக் கண்டுள்ளோம்!

தேசிய தனித்துவங்களை
கருவறுக்க நினைத்ததே
இனப்பிரச்சனை
தீவிரமடைந்ததுக்குக் காரணம்!

கடந்த கால ஆட்சியாளர்
அரவணைக்கத் தவறியதுதான்
காரணம் என நீதியமைச்சர்
நினைப்பாரேயானால்,
அரவணைக்கக்கூடிய
வாய்ப்பு இப்போது
அவர் கரங்களுக்கும்
தரப்பட்டிருக்கிறது!

நிகழ் காலத்தின் கரங்கள்
வழங்கியுள்ள வாய்ப்பை
தட்டிக்கழித்தபடி
கடந்தகாலத் தவறுகளை
சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பது
அர்த்தமற்றது!

கடந்த அரசாங்கங்கள்
செய்ய முடியாததைச் செய்யவே
இந்த அரசாங்கத்திற்கு
ஒரு சந்தர்ப்பம் தரப்பட்டது!

கடந்த காலத் தவறுகளை
ஆராய்வது தவறல்ல!
நிகழ்காலத்தில் அத்தவறுகள்
நேராமல் தடுக்க
ஆராய்ந்து பார்க்கலாம்!

ஆனால், அத்தவறுகளை
தூசி தட்டி எடுத்து,
நிகழ்காலத் தவறுகளை
நியாயப்படுத்துவது
பரிகாரமாகாது!

தவறுகளில் இருந்து
கற்றுக்கொள்வதற்கு பதில்,
தாங்கள் தப்பிக்கொள்ள
அவற்றைச் சுட்டிக்காட்டுவதே
அரசியல்வாதிகளது
வழக்கமாகிவிட்டது!

கடந்தகாலத் தவறுகள்
புதியவடிவில்- புதிய வீச்சில்
இன்று விசுவரூபம் எடுத்து
வருவதாகவே தெரிகிறது!

எனவே- நீதியமைச்சர்
கூறிய கருத்து
அவர் சார்ந்த அரசுக்கும்
இன்று பொருந்துகிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## மரணமிலாப் பெருவாழ்வு

நமக்கு உடம்போடு கூடிய ஒரு பிறப்புக் கிடைத்திருக்கிறது. பிறப்புக்குக் காரணம் எண்ணம். ஆயினும் எண்ணம் நிறைவேறுவதற்கு உலகில் பிறப்பு ஏற்பட உயிர்களின் தாய் தந்தையாகிய இறைவனே காரணமாகிறான். பயணியர் விடுதி கட்டி முடிக்கப்பட்டபின் பயணிகள் தங்கி செல்கிறார்கள். இதுபோல நமது உடம்பினுள் தங்குகிற பயணி உயிர்தான். உயிர் தங்குவதற்கே இந்த உடல் கிடைத்திருக்கிறது என்று எண்ணவேண்டும். இக் கருத்தை உறுதியாக எண்ணினால் அனைவருக்கும் இறைவன்மீது பக்தி வந்துவிடும்.

பயணி எப்படி தற்காலிகமாகத் தங்கிச் செல்கிறானோ அப்படியே பிறந்த உயிர், காலம் வரும்போது, நமது உடலைவிட்டு நீங்கி மரணம் அடைந்து விடுகிறது. மரணத்தை எண்ணியவுடன் மக்களுக்கு பயம் வருகிறது. இப் பயத்தைப் போக்க இறைவனை எண்ணி உறுதியான சித்தம் பெறவேண்டும். சித்தத்தில் இறைவன் கலந்துவிடுகிறான். பிறகு சித்தமெல்லாம் சிவமயம் என்றாகி விடும்.

'அரிது அரிது மானிடராகப் பிறத்தலரிது!' மற்ற உயிர்கள் இறைவனைச் சிந்திக்காது- அறியாது. இது மனிதனால் மட்டுமே முடியும். பிறப்பு இருந்தால் மரணமும் இருக்கும். நாம் பிறவாதிருக்க எந்நேரமும் இறைவனைச் சிந்தையில் இருத்த வேண்டும். அப்போதுதான் நாம் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்.

தொகுப்பு: செல்வன் சி. ஸ்ரீரவி, சிலாபம்.

## தொழுகையற்றவனின் நிலை பற்றி

1. எவன் வேண்டுமென்றே தொழுகையை விட்டானோ அவன் நிச்சயமாக (குப்ர்) இறை மறுப்புச் செய்தவன். (நபிமொழி)

2. தொழுகையை வீணாக்கியவன் நரகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீசப்படுவான். (அல்குர்ஆன்)

3. தொழுகையற்றவன் கேவலமாக மரணிக்கிறான். (நபிமொழி)

4. தொழுகையற்றவனின் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை! (நபி மொழி)

5. இஸ்லாமிய ஆட்சியில் தொழுகையற்றவனை கொலை செய்ய ஆணை பிறப்பிக்கவேண்டும். (இமாம் மாலிக் (ரஹ்)

6. தொழுகையற்றவனை கொலை செய்வது கடமை. (வாஜிப்) (இமாம் ஷாபியீ (ரஹ்)

7. தொழுகையற்றவனை (தவ்பா) பாவமன்னிப்புக் கோரும்வரை சிறையில் அடைக்கவேண்டும். (அபுஹனீபா (ரஹ்)

8. தொழுகையற்றவனை முஸ்லிம்களின் அடக்க ஸ்தலத்தில் அடக்க அனுமதிக்கக் கூடாது. (ஹல்ரத் ளெதுல் அஃலம் ரஹ்)

தொகுப்பு: எம்.எம்.எம். சபீக்குல் அமீன், மருதமுனை-05

## கவிதைப் போட்டி இல.260

### பரிசுக்குரிய கவிதை

### உரமிட்டவன்!

தேசப் பொருளாதாரம்
சீரும் சிறப்புமுற
தேயிலைச் செடிக்குத்தன்
இளமையெலாம் உரமிட்டு-பின்
தேயும் முதுமையில்
தேசப்படிகளில்
தேடுவாரற்றுக் கிடக்குமிவன்
தோட்டத் தொழிலாளி!

அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம், கண்டி.



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### தணிக்கை

பூசணிக்காய்கள்
சோற்றில் புதைந்தன!
பூனை விழி மூட
பூமி இருண்டது!
விடிகாலைப் பொழுதிலே
குண்டுப் பொதியுடன்
ஒரு குமரன்
சுற்றிவளைக்கப்படுகிறான்!

உரும்பிராய்-சிவன்சுதன்.

### அகதி

யார் உனக்கு
அகதி பட்டம்
சூட்டியது;
சூரிய கதிரா?
எடிபலவா?
ஜயசிக்குறுவா?

ஏ. நீதிராஜா-
ஹந்தான குரூப்,
கண்டி

### தீர்வு சக்கை என்று...?

நரையும் வரும்
நமக்கு விடிவு வராது;
திரையும் வரும்
தீர்வு கிடைக்காது;
மூப்பும் வரும்
மூண்ட ஜயசிக்குறுய் ஓயாது!

செல்வன் அ. அச்சுதன்-மூதூர்.

### தேர்தல் காலம்

உள்ளதா வாக்கு?
உனக்கும்
உயரும் செல்வாக்கு!

கே. தினேஷ்-ஹட்டன்.

### விரக்தி!

கொள்ளி வைக்கப் பிள்ளையில்லை
குடியிருக்க வீடுமில்லை!
'படிதாண்டாப் பத்தினி'யும்
மிதி வெடியில் மாண்டு போனாள்.
உறவென்று யாருமில்லை
உலகமே வெறுத்ததய்யா என்னை!

திருமதி சி. பாலாம்பிகை-மெல்டர,சிலாபம்

### விதி!

இவ்வூரில் இருந்திடலாம்
இருப்பதற்கு இடமில்லை!
அண்டையூர் சென்றிடலாம்
அடையாள அட்டையில்லை!

பூண்டுலோயா வில்லியம்.

### அப்பா..

இது யார் பிடித்த படம்,
அப்பா நீ இளைத்த இடம்
உனக்கா இப்படியொரு வரம்
இது தான் பிள்ளையின் குணம்!

என். பாபு- ஹாலி-எல.

### 'புது நாமம்'

புதுப்புது நாமத்துடன்
புதுப்போர் ஆரம்பமாவதால்
இறுதியில் இருப்பிடம்
இதுபோன்ற இடம்தான்!

செ. சுகுமார்- மாங்கேணி

### என்று தீரும்?

வேரோடி மண்ணில்
விழுதூன்றி நின்றகுடி
நாடோடியாகி,
நடைப்பிணமாய் அலைகின்ற
அவலநிலை என்று தீரும்?

எஸ். சுதர்சனா-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.263



கவனியுங்கள்:

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 04.07.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.263, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## பெண்கள் அமைப்புக்கள் எங்கே?

"யாழ் குடாநாட்டில் இளம் பெண் ஒருவர் பலியான போது, பெண்கள் அமைப்புக்கள் எங்கே போயின?" என்று கேட்டிருந்தார் அதிரடி அய்யாத்துரையார். எமது கேள்வியும் அதுவே. பெண் உரிமை, மனித உரிமை, மனித கௌரவம், மனித விடுதலை என்ற பெயர்களில் சிலர் தொழில் நடத்துவதால் உண்மையான அமைப்புக்களுக்கும் கெட்ட பெயர். பத்திரிகையில் புகைப்படம் வரவேண்டும் என்பதற்காக சிலர் கோஷம் போட, அதைச் சில பத்திரிகைகளும் பிரசுரிப்பது வேதனையானது.

சி.கே. நிர்மலா, கொழும்பு-10.



'நந்தினி 440 வோல்ட்' வாரம் தோறும் கலக்கியது. தப்புச் செய்ய பயமாக இருக்கிறது. நந்தினி எங்காவது இருக்கக்கூடும் அல்லவா!

ம. தினேஷ், மட்டக்களப்பு.

## அன்று சொன்னது

அன்று இன்றைய மிதவாத தமிழ்க் கட்சிகள் என்ன கூறின? "ஜனநாயக உரிமைக்காக ஆயுதம் தூக்கி அடிபடுகிறோம். நாங்கள்தான் உண்மையான ஜனநாயக விரும்பிகள்" என்றன. இன்று என்ன கூறுகின்றன? "ஜனநாயக நீரோட்டத்தில் நீந்துகிறோம்" என்று கூறுகின்றன. அப்படியானால் இவர்களுக்கு மட்டும் இரகசியமாக ஜனநாயக உரிமைகளை கொடுத்துவிட்டதோ அரசு?

எஸ். ராமநாதன், கனடா.



ஓவியம்: சந்தானம்

முரசின் தொடர்கள் சோடை போனதில்லை. நந்தினியும் எங்கள் இதயக் கோட்டையில் ஆட்சி செய்து விட்டாள். ராஜேஸ் குமாருக்கு நன்றி.

எல். உனைஸ்,
கல்முனை.

இத்தனை விரைவாக கதையை முடித்தது நியாயமா? ராஜேஸ்குமாரின் சூப்பர் வேகக் கதையைத் தான் கூறுகிறேன். அடுத்த தொடர் தூள் கிளப்பட்டும்.

எம். பஹ்மிதா,
மாவனல்ல.

## ராஜேஸ்குமார் கொன்றுவிட்டார்

ராஜேஸ்குமாரின், 'நந்தினி 440 வோல்ட்' அசத்தலோ அசத்தல். கொன்று விட்டார் ராஜேஸ்குமார். எங்கள் பாராட்டுக்களை அவருக்கு அனுப்பிவைக்கவும்.

கோ. ஜெயமல்லிகா, ஹட்டன்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## ஜனநாயகமாம் ஜனநாயகம்

ஜனநாயக உரிமைகள் என்பவையும், அரசியல் தீர்வும் வேறு வேறல்ல. தமிழ் பேசும் மக்களின் உரிமைக் கோரிக்கைகளும் ஜனநாயக கோரிக்கைகளே. அதனை தர மறுக்கும் அரசு எவ்வாறு ஜனநாயக சூழலை ஏற்படுத்தப் போகிறது? ஜனநாயக உரிமைகள் என்றால் என்னவென்றே தெரியாத தமிழ்க் கட்சிகளின் ஜனநாயக சூழல் பற்றிய பீற்றல்களுக்கு இராஜதந்திரியின் விளக்கம் அருமையாக இருந்தது.

கா. தங்கேஸ்வரன், யாழ்ப்பாணம்.

## பாராளுமன்றத்தால் முடியாது

பாராளுமன்றத்தை நம்பியதால் தமிழினம் நடுத்தெருவில் நின்றது. சிலர் மட்டும் பதவிகளை அலங்கரித்து பவிசு கண்டனர். மீண்டும் பாராளுமன்றத்தை நம்பவைக்க குட்டித் தலைமைகள் எட்டி எட்டி முயற்சிக்கின்றன. பாராளுமன்றம் தொடர்பான முரசின் அலசல்கள் வரவேற்கத்தக்கன.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் போட்டிக் களமான தென்னிலங்கை அரசியலுக்கு பாராளுமன்றம் உதவலாமே தவிர, இன உரிமைப் போருக்கு உதவாது. அப்படி உதவுவதாக இருந்தால், அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கையில் மாற்றம் கண்டிருப்போமே!

சு. கணேசமூர்த்தி, காரைதீவு.

## இன அபிமானம்

அன்புடையீர்;

வன்னியில் குண்டுவீச்சில் பொதுமக்கள் பலி, தமிழ்க் கட்சிகள் மௌனம்! மனித உரிமைக்காக மார்தட்டும் வீரர்களையும் காணவில்லையே? "எல்லாவற்றையும் கண்டிக்கிறோம்" என்று சில அமைப்புக்கள் கூறினாலும்கூட, தமிழ் மக்களின் துயரங்களில் ஒரு வீதத்தைக்கூட இவர்கள் இன்றுவரை அம்பலப்படுத்தி இருக்கமாட்டார்கள். இவர்களது அபிமானம் 'முரசு' முன்னர் ஒருமுறை கூறியது போல மனிதாபிமானமல்ல, இன அபிமானம். நம்மில் சிலரும் துணைபோவது அறியாமையா? சொரணையின்மையா?

கு. ரவிச்சந்திரன், திருமலை.

## பாலும், தேனும் தருமா?

அன்புள்ள முரசுக்கு;

தமிழ்க் கட்சித் தலைமைகள் நாடாளுமன்றத்தில் இருந்து பாலும் தேனும் பொழியச் செய்யலாம் எனக் கூறினாலும் ஆச்சரியமில்லை. இவர்கள் இந்த அமைப்பை குறை கூறுவதற்கு முன்வர மாட்டார்கள். "அங்கு இருப்பவர்கள் சரியில்லை, நாங்கள் போனால் பாலும் தேனும் பெற்றுத் தருவோம்!" என்று கூறுவார்கள். அதன் அர்த்தம் 'எங்களை அனுப்பிவையுங்கள்' என்ற பதவி ஆசையின் பதைப்பே தவிர வேறல்ல. இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ்க்கட்சியினரும் சரி, முன்பிருந்தோரும் சரி சாதித்தது யாதொன்றுமில்லை.

வி. மாணிக்கவாசகர், கொழும்பு-06.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

நாரதரின் 'கிரிக்கெட் அலசல்' தொடரட்டும்! கிரிக்கெட் போட்டிகள் தொடர்வது நாரதருக்கு மகிழ்ச்சியாக இருக்கும்தானே?

வி. பிரேம்நாத், கல்முனை.



படிப்பகம்

www.padippakam.com

# தீர்வைத் தள்ளிப்போட தேர்தல் நடத்துக!

# வெற்றிவரை யுத்தம் நடக்கட்டும்!

## கொழும்பில் இரகசிய ஆலோசனை

“தென்னிலங்கை மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைத்துவிட்டு, வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும். அதன் மூலம், இனப் பிரச்சனைக்குத் தீர்வைக் காண்பதை தள்ளிப்போடலாம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை ஒன்று வடக்கு-கிழக்கில் நிர்வாகம் நடத்துவதாகக் காண்பித்தபடி யுத்தத்தை இறுதி வரை கொண்டு நடத்தலாம்.”

இவ்வாறு தென்னிலங்கை புத்திஜீவிகள் சிலர் அரசுக்கு சிபாரிசு செய்ய உள்ளதாகக் கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் தற்போதைய நிலையில் தமிழ்-முஸ்லிம் கட்சிகளது கூட்டு ஒன்றே அதிகாரத்திற்கு வரும்.

அக் கூட்டுக்குள் ஏற்படும் இழுபறிகள் மூலம், வடக்கு-கிழக்கு இணைந்திருந்தால் முஸ்லிம் மக்கள் பலனடைய மாட்டார்கள், என்ற அபிப்பிராயத்தையும் தோற்றுவிக்கலாம். பின்னர் பிரிப்புக்கான வாக்கெடுப்பு நடத்துவதும் வெற்றி பெறுவதும் இலகு என்றும் அப் புத்திஜீவிகள் கருத்துக் கொண்டுள்ளனராம்.

மேற்படி புத்திஜீவிகளும் வேறு சிலரும் கொழும்பில் சமீபத்தில் ஒன்றுகூடி தமது சிபாரிசுகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

### மத்தியஸ்தம் வேண்டாம்

‘யுத்தம் பூரணமாக முடிவடைய முன்னர் அரசியல் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள பயங்கரவாத ஆதரவுச் சக்திகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றைக் கொண்டுவர சதி செய்கின்றன.

அரசியல் தீர்வை வழங்கத் தாமதம் இருப்பதாகக் கூறியே தமது சதி முயற்சியை நியாயப்படுத்துகின்றன. இன்றையக் கட்டத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வந்தால் சிங்கள மக்களின் உரிமைகளையும் விட்டுக் கொடுக்க நேரலாம்.

ஆதலால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எதுவும் ஏற்பட்டுவிடாமல் இருக்க வேண்டுமானால், அவ்வப்போது இடைக்கால அரசியல் சாகசங்களை செய்யவேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தல் நடத்துவதும் அதில் ஒன்றாகும்.

“உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தியதால் அரசுக்கு நஷ்டத்தை விட இலாபமே கிடைத்தது. வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பொருளாதார ரீதியாகவும் மேலும் பலன் கிட்டும்.” மேற்கண்டவாறு சட்டத்தரணி ஒருவர் அக் கூட்டத்தில் எடுத்துரைத்தாராம்.

### சிரிப்பு

“தேர்தல் நடந்தால் போட்டியிட தமிழ்க் கட்சிகள் தயாராக உள்ளன. அக் கட்சியைச் சேர்ந்தவர்களே அதனை நியாயப்படுத்தும் காரணங்களையும் அடுக்குவார்கள்”என்று மற்றொரு புத்திஜீவி கூறியபோது கூட்டத்தில் இருந்தோர் அனைவரும் பெரிதாகச் சிரித்தனராம்.

மிக இரகசியமாக நடைபெற்ற இக் கூட்டத்தில் அழைப்பு அனுப்பப்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். மொத்தம் பதினாறுபேர் கலந்து கொண்டதாகத் தெரிகிறது.

## வாஜ்பேயி வந்தால் பேசுவாரா?

### சர்ச்சையை உருவாக்க விரும்பாராம்!

இந்தியப் பிரதமர் வாஜ்பேயி இலங்கைக்கு விஜயம் செய்யும்போது இனப் பிரச்சனை பற்றி பேசுவார் என்று பெரிதாக எதிர்பார்க்க முடியாது என்று இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இலங்கை அரசு ஏனைய நாடுகள் தலையிடுவதை விரும்பவில்லை. இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளும் இன்றுவரை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக வலியுறுத்தவில்லை. இலங்கை அரசில் நம்பிக்கை கொண்ட கட்சிகள் போன்றே கருத்துக்கள் கூறிவருகின்றன.

இவ்வாறான நிலையில் இந்தியப் பிரதமர் இனப்பிரச்சனை தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துக்கள் எதனையும் கூறப்போவதில்லை எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

அதேசமயம் சில தமிழ்க் கட்சிகள் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை தமது விருப்பப்படி திரித்துக் கூற முற்படுகின்றன. விடுதலைப் புலிகளை நாம் இந்தியாவில்தான் தடை செய்துள்ளோம். இலங்கை விவகாரத்தில் புலிகளை ஒதுக்கிவிட்டு தீர்வு காணப்படவேண்டும் என்று பாரதிய ஜனதா அரசு கருத்துக் கொண்டிருக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் ஒருவர் ‘முரசு’க்கு கருத்துத் தெரிவிக்கும்போது: “இலங்கைத் தமிழர்களுக்கு நீதியான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்!” என்று கூறினார்.

### எதிர்ப்பும் இல்லை

‘இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான பொதுக் கொள்கை ஒன்று வகுக்க வேண்டும்’ என்று பாரதிய ஜனதா விரும்புகிறதா? அப்படியானால் புலிகள் தொடர்பாக அதன் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்கு அவர் கூறியதாவது:

“புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு எதனையும் நாம் மேற்கொள்ளமாட்டோம். அதேசமயம் ஆதரவான நிலைப்பாடும் கிடையாது. புலிகளுக்கு மட்டும் அல்ல, எந்தவொரு தமிழ்க் கட்சியையும் நாம் ஊக்குவிக்க மாட்டோம். இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைக்க எவ்வகையில் செயற்படுவது என்பதே பொதுக் கொள்கையில் அடங்கி இருக்கும்” என்று கூறினார்.

“இலங்கைப் பிரச்சனையில் பிரதமர் வாஜ்பேயி தானாக முன்வந்து எக் கருத்தையும் தற்போது கூறமாட்டார். அது இராஜதந்திரமும் ஆகாது” என்றும் அப்பிரமுகரும் தெரிவித்தார்.

## கூட்டணிக்குள் இரு அணி

### தமிழ் கார்டியன் கூறுகிறது

இலண்டனில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையான ‘தமிழ் கார்டியன்’ கூட்டணிக்குள் இரு அணிகள் உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஒரு அணி விடுதலைப் புலிகளுக்கு சார்பானது, இன்னொரு அணி புலிகளுக்கு எதிரானது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு சார்பான அணியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இன்னொரு அணி சிறீலங்கா அரசுக்கு சாதகமானது. அந்த அணியில் எம்.சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம், ஆனந்த சங்கரி, இரா. சம்பந்தன் ஆகியோர் இருக்கின்றனர். இந்த இரண்டாவது பிரிவுக்கு மக்களிடம் செல்வாக்கு கிடையாது.

இந்த இரண்டாவது பிரிவு புலிகளை முற்றாக அழித்தொழிக்கும் அரசின் நடவடிக்கைகளில் ஒரு அங்கமாக இருக்கிறது.

அரசியல் ரீதியாகவும், சர்வதேச பிரசாரரீதியாகவும் இலங்கை அரசுக்கு இவர்கள் உதவி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரண்டாவது அணியினரே யாழ் மேயராக போட்டியிட சரோஜினியை நிறுத்தினர் என்றும் ‘தமிழ் கார்டியன்’ கூறியுள்ளது.

‘சங்கிலியன் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி விட்டாரா?’ என்றும் அப்பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழ்க் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக வசந்தராஜா பணியாற்றி வருகிறார். இவர் முன்னாள் பி.பி.சி.யில் முக்கிய பொறுப்பிலும், பின்னர் ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவராகவும் இருந்தவர்.

## தொடரும் நிவாரணத் தடைகள்

### தமிழ்க் கட்சிகள் நிலை என்ன?

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் குறைக்கப்படும் என்ற செய்தி பத்திரிகைகளில் பெரியளவில் வெளியான பின்னரே தமிழ்க் கட்சிகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால் ஏற்கனவே நிவாரணம் வழங்கப்படாமல் பல தடவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. வன்னிக்கு இரு வாரங்களாக நிவாரணப் பொருட்கள் சென்றடையவில்லை.

இதுதவிர வன்னியில் உணவுத் தட்டுப்பாட்டால் பட்டினிச் சாவுகளும் இடம்பெற்றிருந்தன.

அவ்வப்போது கண்டனம் தெரிவிப்பது. பின்னர் ‘அரசோடு பேசினோம்; போதிய நிவாரணம் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டோம்’ என்று அறிக்கை விடுவது என்பவையே தமிழ்க் கட்சிகளது அரசியலாக இருந்து வருகிறது. ஆனால் நிவாரணம் நிறுத்தப்படுதல், குறைக்கப்படுதல், காலம் தாழ்த்தி அனுப்புதல் என்பவை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

கிழக்கிலும் திருமலை மாவட்டம் மூதூர் மற்றும் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப் பாட்டு பிரதேசங்களில் பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து வருகின்றன.

பட்ஜெட் நிறைவேற கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய வடக்கு-கிழக்கு, கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. அக் கட்சிகள் நிவாரணத் தடைகளை எதிர்த்து மேற்கொண்ட உருப்படியான நடவடிக்கைகள் என்ன? என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முன்னரே வறிய குடும்பங்கள் பலவற்றுக்கு யாழ் மாவட்டத்திலும் நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டது.

### வாபஸ்பெறுக

“உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது மக்களின் அன்றாடப் பிரச்சனையைத் தீர்க்க!” என்று தமிழ்க் கட்சிகள் கூறின. “அன்றாடப் பிரச்சனை வேறு அரசியல் பிரச்சனை வேறல்ல. அரசியல் தீர்வுக்கு பதிலாக யுத்தத்தை முன்னிறுத்தும் முனைப்புக்கு நிதி தேவைப்படுவதாலேயே சுமைகள் மக்கள் முதுகில் திணிக்கப்படுகின்றன.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு உடன் செய்ய வேண்டியது- யுத்தத்தைத் தொடரும் அரசுக்கு வழங்கும் ஆதரவை வாபஸ்பெறுவதும், யுத்தத்துக்கு எதிரான நிலைப்பாடுகளை மேற்கொள்வதுமேயாகும்!” என்று யாழ்பாணத்திலுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் கூறியதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

## இருவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு உறுகாமப் பகுதியில் கட்டுத் துவக்கை எடுத்துக் கொண்டு காட்டிற்கு வேட்டையாடச் சென்ற இரு தமிழர்கள் அப் பகுதிக்கு சிங்கள எல்லைப் புறத்திலிருந்து திடீரென வந்தோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சடலங்கள் அவ்விடத்திலே கிடக்கக் காணப்பட்டு உறவினர்களால் மீட்கப்பட்டது.

## கதிர்காமத்தில் கைது

கதிர்காமப் பகுதியில் அடிக்கடி இடம் பெறும் சம்பவங்கள் பொலிஸாரினதும், படையினரதும் நடவடிக்கைகளுக்குச் சவால் விடுப்பதாக அமைந்துள்ளதால் அங்கு தீவிர கவனம் செலுத்தவேண்டிய நெருக்கடி பாதுகாப்புத் தரப்பினருக்கு உருவாகியுள்ளது.

கதிர்காமத் திருவிழாக் காலம் ஆரம்பித்துள்ளதால் அங்குவரும் வெளியார்கள் பற்றிப் பொலிஸாரும், படையினரும் எச்சரிக்கையாக உள்ளனர். கடந்த வாரம் மேலும் 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதாக கதிர்காமப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சீ.ஏ. குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## இலங்கை அரசுக்கு புகழாரம்

### அமெரிக்க உள்துறை அறிக்கை!

அமெரிக்க உள்துறை இலாகாவின் வருடாந்த அறிக்கை இலங்கை அரசைப் பாராட்டியுள்ளது.

‘உலகளாவிய பயங்கரவாதத்தின் தன்மைகள்’ என்ற தலைப்பில் வெளியாகிய வருடாந்த அறிக்கையிலேயே புகழாரம் சூட்டப்பட்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தைத் தடை செய்யும் முயற்சிகளுக்கு சிறீலங்கா அரசு உறுதியான ஆதரவை அளிக்கிறது. 1998 ஜனவரியில் பயங்கரவாத குண்டுத் தாக்குதல் தொடர்பாக நடைபெற்ற சர்வதேச மாநாட்டு தீர்மானத்தில் சிறீலங்கா முதலாவதாக கைச்சாத்திட்டது.

பயங்கரவாதச் செயல்களை கண்டிப்பதிலும் கொழும்பு அதிவிரைவான ஆர்வம் காட்டுகிறது என்றும் அறிக்கை பாராட்டுகிறது.

விடுதலைப் புலிகளைக் கண்டித்துள்ள இந்த அறிக்கையில், 32 ஆயிரம் மோட்டார் குண்டுகள் இருந்த கப்பலைக் கடத்தியது, அமெரிக்க இரசாயன நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான கப்பலை திருமலையில் தாக்கியது உட்பட பலவற்றை பயங்கரவாதச் செயல்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் எதனையும் அமெரிக்க உள்துறை கண்டிக்கவில்லை.

## தாக்கியது யார்?

‘சண்டே லீடர்’ என்ற ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் இல்லத்தை இனம் தெரியாத சிலர் கடந்த புதன்கிழமை இரவு தாக்கியுள்ளனர். ரி 56 ரகத்துப்பாக்கியினால் 30 வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. நுகேகொடையில் மிரிகான என்ற இத்திலுள்ள அந்த இல்லத்தில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன்,அங்கு நிறுத்திவைக்கப்பட்ட மோட்டார் வண்டியின் கண்ணாடிகள் துப்பாக்கி ரவைகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

திரு.விக்கிரமதுங்கவின் கார்ச்சாரதி லலித் குமார, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதை அவதானித்ததும் மறைவிடத்தில் பதுங்கி இருந்தமையினால் உயிர் தப்பியதாகத் தெரிவித்தார்.

தனது இல்லத்தில் இடம் பெற்ற தாக்குதலில் அரசாங்கத்துடன் தொடர்புடைய சில சக்திகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று திரு.விக்கிரமதுங்க பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

## தொலைத் தொடர்பு நிலையங்கள் தகர்ப்பு!

### புலிகள் தரப்பில் இருவர் பலி

மட்டக்களப்பு-ஏறாவூர், அம்பாறை-ஒலுவில் ஆகிய இடங்களிலிருந்த இரு ரெலிகொம் நிறுவனத்தின் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையங்கள் புலிகள் இயக்கத்தினரால் கடந்தவாரம் தகர்க்கப்பட்டன. இதனால் இவற்றுக்கு அருகிலிருந்த எரிபொருள் நிரப்பு நிலையம், வைத்தியசாலை என்பன சேதமடைந்துள்ளன.

ஜூன் 19ந் திகதி நள்ளிரவு 12.25 க்கு ஒலுவிலில் இருந்த தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதில் அந்நிலையத்தின் தன்னியக்க இயந்திரத் தொகுதி முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் அதன் அருகில் இருந்த ஒலுவில் வைத்தியசாலைக்கும் சேதமேற்பட்டது. கடந்த இருவாரங்களுக்கு முன்னரே இப்பரிவர்த்தனை நிலையம் இயங்கத் துவங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஏறாவூரில்

இத்தாக்குதலுக்கு மறுநாள் ஜூன் 20ம் திகதி நள்ளிரவுக்குச் சற்றுப்பிந்தி 12.50 க்கு ஏறாவூரிலுள்ள தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தின்மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். முற்றிலும் முஸ்லிம் பகுதிக்குள் உள்ள இந்நிலையத்தின் முன்னால் சுமார் 100 யார் தூரத்தில் பொலிஸ் சோதனைக் காவலரண் உள்ளது. அங்கு சாதாரணமாக 20 பொலிஸார் கடமை புரிவதுண்டு.

தாக்குதலை நடத்த வந்த புலிகள் முதலில் மறுகரையிலுள்ள படுவான்கரை-பங்குடாவெளிப் பக்கமிருந்து படகுகளில் வந்திருந்தனர். இப்படகுகள் ஏறாவூர் வாவிக் கரைக்கு வரும்பொழுது சத்தமின்றி கைகளால் வலித்தே வந்திருக்கிறார்கள்.

கரைக்கு வந்த புலிகள் முஸ்லிம் பகுதிகளுக்கூடாகவும் மற்றும் தமிழ்ப் பகுதிகளுக்கூடாகவும், குறித்த ரெலிகொம் நிலையத்தையடைந்து அதிரடித் தாக்குதலை நடத்தினர். அதனால் காவலரணில் கடமையில் இருந்தோர் அகன்றனர்.

அங்கு புலிகளுக்கு எதுவித எதிர்ப்பும் இல்லாதிருந்ததால் சுமார் 15 நிமிடங்கள் நீடித்த புலிகளின் தகர்ப்பு முயற்சி, தொலைத் தொடர்புக் கோபுரம் சரிந்து விழும்வரை நீடித்தது.தாக்குதலுக்காக சுமார் 60க்கு மேற்பட்ட புலிகள் திரண்டிருந்ததாகத் தெரிய வருகிறது. பெண்புலி உறுப்பினர்களும் தாக்குதலில் பங்கெடுத்தார்கள்.

வாவியிலும், மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் தடுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டே தாக்குதல் தொடுக்கப்பட்டது. எனினும் ஏறாவூர் பொலிஸிலிருந்தோ, மைலம்பாவெளி படை முகாமிலிருந்தோ எதுவித பதில் தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்பாராத விதமாக காவலரண் களை ஊடறுத்துப் புலிகள் அலையாக வந்ததாக தாக்குதலை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

### ஓட வேண்டாம்

பயத்தின் காரணமாகப் பொதுமக்கள் வீடுகளிலிருந்து ஓட முற்பட்டபோது, ஓடவேண்டாமென்று சிங்களத்தில் கூறிப் புலிகள் மக்களைத் தடுத்தனராம்.

தாக்குதலை முடித்துக்கொண்டு புலிகளின் ஒரு தொகுதியினர் இரு படகுகளில் மறுகரையை அடைந்தனர், ஏனையோர் தரை வழியாக வேறு பகுதிகளுக்குச் சென்றனர்.

தாக்குதலினால் தொலைத் தொடர்பு கோபுரமும் கட்டடத்தின் ஒரு சிறு பகுதியும் சேதமடைந்தன. எனினும் பரிவர்த்தனை நிலையத்தின் இயந்திரத் தொகுதியிலிருந்த பகுதி பாதிக்கப்படவில்லை. பரிவர்த்தனை நிலையம் இருந்த வளவிற்குள் மின்மாற்றியொன்றுமுள்ளது. எனினும் புலிகள் அதனைக் கவனிக்கவில்லை. தாக்குதலை முடித்துப் புலிகள் அவசரமாக வெளியேறியதால் தப்பியோடிய பொலிஸார் விட்டுச் சென்ற சில சிறிய ஆயுதங்களைக்கூடப் புலிகள் கவனிக்கவில்லை.

தாக்குதலின்போது முஸ்லிம் பொது மக்கள் எவரேனும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாதென்பதில் புலிகள் மிகக் கவனமாக செயற்பட்டிருப்பதை தாக்குதல் நடத்தப்பட்ட விதம் தெளிவுபடுத்துவதாக முஸ்லிம் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். பொதுமக்கள் பாதிக்கப்படாதவாறான இத்தகைய நடவடிக்கைகள் ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு வழிவகுக்கும் என்றும் தமிழ்-முஸ்லிம் சமூக நல விரும்பிகள் கருதுகிறார்கள்.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டார்கள். அவர்களிருவரும் குறிதவறி புலிகளாலேயே சுடப்பட்டார்கள் என்று தெரியவருகிறது. இறந்த இருவரும் அம்பாறை 15ம் கொலனி, மற்றும் காக்காச்சி வெட்டையைச் சேர்ந்தவர்கள்.

இப்பரிவர்த்தனை நிலையம் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவினால் திறந்து வைக்கப்பட்டு சரியாக ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் தகர்க்கப்பட்டுள்ளது.

கடந்த இருமாதங்களில் நாடளாவிய ரீதியில் தகர்க்கப்பட்ட 6வது, 7வது தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத் தாக்குதல்கள் இவையாகும்.

## வரி-வட்டி-திறை ஒரு லொறிக்கு 90 ஆயிரம்

வவுனியாவில் இருந்து உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கு தமிழ்க் கட்சிகள் விதிக்கும் வரிச்சுமை பற்றி புகார் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கூட்டுறவு ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள மனுவில் மேற்கண்ட புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும், தமிழ்க் கட்சிகளும் விதிக்கும் வரிகள் காரணமாக லொறி ஒன்றுக்கு 90 ஆயிரம் ரூபாவரை மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக வன்னியில் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. இடம் பெயர்ந்த அப்பாவித் தமிழ் மக்களே இதனால் பதிப்படைகின்றனர் என்றும் புகாரில் கூறப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக நிவாரண உதவிகள் வன்னிக்கு வந்து சேரவில்லை என்பதையும் கூட்டுறவு ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

## வலுவிழந்த கண்டனம்!

ரஷ்யாவும் இந்தியாவும் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கையானது இந்தியாவுக்கெதிரான பொருளாதாரத் தடையினை மேற்கொள்ளும் நாடுகளது கூட்டின் செயற்பாட்டினைக் குழப்பும் முயற்சியாகும் எனவும் அவர் ரஷ்யாவைக் கண்டித்துள்ளார்.

இரு தசாப்தங்களுக்கு முன்னரே இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் அன்றைய ஜனாதிபதியாகவிருந்த பிரஷ்னேவ் காலத்திலேயே இரு நாடுகளுக்குமிடையே ஆயுதப்பரிகரண உடன்பாடு காணப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் இன்றுவரை பரஸ்பரம் பாதுகாப்பு மற்றும் சக்தித் துறைகளில் இந்தியாவுக்கு ரஷ்யா உதவி வருகின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, அமெரிக்காவின் இத்தகைய கண்டனமானது அதன் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் கோளாறுகள் உள்ளதையே படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

## இரத்தினபுரியில் மின்மாற்றி தகர்ப்பு!

இரத்தினபுரி குருஹவத்த எனுமிடத்திலிருந்த 33 ஆயிரம் மின் வலுக்கொண்ட மின்மாற்றியொன்று ஜூன் 20ம் திகதி விடியற்காலை 4.30க்கு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. புலிகள் இயக்கத்தினரே இச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் என்று நம்பப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# உள்நோக்கம் எதுவுமில்லை!

'புலிகளுக்கு பிரதியமைச்சர் மோட்டார் சைக்கிள் அன்பளிப்பு?' என்ற தலைப்பில் முரசில் வெளியான செய்தியில் உள்ள விடயங்களை பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மறுத்திருக்கிறார்.

அச் செய்தியானது திட்டமிட்ட ரீதியில் தனக்கு எதிரான-அபாண்டம் விளைவிக்கும் நோக்கம் கொண்டது எனவும் அவர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், முரசின் செய்திகளோ, விமர்சனங்களோ யார் மீதும் தனிப்பட்ட களங்கத்தைச் சுமத்துவனவல்ல. பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அவர்களின் பணிகள் குறித்த செய்திகளும் ஏற்கனவே முரசில் வெளியாகியே உள்ளன. அச் செய்திகளை அனுப்பிவைத்த மட்டக்களப்பு நிருபரே குறிப்பிட்ட செய்தியையும் பெற்றுத் தந்தார். எனவே எமது நிருபரது செய்தி உள்நோக்கம் கொண்டதல்ல.

குறிப்பிட்ட செய்தியில் 'புலிகளுக்கு மோட்டார் சைக்கிள் அன்பளிப்பு' என்பது உறுதியான தகவலாக அல்லாமல் கேள்விக் குறியுடனேயே வெளியாகி இருந்தது. படை அலுவலர் ஒருவர் கூறிய தகவல்களாகவே குறிப்பிட்ட விடயமும் ஏனைய தரவுகளும் வெளியாகி இருந்தன.

குறிப்பிட்ட செய்தி தொடர்பாக பிரதியமைச்சரைத் தொடர்புகொள்ள முயன்றதாகவும் முடியவில்லை என்றும் எமது நிருபர் கூறியுள்ளார்.

எனினும் குறிப்பிட்ட செய்தி தொடர்பான பிரதியமைச்சரின் தரப்பு மறுப்பை சென்ற வாரம் வெளியிட்டிருந்தோம். அதுதவிர, குறிப்பிட்ட செய்தியில் உள்ளவற்றில் சில விடயங்கள் முன்னரே வேறு பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தன. பத்திரிகைத் துறையோடு நெருக்கமான தொடர்புள்ள பிரதியமைச்சரின் கவனத்திற்கு அச் செய்திகள் செல்லாமல் இருந்திருக்காது என்றே கருதுகிறோம்.

விடுதலைப் புலிகளை பிரதியமைச்சர் போராளிகள் என்றே கூறி வருகிறார். எனவே புலிகளுடன் நட்புள்ளதாக படடைவட்டாரத்தில் பேசப்பட்ட தகவலை வெளியிடுவது அவரது நற்பெயருக்கு தீங்காகும் என முரசு கருதவும் இல்லை.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா மீது அபாண்டமான பழி சுமத்தும் நோக்கந்தோடு அச்செய்தி வெளியிடப்பட்டதாக கருதுவது சரியானதல்ல.

-ஆசிரியர்-

# தந்தையரை இழந்தவர்கள்

முல்லைத்தீவு கடலோர கிராமங்களில் வாழும் அநேகமான பெண்கள் விதவைகளாக உள்ளதாக சமீபத்திய புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது.

முல்லைத்தீவில் தமிழினியன் குடியிருப்பில் கல்வி பயிலும் 30 பிள்ளைகள் தங்கள் தந்தைமாரை இழந்தவர்களாவர்.

# காலாவதியான பொருட்கள்–விலையும் உயரத்தில்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் கால எல்லை முடிவடைந்த பொருட்கள் தற்போது தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குழந்தைகளுக்கான பால் மா வகைகள், பிஸ்கட் வகைகள், சொக்லட் வகைகள் போன்ற பல பொருட்கள் காலாவதி தினம் முடிவடைந்து பல மாதங்கள் சென்ற பின்பும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக மன்னார் நகரிலுள்ள பல வர்த்தக நிலையங்களில் இவ்வாறான பொருட்களை சர்வசாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான பொருட்களைக் கண்டுபிடித்து அவற்றை அழித்துவிடும் பொறுப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பணியாகும். ஆனால் மன்னாரில் இப்பரிசோதகர் இருக்கிறாரா, இல்லையா? என்பதை அறிய முடியாதுள்ளது.

இவ்வாறே பல கட்டுப்பாட்டு விலையிலுள்ள பொருட்களின் விலைகள் பல மடங்கு விலை அதிகரித்து விற்கப்படுகின்றன. மன்னார் நகரிலுள்ள கடைகளில் விற்கப்படும் விலைகளைவிட வன்னிப் பகுதியில் குறைவாகவே உள்ளன.

அதிகமான கடைகளிலுள்ள தராசு, படிகள் என்பனவற்றிற்கு சீல் வைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. சில வியாபாரிகள் கல்லையும், கட்டையையும் அளவை, நிறுவைப் பொருட்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவற்றை எல்லாம் கேட்பதற்கு யாருமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

# ஆங்கிலப்பாடநெறி ஆரம்பமாகவில்லை

(திருமலை நிருபர்)

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருக்கோணமலை வளாகத்தில் ஆங்கிலப் பாடநெறி ஆரம்பிக்கப்படாததால் முப்பது மாணவர்கள் எதிர்காலத்தை இழந்துபோகும் நிலமை தோன்றியுள்ளது.

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி திருக்கோணமலையில் இயங்கியபோது ஆங்கில டிப்ளோமா பயிற்சி நெறியும், கணக்கியலும் நிதியியலும், டிப்ளோமா பயிற்சி நெறியும் இடம்பெற்றன.

வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுமுகமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நெறிகள் இரண்டு கல்வியாண்டுகளைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன.

எனினும் புதிய கல்விக்கொள்கையின்படி இக்கல்லூரிகள் அண்மித்து இருக்கும் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டு, வளாக அந்தஸ்த்தைப் பெற்றதன் பயனாக டிப்ளோமா பாடநெறியை முடித்த மாணவர்கள், மேலும் இரண்டு ஆண்டுகள் தங்கள் கல்வியைத் தொடர்ந்து பட்டங்கள் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டன.

இதன் பிரகாரம் நாட்டிலுள்ள சகல இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் திருக்கோணமலையிலோ கணக்கியலும் நிதியியலும் பிரிவு மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர ஆங்கிலப் பிரிவு மாணவர்கள் அண்ணார்ந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

97ம் ஆண்டு ஆரம்பம் முதல் 'இன்று தொடங்கும் நாளை தொடங்கும்' என இம் மாணவர்கள் கல்விக்காகக் காத்துக் கிடக்கிறார்கள். தமிழ் மாணவர்களின் கல்வி பாழாகுவதற்கு அரசுமட்டுமே காரணம் என்று இனிச் சொல்லலாமா?

# மயானம் தரைமட்டம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி-பதுளை வீதியிலிருந்த இராணுவ மற்றும் புளொட் இயக்க முகாம்கள் மே 25ம் திகதி நள்ளிரவு புலி இயக்கத்தினரால் தாக்கப்பட்டது தெரிந்ததே.

அத்தாக்குதல் நடைபெற்றதின் பின்னர் அந்த முகாம்களைச் சூழ முன்னரங்கப் பகுதியிலிருந்த பற்றைக்காடுகள் புல்டோசர் இயந்திரம் கொண்டு துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

கறுத்தப் பாலத்தின் அருகிலிருந்த செங்கலடி மயானமும் தரை மட்டமாக்கப்பட்டுள்ளது. மயானத்தில் இருந்த நினைவுப் பெயர்ப் படிகங்களும், மற்றும் கட்டடங்களும் புல்டோசரினால் இடிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

தொடரும் யுத்தம் மரணித்தோர் அமைதியாகத் துயிலும் மயானத்திற்கும் சென்று அமைதியைக் குலைத்து கொடூரத் தன்மையைக் காட்டி நிற்கிறது.

# இன்னொரு படகு

மூதூர்-திருமலை படகுச் சேவையில் ஈடுபடும் இரு படகுகளும் ஓரளவு திறம்பட சேவையாற்றுகின்றன. ஆனாலும் இயந்திரக் கோளாறுகளினால் ஒரு படகு மட்டும் சேவையிலீடுபடும்போது பிரயாணிகளின் நிலமை பரிதாபத்திற்குரியதாகின்றது.

கடல்வழிச் சேவையை மேற்கொண்டிருக்கும் மூதூர்-ப.நோ.கூ.சங்கம் இன்னுமொரு இயந்திரப் படகினைப் பெற்று சேவையிலீடுபடுத்தினால் சங்கத்திற்கு வருமானமும் பிரயாணிகளின் போக்குவரத்து கஷ்டங்களும் ஓரளவு திருப்தியாகலாம்!!

மனு-மிக்கேல், மூதூர்-07

# ஊரவும் மறுக்கும் பேருந்து

(திருமலை நிருபர்)

முன்னர் பொகவந்தலாவை நகரத்திலிருந்து லெமினோன், பெத்தராசி ஆகிய தோட்டங்களுக்கு ஹட்டன் பேருந்து போக்குவரத்து நிறுவனத்தால் பேருந்து சேவை ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் கடந்த ஒரு வருடமாக இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு அரசியலே காரணம் என்று இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். மேலும் இப்பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால், மேற்படி தோட்டங்களிலிருந்து சென்று பொகவந்தலாவை நகரத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு கல்வி கற்கப் போகும் மாணவர்கள் பெரிதும் அல்லல்படுகின்றனர்.

மேற்படி தோட்டங்களுக்கு பொகவந்தலாவையிலிருந்து 10 கிலோமீட்டர் தூரம் தானுள்ளது. பேருந்து கட்டணமாக 5 ரூபா எடுக்கப்பட்டது. ஆனால் தற்போது தனியார் வாகனங்களில் சென்றுவர 30/= ஒரு நாளைக்கு எடுக்கிறார்கள். இதனால், இப்பகுதியிலுள்ள வருமானத்தில் தாழ்நிலையில் இருக்கும் பெற்றோர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவை எடுத்தியம்பியும் எவ்வித பலனுமில்லை. இதனால் இம்முறை நடைபெறயிருக்கும் மாகாண சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் பாடு திண்டாட்டமாகயிருக்கும். ஏனெனில், இப்பகுதி வாழ் மக்கள் விரக்தியின் விளிம்பிலுள்ளனர்.

சாதாரண இத்தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய லாயக்கு இல்லாதவர்களுக்கு ஏன் பதவி? என்று இப்பகுதி வாழ் மக்கள் வினாத் தொடுத்துள்ளனர்.

சோ. ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.

# ஆபத்தான பாலம்
# அச்சமான பயணம்

(மன்னார் நிருபர்)

மன்னார் பெருநிலப்பரப்பையும், மன்னார் தீவையும் இணைத்து கடலின் மேலால் போடப்பட்டிருக்கும் தற்காலிக பாலம் பாதுகாப்புக் குறைந்ததாகக் காணப்படுகின்றது.

இதனால் எந்த வேளையிலும் பாரிய விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மன்னார் பிரதான பாலம் 1990 ஜூன் மாத நடுப்பகுதியில் புலிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

1991ஆம் ஆண்டு இப்பாலம் தற்காலிகமாக போடப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. எனினும் இப்பாலத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள பல இரும்புக் கம்பிகள் துருப்பிடித்துக் கொட்டுகின்றன.

ஏற்கனவே இரு இராணுவ வாகனங்கள் இப்பாலத்திலிருந்து விலகி கடலுக்குள் விழுந்துள்ளன. தற்போது தினசரி நூறு வாகனங்கள்வரை இப்பாலத்தைக் கடந்து செல்கின்றன.

பொதுமக்களை ஏற்றிக்கொண்டு தினசரி 25க்கும் மேற்பட்ட பஸ்கள் இப்பாலத்தினால் சென்று வருவதால், திடீரென பஸ்கள் கடலினுள் விழக் கூடுமென்ற அச்சம் தோன்றியுள்ளது.

இப்பாலத்தின் அவல நிலையை சம்பந்தப்பட்ட அமைச்சு கவனிக்குமா?

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திரு. சின்னவர் சின்னத்துரை

மலர்வு: 01.07.1930
உதிர்வு: 24.05.1998

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்' அவனியில் நாம் மேன்மைபெற்று, வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே! பேரன்பு பாசத்திற்குரிய எம் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மை என்றும் மாறாத்துயர் கொள்ள வைத்துச் சென்றாலும், உங்கள் இனிய நினைவுகள் எங்கள் உள்ளங்களில் என்றென்றும் மாறாது நிலைத்து நிற்கும்!

எமது குடும்பத் தலைவரது துக்கச் செய்தி கேட்டு ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அவரது தற்காலிக இல்லத்தில் 23.06.1998 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற 31ம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய குலதெய்வமான வைரவப் பெருமான் தான் போற்றி வணங்கிப் பிரார்த்திக்கும்,

தற்காலிக முகவரி:
எஸ். தங்கராஜா, 330, கெரமல் மாவத்தை,
பள்ளியவத்தை, ஹெந்தலை, வத்தலை.

நிரந்தர முகவரி:
கம்மலையடி, சந்திலிப்பாய்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

தகவல்: திருமதி சின்னத்துரை


## SRI LANKA IMPORT - EXPORT
AND CONTAINER SERVICE
RESONABLE RATES FOR CONSOLIDATED CARGO'S
FROM SWITZERLAND TO COLOMBO

அடுத்த கொள்கலன் :27 ஆடி மாதம் 1998 சுவிற்ஸர்லாந்தில் இருந்து
15ஆவணி மாதம் 1998 அன்று கொழும்பை வந்தடையும்.

**Zurich இருந்து கொழும்பு வரைக்கான செலவு SFR : 120.–**

வெற்றுப் பெட்டிகள் எங்களால் விநியோகிக்கப்படும்.
வேறு அளவுகளுக்கும், தூரத்திற்கும் மற்றும் தகவல்களுக்கும் தயவு செய்து எங்களை தொடர்புகொள்ளவும்.

நன்கு பரிச்சயமான Aitken Spence என்ற இலங்கையில் உள்ள எங்கள் முகவர் மூலம் உங்களுடைய கார்கோ கொழும்பு வந்தவுடன் கவனத்துடன் கையாளுவார்கள். (இலங்கையில் பணம் செலுத்தமுடியும்)

**எஸ் கார்கோ பிரைவேட் லிமிடெட்**
315, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02. Phone: 1-330580-4 fax: 1-445589

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
உதிதா காரியவாசம் தொலைபேசி: 079 229 53 10



## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களபபு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

நன்மை பயப்பவை மட்டுமே செய்துதரப்படும்.



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218



## திருமணத் தடங்கலா?

கருங்காலிச் சோலை ஸ்ரீ கல்யாண முருகனை வேண்டிக் கொள்ளுங்கள், நல்ல இடத்தில் நல்ல முறையில் திருமணம் நடைபெறும் இது சத்தியம்.
= திருமுருக கிருபானந்தவாரியார் =

இயற்கை வளங்கள் நிறைந்த இவ்வழகிய ஸ்தல முருகன் எல்லா குறைகளையும் நீக்கி சகல செல்வங்களும் அருள்கிறான் என்பதில் ஐயமில்லை.
= காளிகாம்பாள்சிவாச்சாரியார், சென்னை =

தேனாய் இனிக்கும் இவ்வாலய வஜ்ர தீர்த்தம் எல்லாப் பிணிகளுக்கும் சிறந்த ஔஷதம்.
= பித்துக்குளி முருகதாஸ் =

இவன் அற்புத அழகன் = புலவர்கீரன் =

இப்பெருமைமிகு ஆலய கும்பாபிஷேக திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது 40 லட்சம் வரை செலவு ஆகலாம். ஒவ்வொருவரும் இதில் பங்குகொண்டு பயனடைய நல்ல வாய்ப்பு. தாங்கள் விரும்பும் நன்கொடையை அனுப்ப வேண்டிய விலாசம்:-

**Sri Kalyana Murugan Thiruppani Committee**
**174, Messenger Street, Colombo-12. Tel: 431222**
**Bankers : HNB Pettah Colombo A/c # 71709**

தங்கள் பெயர் நட்சத்திரம் சொல்லி நித்தியம் அர்ச்சனை செய்து மாதம் ஒரு முறை பிரசாதம் அனுப்ப மாதம் ஒன்றுக்கு (வெளிநாடு) ரூ. 100/= வருடத்திற்கு ரூ 1200/= (இலங்கை) மாதம் ரூ. 50/= வருடத்திற்கு ரூ 600/=

அறங்காவலர், ஸ்ரீ கல்யாண முருகன் திருக்கோவில், கருங்காலிச்சோலை, முந்தல், புத்தளம். ஸ்ரீலங்கா.



## RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
## ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்



(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணை யானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.


**500 gram 300/= 250 gram 150/=**
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

**Ayur Dr. K. ASivasubramaniam**
**முருகானந்த வைத்தியசாலை**
G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட்,
மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11



## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET,**
**MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




படிப்பகம்

www.padippakam.com

# கைக்கு எட்டமுடியாத கனி

**மா**ங்குளத்தின் இரு புறத்தாலும் முன்னேறுவதற்கு படையினர் பலத்த முயற்சி செய்து வருவதாக படைத்தரப்பு வெளியிடும் செய்திகள் கூறுகின்றன.

20.06.98 சனி முதல் மூன்று நாட்கள் பாரிய மோதல் நிகழ்ந்துள்ளது. இருமுனைகளில் முன்னேறிய படையினருக்கும் புலிகளுக்கும் இடையே பலத்த மோதல் வெடித்தது.

புலிகள் தரப்பில் பலியான பதின்மூன்று பேரின் உடல்களை தாம் கைப்பற்றியதாக நடவடிக்கை தலைமைச் செயலகம் கூறியிருக்கிறது.

இம் மோதல்களில் தமது தரப்பில் 38 பேர் பலியானதாக புலிகள் கூறியுள்ளனர். படைத்தரப்பு இழப்புக்கள் பற்றி அவர்கள் கூறியதை தணிக்கை காரணமாக வெளியிடவில்லை.

இச் சண்டைகளில் தமது தரப்பு ஆட்பல, படைக்கல, கனரக வாகன இழப்புக்கள் பற்றி படைத்தரப்பு உடனடியாக எதுவும் கூறவில்லையே!

பத்திரிகையாளர் மாநாட்டில் கூறப்படும் கணக்குகளிலும் ஆட்பல இழப்பை மட்டுமே அறியக்கூடியதாக உள்ளது.

சுதந்திர ஊடகங்களின் வாயை அடைத்துவிட்டு தாங்கள் கணக்குகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இன்றைய அரசு எத்தனை குழப்பமான அணுகுமுறைகளைக் கொண்டிருக்கிறது என்பது தணிக்கை விடயத்தில் தெள்ளத் தெளிவாகியுள்ளது.

அரச வானொலியே அரசின் செய்தித் தணிக்கையை தகர்த்தெறிந்து வருகிறது. பி.பி.சி. செய்திகள் சிங்களத்திலும் தமிழிலும் களநிலவரத்தை அவ்வப்போது அவிழ்த்து விடுகின்றன.

படையினரின் மனநிலையை சோர்வில்லாமல் வைத்திருக்க, எதிரிக்கு தகவல் செல்லாமல் தடுக்க என்று தணிக்கையை நியாயப்படுத்த கூறப்பட்ட காரணங்கள் எல்லாம் அரச வானொலியூடாகவே பொய்யாக்கப்பட்டுவிட்டன.

பி.பி.சி. சிங்களச் செய்தியை களமுனையில் உள்ள படைவீரர்கள் கேட்கின்றனர். புலிகளும் கேட்கின்றனர். இலங்கை வானொலி ஊடாக ஒலிபரப்பாவதால் முன்பைவிட தெளிவாக செவிகளில் பாய்கிறது.

முன்பாவது ஒலிபரப்பில் குறுக்கீடுகள், காலநிலைக் கோளாறுகள் காரணமாக பி.பி.சி. செய்திகள் இடைக்கிடையே சரியாகக் கேட்பதில்லை. இப்போது படு கிளியர்.

ஆக, அரசின் தணிக்கை படு தோல்வி கண்டுள்ளது. உள்ளூர் செய்தி ஊடகங்களின் அதிருப்தியைச் சம்பாதித்ததுதான் கண்ட பலன்.

எந்தவொரு விடயத்திலும் தெளிவான அணுகுமுறையை கடைப்பிடிக்க தவறுவதால் அரசு உண்மைகளை விட்டு வெகு தூரம் விலகிச் செல்லத் தொடங்கியுள்ளது.

17.06.98 அன்று பி.பி.சி. ஆகாயத் தகவல் ஒன்றை செய்தியில் கூறியது. அது பறந்து வீழ்ந்தது. புலிகலின் குரலிலும் அச்செய்தி ஒலிபரப்பானது. அரசின் காதில் அச் செய்தியும் விழாமல் இருந்திருக்காது. மறுப்பே கூறப்படாமல் மௌனம் ஏன்?

அதேபோல சனிமோதல் தொடர்பாக படைத்தரப்பு இழப்புப் பற்றி புலிகளின் குரல் வெளியிட்ட தகவலையும் 22.06.98 அன்று இரவு பி.பி.சி அரச வானொலி ஊடாக ஊரறியச் சொன்னது. ஆனால் அரச வானொலியின் சொந்த செய்தி வழமைபோல தனது பாணியில் செய்தி கூறி தனது நம்பகத் தன்மையை மேலும் கட்டிக்காத்து கெட்டிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

மாங்குளம் மேற்கே புலிகளின் பதுங்கு குழிகள் கைப்பற்றப்பட்டன. மாங்குளம் கிழக்கே பதுங்கு நிலைகள் தாக்கப்பட்டன என்று கடந்த ஒருவாரமாக நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தகவல்களை வாரி வழங்கி வருகிறது. பத்திரிகைகளிலும் அவை வெளியாகி வருகின்றன.

எவ்விடம் எவ்விடம், புளியடி புளியடி என்று கண்ணை மூடிக்கொண்டு போய் தொட்டுவிட்டுப் பார்த்தால் நாட்டுக் கதைபடித்தான். அடடே வேம்படி.....

'ஜயசிக்குறுய்' இரண்டாம் வருட நகர்வுகள் ஆரம்பமாகி ஒரு மாதம் பூர்த்தியாகப் போகிறது.

இந்த மாதத்தில் 19.06.98 வரை கூறிய தகவலின்படி பார்த்தால்கூட காணாமல் போனதாக கூறப்பட்டோர் உட்பட 307 படையினரை இழந்துள்ளனர். 14 பேர் உயர் அதிகாரிகள். 1600 பேர் வரை காயமடைந்துள்ளர். 63 பேர் அதிகாரிகள். 20 நாட்களுக்குள் இத்தனை இழப்புக்கள் நடந்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அரசு கூறுவதைவிட படையினரது இழப்பு பன்மடங்கு என்று கூறிய செய்தி இங்குள்ள பத்திரிகைகளில் வெளியாகியது. அதனையும் புறக்கணிக்க முடியுமோ?



ரணில் கூறியது தவறு, மிகைப்படுத்தல் என்றால் சூடாக பதில் கொடுக்க, சவால் விட ஆளும் கட்சியில் பேச்சாளர்களுக்கா பஞ்சம்?

ரணில் முன்னாள் பிரதமர். இந்நாளிலும் சகல மட்டங்களோடும் தொடர்புகள் வைத்திருப்பவர்.

ஆனால் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் மட்டும் என்ன யோக்கியம்? 50 பேர் பலியானால் பத்துப்பேர் என்று கூறி மீதி 40 பேர் மரணத்தை இராணுவ இரகசியம் என்று நீங்கள் மறைக்கவில்லையா? என்று அவரிடம் கேட்கலாம். ஆனால் கேட்கவில்லை.

எங்களிடமிருந்துதான் நீங்கள் கற்றுக் கொள்கிறீர்களா? என்று பதில் கேள்வி கேட்டால் என்ன செய்வது?

ஐ.தே.கட்சி அரசு கூறும் இழப்பு விபரங்களை மூன்றாம், நாலாம் வாய்ப்பாடு கொண்டு பெருக்கிப் பார்க்கவேண்டும் என்று அன்றைய எதிர்க்கட்சி கூறிவந்ததை யார்தான் மறப்பார்கள்?

இன்று ஐ.தே.கட்சி எதிர்க்கட்சி, பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களே. அப்படிப் போகிறது அரசியல் போட்டித் தெறிப்புக்கள்.

இந்த நாட்டில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் ஒரு காலமும் ஒன்றுபடப் போவதில்லை. ஒன்றுபடும் என நம்புவோர் முடர்களே! அல்லது மக்களை மூடராக்க முற்படுவோரேயாகும்.

ஆனால், ஒன்றுபடுவதைவிட இரு தரப்புக்கும் இடையே எந்தளவுக்கு மோதல் தீவிரமாகிறதோ அந்தளவுக்கு நன்மைகள் உள்ளன.

பல பொய்கள் அம்பலமாகும். மக்கள் முழு முட்டாள்களாகாமல் இருக்கலாம்.

எதிர்க் கட்சியின் வாயை மூடச் செய்ய அரசு முதலில் தமிழ்க் கட்சிகளது உதவியை நாடியது.

அரசுக்கு சேவகம் செய்வதை தலைமேற்கொண்ட கூட்டணி பிரமுகர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியில் இருந்து எதிர்க்கட்சி நழுவிக்கொண்டது.

இப்போது அடுத்த கட்ட முயற்சியில் ஆளும் தரப்பு குதித்துள்ளது. யுத்த வெற்றி என்பதை சிங்கள மக்களின் உணர்வு சார்ந்த இலட்சியமாக கருதச் செய்தல் மூலம், யுத்தம் தொடர்பான மாற்றுக் கருத்துக்கள், எதிர்க் கட்சியின் விமர்சனங்கள், அம்பலப் படுத்தல்கள் என்பவற்றை அந்த இலட்சியத்துக்கு எதிரானதாக காட்டப்பார்க்கிறார்கள்.

அதற்கான முயற்சிதான் பௌத்த குருமாரிடம் இருந்து பெறப்பட்ட மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அறிக்கை.

பௌத்த குருமாரின் கட்டளையை ரணில் மீறினால் சிங்கள இனத்திற்கு எதிரான ஒருவராக கருதப்படுவார் என்று ஆளும் தரப்பு நினைக்கிறது. இப்படி நினைக்கும் ஆளும் தரப்பு பௌதத குருமாரின் எணணத்துககு மாறான தீர்வை தரத் துணியும் என்று நம்புவதைப் போன்ற மூடத்தனம் உலகில் வேறு இல்லை.

இந்த ஆகஸ்ட் மாதத்தில் தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி முடிக்க ஆளும் தரப்பு ஆவலாக இருந்தது.

வெற்றிமீது வெற்றி வந்து எம்மைச் சேரும் என்று நம்பியிருந்தனர்.

கடந்த ஒரு மாதத்திற்குள் அந்த நினைப்பு பொய்த்திருக்கிறது என்றால் காரணம் என்ன? காலநிலை என்ன? என்பதெல்லாம், ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் மறையாத சூரியன் போல தெரிகிறதல்லவோ.

இதற்கிடையே மட்டக்களப்பிலும் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகரையை பிடித்துவிட்டதாக கூறப்பட்டது. பிடித்தது உண்மைதான். அடுத்தது என்ன?

விடுதலைப் புலிகளுக்கு வாகரை ஒரு முக்கிய தளம். சுலபமாக மூதூர் சென்று, அப்படியே திருமலை செல்லலாம். குறுகிய தூர கடல் வழிப்பாதை.

ஆனால் வேறு கடல் வழி, தரைவழி பாதைகளும் வடக்கு-கிழக்கு போக்குவரத்துக்கு உள்ளன.

அரச தகவல் தொடர்பு சாதனங்கள் மாங்குளத்தை சில நாட்கள் மறந்துவிட்டு, வாகரை பற்றிக் கூறிக்கொண்டிருந்தன.

அவலை நினைத்து உரலை இடித்துவிட்டு, இடி எப்படி என்று கேட்பது போல நாட்டு நிலவரங்கள் உள்ளன. இதனால் அவலும் இடிபடாது. நோக்கமும் நிறைவேறாது என்பார்கள் ஊரில்.

வாகரையில் 33 புலிகள் பலி. பலமுகாம்கள் தரைமட்டம் என்று படைத்தரப்பால் மிகத் துல்லியமான கணக்கு கூறப்பட்டுள்ளது. ஆனால் உடல்கள் கைப்பற்றப்பட்டதாக கூறவில்லை.

சந்திர மண்டலத்துக்கு விட்ட ஏவுகணை சரியாகப் போய்ச்சேர முடியவில்லை என்பதால், மக்களின் கவனத்தை திசைதிருப்ப பூமி அதிர்ச்சி ஏற்படுத்தலாம் என்றானாம் ஒரு விஞ்ஞானி.

நாட்டு நடப்புக்களும், நகர்வுகளும் அப்படித்தான் இருக்கின்றன.

முன்வைத்த காலை பின்வைக்க முடியாது என்று ஒரு தனிநபர் கூறினால் அது அவரது தனிப்பட்ட கௌரவப் பிரச்சனை.

ஒரு அரசாங்கமோ, அரசியல் கட்சியோ அப்படிக் கூறுமானால் அது மக்களை, நாட்டை பாதிக்கும் பிரச்சனை. கொடுத்த விலை, கொடுக்கப்போகும் விலை என்பதை அறிந்து நிதானமாக சிந்திப்பதே நல்ல ஆட்சி முறையின் பண்பு.

அதைவிடுத்து என்ன விலை கொடுத்தும் கனி பறிப்போம் என்று நின்றால் காலம் கடந்தபின் கனி கைக்கு கிடைத்தால்கூட அது அழுகிய கனியாகவே கிடைக்கும்.

இன்றைய நடப்புப்படி ஆளும் தரப்புக்கு அழுகியகனி கிடைப்பதுகூட உடனடி சாத்தியமில்லை.

கனிக்கு எறிவதாக எண்ணிக்கொண்டு எல்லோர் தலையிலும் கல்லைப் போட்டு கொண்டிருப்பது செங்கோல் முறையல்ல. கனியை தவிர மற்றெல்லா இடங்களிலும் கல்லுப்படும் சுற்றி சுற்றி எந்த திசையில் நின்று எறிந்தாலும் பழுத்த கனி கைக்கு எட்டுமா?

மாம்பழம் கிடைக்கவில்லை என்பதால் மறு கரையில் உள்ள கொய்யச் சுகமான தோடம் பழத்தை கையில் பிடித்து துள்ளுவது பள்ளிப் பருவ விளையாட்டு. அதையே நாட்டு நடப்பில் விளையாடினால் நஷ்டம் யாருக்கு? பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகும்.

மாங்குளம் சண்டை, வாகரையை கைப்பற்றியாகிவிட்டது. மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்பு முயற்சி. படையினர் பலி. புலிகள் பலி. இப்படியே சுற்றி சுற்றி சுப்பரின் கொல்லைக்குள் நின்றது போதும்.

மனம் திறந்து நேர்மையான தீர்வுக்கு அரசு தயாராகி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றை நாடினால் என்ன?

மூவின இளம் தலைமுறையினரதும் குருதியையும், உடல் உறுதியையும் காப்பதற்கு தேவையானது அதுவே.

இதனை எழுதும்போதுகூட ஆம்புலன்ஸ்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஒலிகள் செவியில் விழுகின்றன. அந்த ஒலிகூட ஆளும் தரப்பை விழிக்க செய்து கிழக்கு வானை வெளுக்கச் செய்யும் முயற்சிகளுக்கு தூண்டுவதாக தெரியவில்லையே. தூங்குவதுபோல நடிப்போரை தட்டி எழுப்புவது கடினம்.

▫▫

**செ**ன்றவாரம் மின்மாற்றிகள் மற்றும் தொலைத் தொடர்பு கோபுரத் தகர்ப்புகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தோம்.

கல்முனை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலைய குண்டு புலிகளால்தான் வைக்கப்பட்டது. ஆனால் விசேஷ அதிரடிப் படைமீது சந்தேகம் கிளப்பி புலிகள் வேடிக்கை பார்க்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா.

அதன்பின்னர் கிழக்கில் ஒலுவில் தொலைத் தொடர்பு நிலையமும், ஏறாவூர் தொலைத் தொடர்பு கோபுரமும் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

ஏறாவூர் தொலைத் தொடர்பு கோபுர தகர்ப்பில் இரு புலிகளும் பலியாகி உள்ளனர். ஒரு முகாம் தாக்குதல் பாணியிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

—★—

**ம**ன்னாரில் சாம் 7 ரக ஏவுகணை படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக படை வட்டாரங்கள் கூறியதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

கண்ட இடத்தில் எல்லாம் ஒளித்து வைக்கும் அளவுக்கு புலிகளிடம் சாம் 7 ரக ஏவுகணைகள் புளுத்து விட்டதோ? போகட்டும், அது எத்தனை பெரிய சமாச்சாரம். உடனடியாக தொலைக் காட்சியில் காண்பித்திருந்தால், மக்கள் பார்த்திருப்பர் அன்றோ!

அதுசரி, புலிகளிடம் இருப்பது ஸ்ரிங்கர் ஏவுகணைதான் என்பதை அறிந்துவிட்டதாக முன்னர் யார் யாரோ சொன்னதாக ஞாபகம் வருகிறது. ஒன்றுமே புரியவில்லை உலகத்திலே. ■

நா
ர
த
ர்

## அங்கு விட்டனர்–இங்கு பிடித்தனர்

**போ**ர் அலசலைவிட கிரிக்கெட் அலசல் சுவாரசியமாக இருக்கும்தானே.

19.06.98 அன்று மீண்டும் சிறீலங்கா, இந்திய அணிகளுக்கிடையே மோதல்.

முதலில் துடுப்பு எடுத்தாடினால் தமக்கு சாதகம் என்று இப்போதெல்லாம் சிறீலங்கா அணியினர் நினைக்கிறார்கள். முன்னர் மறு அணிகள் அப்படி நினைத்தன.

வெற்றி நிச்சயம் என்று களம் இறங்கிய சிறீலங்கா அணி முதலில் சில ஓட்டங்களை குவித்தது. பல திசைகளில் பந்தை விரட்டி மறு அணிக்காரர்களை ஓடித்திரிய வைத்து சலிப்பூட்டுவது துடுப்பாட்ட தந்திரம். மளமள வென்று ஓட்டங்களை குவித்து மறுதரப்பை அசத்த முயன்றது சிறீலங்கா அணி.



களத் தடுப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் நின்ற திசையில் அல்லாமல் வேறு திசையில் பந்தை ஊடறுத்து செலுத்தும் விதமாக துடுப்பை சுழற்ற முயன்றனர்.

ஆனால், சிறீலங்கா அணியுடன் பல தடவை மோதிய அனுபவம் கொண்ட அணி என்பதால், எல்லைக் கோட்டை தொடாமல் பந்தை தடுத்து நிறுத்துவதிலேயே மறு அணி கூடிய கவனம் செலுத்தியது.

ஆங்காங்கே தட்டிவிட்டு ஒரு ரன், இரு ரன் என்று ஓடி ஓடி ரன் சேர்ப்பதை தடுப்பதைவிட, நான்கு திசையிலும் எல்லைக் கோட்டை நெருங்க விடாமல் தடுக்கும் வகையில் பலமான தடுப்பு ஏற்பாட்டை கப்ரன் செய்திருந்தார். களம்பல கண்ட கப்ரன் அல்லவா.

முதலில் ஜெயசூர்யா அவுட்டானார். பின்னர் கலுவித்தாரன எதிர்த்தரப்பு பீல்டர்களை உளவறிபவர்போல அவர்களது தலைக்குமேலாக பந்தை பறக்கவிட, அதனை குறிவைத்து பாய்ந்தார் அகர்கர். குறி தப்பவில்லை. அதன் பின்னர் அதிரடி ஆட்டம் பின்னடைந்தது. அதன்பின்னர் ஆட்டம் சூடுபிடிக்கவில்லை. தற்காப்பு ஆட்டம் ஆடினர். மொத்தம் 243 ரன்கள் பெற்றது சிறீலங்கா அணி.

பின்னர் ஆடத் தொடங்கிய இந்திய அணி எடுத்த எடுப்பிலேயே ஓட்டங்களை குவிக்கத் தொடங்கியது. டெண்டுல்கரின் அபார ஆட்டம் பிரமிக்கச் செய்தது.

வெற்றிபெறவேண்டும் என்ற உத்வேகத்துடன் ஆடிய இந்திய அணி எட்டு விக்கெட்டால் வென்றது.

சிறீலங்கா அணிக்கு முதற்போட்டியில் வெற்றி உறுதி என்று நினைத்ததுக்கு மாறாக நிலவரங்கள் இருந்தன. எனினும் ஞாயிறு அன்று நியூசிலாந்துடன் மோதி வெற்றியைக் கைப்பற்றிய செய்தியை பெரிதாகக் கூறி திருப்தியடைந்தனர் சிறீலங்கா அணிப் பிரியர்கள். ஆனால் முதற் தோல்வியுடன் இந்த வெற்றியை ஒப்பிட முடியுமா?

நியூசிலாந்து அணி எதிர்த்து போராட முற்பட்டதுபோல அன்று தெரியவில்லை. அடுத்த போட்டிகளில் கவனிக்க விட்டுப் பிடிக்கிறதா என்பது போகப் போகத் தெரியும். போட்டிகள்தான் இன்னமும் முடியவில்லையே.



## அதிரடி அய்யாத்துரை

***கொழும்பில் பேராசிரியர்*** ஒருவர் ரெண்டு எழுத்தாருடன் பேசுவது தொடர்பாக கூட்டம் நடத்தியவராம். கூட்டத்தில் கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவரது நிலைப்பாட்டை பேராசிரியர் விமர்சித்தவராம். தென் கிழக்கு அலகு தொடர்பாக கிழித்துப் போட்டார். அப்போது தனக்கும் அதற்கும் சம்பந்த மில்லாதது மாதிரி கேட்டுக்கொண்டு இருந்தாராம் கூட்டான கட்சியின் ஞானப்பால் உண்டவர்.

***கொள்ளுப்பிட்டியில்*** மேலிட வாசஸ்தலத்துக்கு அருகே இருந்த தமிழ்க் கடை ஒன்று இரவோடு இரவாக உடைக்கப்பட்டது தெரியும் தானே? அந்த இடமருகே தமிழ்க் கடை இருப்பது பாதுகாப்புக்குக் கேடு எனக் கருதித்தான் உடைக்கப்பட்டதாக சந்தேகம் எழுந்ததும் உண்மை. ஆனால் பயங்கரக் கூட்டமாக காவி உடையினர் அப்பகுதிக்குள் புகுந்து தூதரகம் முன்னால் தூள் கிளப்புவது மட்டும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையோ? அந்தளவுக்கு நம்பிக்கையாக்கும்!

***யாழில் புதிதாக*** பொறுப்பை ஏற்கப்போகும் பிதாவைக் கொழும்பில் கூடுதல் நாளைக் கழிக்குமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம். "பாதுகாப்பு இருந்தால் நகருக்குள் வந்து அவை ஒன்றும் பண்ண இயலாது?" என்று வேறொரு வட்டாரம் அவரைக் கொப்பில் ஏற்றிவிட்டிருக்கிறதாம்.

***யுத்த நிலவரம்*** பற்றி பௌத்த மதகுருமாருக்கு விளக்கிக் கூறப்பட்டதாம். பேஷா கூறட்டும். அப்படியே இந்து, கிறிஸ்தவ குருமாருக்கும் விளக்கிக் கூறியிருக்கலாமே? ஏன்கூறவில்லை? யுத்தத்தின் நிறம் என்ன? மஞ்சளோ? இன்னும் நிறம் தெரியாமல் திறமாக ஒத்துழைக்கும் ஆட்கள் திருந்தினால் சரி.

***இந்து மதகுருமாரைச்*** சந்திக்க மேலிட சக்தியானவர் சம்மதம் கூறிவிட்டு சறுக்கினார் அல்லோ? அதற்குக் காரணம் இல்லாமல் போகுமோ? பௌத்த குருமாரிடம் அறிக்கை பெற ஏற்பாடுகள் நடந்த நேரம் அது. இந்து மதகுருமாரை சந்திச்சதை கேள்விப்பட்டு கையொப்பம் போட மறுத்தால் என்ன செய்யிறது? அதுதான் பின்னர் ஒருநாள் பார்க்கலாம் என்று அன்று தவிர்க்கப்பட்டதாம்.

***மலையக தனித்துவத் தலைவருக்கு*** ஜெயலலிதா முதல்வராக இருக்கும்போது சுயநலம் தெரியவில்லை. இப்போதுதான் தெரிகிறதாக்கும். அப்போது மட்டும், 'அம்மா கூப்பிடுகிறா' என்று தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு பறந்துபோனவை. இங்குள்ள தமிழறிஞர்களை புலிகள் என்று கருதி அம்மா புறக்கணிச்சதுகூட பெரிசாக அப்போது தெரியேல்லை. சுயநலத்தோடு இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுக்கிறாராம் ஜெயலலிதா. அரசியல் என்றாலே இப்போது சுயநலம்தானே? அது அம்மாவாக இருந்தால் என்ன, நம்ம ஐயாவாக இருந்தால் என்ன? கிடைக்கிற ஆதரவை இவர் ஏன் கெடுக்கப் பார்க்கிறார்?

***தேனகத்தின்*** ரெண்டு எழுத்தாரின் பகுதியில் திருவிழா நடந்தது. பக்தர்கள்போல உளவறியச் சென்ற தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர் இருவர் ரெண்டு எழுத்தாரால் பிடிக்கப்பட்டு சாய்க்கப்பட்டனராம். மரத்தில் கட்டி தொங்கவிட்டதாகவும் தகவல்.

***இது மாம்பழச்*** சீசன். மாம்பழத்தை கண்டுபிடித்து வண்டு 'ரீங் ரீங்' என்று பறந்துவந்து வட்டமிடும். மாம்பழத்தில் விழுந்த வண்டு பற்றிக்கூற அனுமதி இல்லை. செல்லம்மா அடிக்க வருவா. பிறகு மாம்பழத்துக்கு கிராக்கி இருக்காதாம். இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி சந்தையில் போட்டு வித்துப்போடும் மனுசி. ம்... அது ஒருகாலம்! அந்த நாள் ஞாபகம்-வேறொன்றும் இல்லை!

***கிரிக்கெட் வர்ணனைக்கு*** கிடைப்பதோ கையளவு நேரம். அப்படியிருந்தும்கூட தரமான வர்ணனையாளர் கிடையாதோ? தாக சாந்திக்கு பத்து நிமிஷம் இருக்கும்போதே "தாக சாந்திக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டுள்ளது" என்று அறிவித்தார். பிழைக்காக வருத்தமும் தெரிவிக்கவில்லை என்று பார்த்தால், பிறகு பத்து நிமிஷத்தின் பின்னர் "இதோ மீண்டும் ஒரு முறை தாக சாந்திக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது" என்று காதுகளுக்கு பூத் தருகிறார். இலங்கை, இந்திய அணிகளுக்கிடையே நடந்த முதல் போட்டியில்தான் இந்த கூத்து. இதே அறிவிப்பாளர் டெஸ்ட் போட்டி வர்ணனையில் "இலங்கை அணி தோல்வியில் இருந்து தழுவிக்கொள்ள ஆடுகிறது" என்று பலமுறை கூறினார். பின்னர் நாமாக யோசித்துப் பார்த்தபோதுதான் புரிந்தது, 'நழுவிக்கொள்ள' என்பதைத்தான் அண்ணார் அப்படிச் செப்பியிருக்கிறார்.

***கலைஞரது*** பவளவிழாவில் சிலர் கூறிய கருத்து: "கலைஞர் எப்போது எழுதுகிறார், எப்போது தூங்கப் போகிறார் என்பதே தெரியாது." கலைஞர் புத்திசாலிதான். இந்தப் பழமொழியைப் பாருங்கோ.

"அரசியல்வாதி தூங்கக்கூடாது.
தூங்கினாலும்
கால்கட்டை விரலை
ஆட்டிக்கொண்டே தூங்கவேண்டும்!
இல்லாவிட்டால்
செத்ததாக நினைத்து
சந்தோசமாகப் புதைத்துவிடுவார்கள்!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

"பிரேமதாசா புலிகளிடம் ஏமாந்து விட்டார். புலிகளுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தார். இறுதியில் பிரபாகரன் அவரை ஏமாற்றிவிட்டார்."

மேற்கண்டவாறுதான் பிரேமதாசாவின் அரசியல் எதிரிகள் கூறிவருகின்றனர். இப்போதுகூட பொதுஜன முன்னணியினர் கூறுவதும் அதுதான்.

பிரேமதாசா பிரபாகரனை ஏமாற்றப் பார்த்தார் என்று கூறினால், பிரேமதாசாவுக்கு சிங்கள மக்களிடம் கெட்டிக்காரப் பட்டம் கிடைத்துவிடுமல்லவா.

## திரைமறைவில் பிரேமதாசா அரசு மேற்கொண்ட நகர்வுகள்



அதுதான் பிரேமதாசா ஏமாந்து விட்டார் என்று கூறத் தலைப்பட்டனர்.

ஆனால் உண்மை அதுவல்ல. பிரேமதாசா லேசுப்பட்ட ஆளல்ல.

இந்தியப் படையை வெளியேற்றுவது என்பது ஒரு பொதுநோக்கமாக இருந்த போது புலிகள் கேட்பதை கொடுக்கத்தான் வேண்டும். கொடுத்தார்.

புலிகளால் பெற முடிந்த ஆயுதங்களையே பிரேமதாசா அரசாங்கம் கொடுத்தது.

விமானங்களை சுட்டு வீழ்த்தும் ஆயுதங்களையோ, கனரக ஆயுத தளபாடங்களையோ தூக்கிக் கொடுத்துவிட வில்லை.

கெரில்லாப் போரில் பயன்படுத்தத்தக்க விதமான ஆயுதங்களே வழங்கப்பட்டன.

புலிகளுடன் பிரச்சனை தோன்றிய பின்னர் அதே ரக ஆயுதங்கள் ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் போன்ற இயக்கங்களுக்கும் வழங்கப்பட்டன. அவை பற்றிய விபரங்களை பின்னர் பார்க்கத்தான் போகிறோம்.

பிரேமதாசாவும் பிரபாகரன் தமிழீழத்தை கைவிட்டு விடுவார் என்பதை நம்பவில்லை.

பிரேமதாசா உரிமைகளைத் தருவார் என்பதை பிரபாகரனும் நம்பவில்லை.

இந்தியப்படைத்தலையீடு என்ற பொது எதிரிக்கு எதிராகவே அரசும், புலிகளும் தங்கள் சந்தேகங்களை ஓரத்தில் வைத்துக் கொண்டு இணைந்து செயற்பட்டனர்.

### இரகசிய ஏற்பாடுகள்

பிரேமதாசா மிகத் தந்திரமாக காய்களை நகர்த்த ஆரம்பித்தார்.

இந்தியப் படை வெளியேறிய பின்னர் புலிகளுடன் போர் மூண்டால் வெற்றி பெறத்தக்க இரகசிய ஏற்பாடுகள் திரை மறைவில் நடந்தன.

வவுனியாவில் இருந்த டென்சில் கொப்பேக்கடுவாவை வடபகுதிக்கான இராணுவ இணைப்பதிகாரியாக நியமித்தார் பிரேமதாசா.

டென்சில் கொப்பேக்கடுவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் தொடர்பு உடையவர் என்று கருதியோ என்னவோ அவரை பிரேமதாசாவுக்கு பிடிப்பதில்லை.

பிரேமதாசாவிடம் ஓர் குணம் இருந்தது. திறமைசாலிகளை தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் குணம்.

எந்தக் காரியத்தை எவர் மூலம் முடிக்கலாம் என்பதை அறிந்து அவரவரிடம் ஒப்படைக்கத் தெரிந்தவர்களே சிறந்த நிர்வாகிகளாகவும், தலைவர்களாகவும் விளங்க முடியும்.

பிரேமதாசா சிறந்த நிர்வாகி. சிறந்த மதியூகி.

புலிகளுடன் போர் மூண்டால் வடக்கே புலிகளை எதிர்கொள்ளக் கூடிய தளபதி டென்சில் கொப்பேக்கடுவதான் என்பது பிரேமதாசாவுக்கு தெரியும்.

அதன் காரணமாக தனக்குப் பிடிக்காத டென்சிலிடம் வடபகுதிக்கான இணைப்பதிகாரி பொறுப்பை ஒப்படைக்க பிரேமதாசா முன்வந்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ரஞ்சன் விஜயரத்ன பதவிவகித்தார். டென்சிலுடன் ரஞ்சன்தான் பெரும்பாலும் தொடர்புகளை வைத்திருந்தார்.

புலிகளுடன் போரை நடத்த வசதியாக பிரேமதாசா அரசு செய்த மற்றொரு பாரிய ஏற்பாடுதான் அநுராதபுரத்தில் இராணுவத்தளம்.

அநுராதபுரம் இராணுவ முகாமை விஸ்தரித்து, அதனை வடபகுதி யுத்தத்துக்கான வழிநடத்தும் தளமாக மாற்றும் காரியங்கள் துரித கதியில் நடந்தன.

அதற்கு முன்னர் அநுராதபுரம் இராணுவ தளத்தில் விமானங்கள் தரையிறங்க முடியாது. ஹெலிக்கொப்டர்கள் மட்டுமே சென்று இறங்க முடியும்.

சகல விதமான போர் நடவடிக்கைக் கும் ஏற்றவிதமாக அநுராதபுரம் இராணுவ தளம் மாற்றப்பட்டது.

இந்த இடத்தில் பிரேமதாசாவின் தந்திரத்தையும் பார்க்க வேண்டும்.

வவுனியா இராணுவத்தளத்தையே மேலும் விஸ்தரித்து, வடபகுதி போர் நடவடிக்கைகளை வழிநடத்தும் தளமாக அதனை மாற்றியிருக்கலாம்.

அவ்வாறு செய்திருந்தால் புலிகளுக்கு தெரியவரும். போருக்கான தயாரிப்பில் அரசு ஈடுபடுவதாகக் கண்டு புலிகள் முந்திக் கொள்வார்கள் என்பது ஒரு காரணம்.

வவுனியா தமிழ்ப் பிரதேசம் என்பதால் அங்கு இருப்பதைவிட சிங்களப் பிரதேசம் ஒன்றில் வழிநடத்தும் தளம் இருப்பதே நீண்டகால நோக்கில் பாதுகாப்பானது என்பது இன்னொரு காரணம்.

மேற்கண்ட தனது தந்திரங்கள் யாருக்குத் தெரியவராது எனப் பிரேமதாசா அரசு நினைத்ததோ, அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

பிரேமதாசா தயாராகிக் கொண்டிருக்கிறார். சரியான தருணத்தில் போரை ஆரம்பித்து நாம் முந்திக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து புலிகளும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

### ஜிகாத்தும் பொலிஸ் சேவையும்

பிரேமதாசா அரசு மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கை கிழக்கில் உள்ள புலிகளை உசுப்பிவிட்டது.

முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஜிகாத்தில் பயிற்சி பெற்றவர்கள் பொலிஸ் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டனர்.

ஜிகாத் அமைப்பின் நடவடிக்கை தொடர்பாக கிழக்கில் தமிழர்களிடம் மட்டுமல்லாமல், முஸ்லிம் மக்களிடம்கூட அதிருப்திகள் நிலவின.

தமிழ், முஸ்லிம் உறவைக் குலைத்து, கிழக்கில் சமூக மோதலைத் தோற்றுவிக்க அரசால் ஊக்குவிக்கப்பட்டதே ஜிகாத் அமைப்பாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்து பின்னர் அரசின் தேசிய புலனாய்வுப் பிரிவு உளவாளியாக மாறியவர் மவுசூக். இவரை உளவுப் பிரிவில் இணைத்தவர் எஸ்.பி. மஜீத். (தற்போது பொலிஸ் சேவையில் இருந்து விலகி யூ.என்.பி. அமைப்பாளராக இருக்கிறார்)

மவுசூக் மட்டுமன்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் பயிற்சி பெற்ற இன்னொரு முஸ்லிம் இளைஞரும் ஜிகாத்தில் முக்கிய பாத்திரம் வகித்தார்.

ஜிகாத் இயக்கத்தினரை பொலிஸ் சேவையில் சேர்ப்பது கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவுகளை சீர்குலைப்பதற்கும், மோதல்களைத் தூண்டுவதற்குமான சதியே என்று புலிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

### தலைமையகம்

இதற்கிடையே இராணுவ நடவடிக்கைக்கான தலைமைச் செயலகம் என்னும் புதிய கட்டமைப்பை முதன் முதலில் உருவாக்கியது பிரேமதாசா அரசு.

போரை ஒழுங்கமைத்து நடத்தவே அந்த ஏற்பாடு.

'இனியும் பொறுத்தால் அரசு முந்திக் கொள்ளும்' என்று பிரபாகரன் போருக்குத் தயாரானார்.

பிரபாகரன் வழக்கமாகக் கூறும் வார்த்தைகளையே அக் கட்டத்திலும் கூறினார்:

"துப்பாக்கி வைத்திருப்பவர்களில் எவன் முந்துகிறானோ அவனுக்கே வெற்றி கிட்டும். எதிரி எங்களைத் தேடி வருவதற்கு முன்னர் நாம் அவனைத் தேடிச் செல்ல வேண்டும்!"

புலிகளுடன் பேச்சை மேலும் சிலகாலம் நீடித்து, போதிய தயாரிப்புக்களை செய்து முடித்துவிடலாம் என்றே பிரேமதாசா கருதினார்.

போர் தொடங்கும்போது புலிகளை ஒரே அடியில் வீழ்த்திவிடக்கூடிய பலத்தை திரட்டவே அவருக்கு அவகாசம் தேவைப் பட்டது.

வடக்கு-கிழக்கில் படையினருடன் புலிகளுக்கு முறுகல் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள பிரேமதாசா பல உத்தரவுகளை பிறப்பித்தார்.

வவுனியாவில் மோதல் ஏற்பட இருந்த சமயத்தில் இராணுவத்தினரை முகாமுக்கு உடன் திரும்புமாறு பணித்தார்.

இவையெல்லாம் புலிகளுக்கு விட்டுக் கொடுத்தது போலவே வெளிப்பார்வைக்கு தெரிந்தன.

உண்மையில் இந்த விட்டுக் கொடுப்புக்கள் யாவும், திரைமறைவில் நடந்த தயார்படுத்தல்கள் மத்தியில்தான் நடந்தேறின.

ஆயினும் புலிகள் ஏமாறவில்லை. 'சிங்கள அரசுகள் உரிமைகளை தாமாக வழங்கப் போவதில்லை' என்னும் வரலாற்று அனுபவம் பிரபாகரனுக்கு கைகொடுத்தது.

'சரியான தருணம் ஒன்றில் அடி கொடுக்கப் போகிறேன்' என்று அரசுடன் பேச்சு நடத்திய தமது பிரதிநிதிகளுக்கும் பிரபாகரன் கூறிவிட்டார்.

### பாலகுமார் பேச்சு

இக் கட்டத்தில் ஈரோஸ் அமைப்பின் போக்குத் தொடர்பாக புலிகள் கோபம் கொண்டிருந்தனர்.

புலிகளுடன் நல்லுறவை ஏற்படுத்த பாலகுமார் விரும்பினார். பிரபாகரனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

அதன்பின்னர்தான் 'சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டோம்' என்ற முடிவை ஈரோஸ் வெளியிட்டது.

போர் தொடங்குமானால் பாராளுமன்றத்தை விட்டு ஈரோஸ் வெளியேறவும் தயாராக இருக்கிறது என்றும் பிரபாகரனிடம் உத்தரவாதம் கொடுத்திருந்தார் பாலகுமார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டசந்தர்ப்பங்களில் நீதியமைச்சர் ஏ.சி.எச்.ஹமீட்தான் புலிகளுடன் தொடர்பு கொண்டு தணிக்க முயலுவார்.

கொழும்பில் ஈரோஸ் அலுவலகத்தில் இருந்த தகவல் தொடர்பு சாதனம் ஊடாகவும் அமைச்சர் ஹமீட் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவதுண்டு.

### பொறி

அரசை முந்திக்கொள்ள வேண்டும் என்று தயாரான புலிகளுக்கு போரைத் தொடங்க ஒரு பொறியாக அமைந்தது மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவம் ஒன்று.

சிங்கள வியாபாரி ஒருவரால் தாக்கப்பட்ட முஸ்லிம் வியாபாரி ஒருவர் மட்டக் களப்பு பொலிசில் சென்று முறையிட்டார்.

## மட்டக்களப்பில் ஆரம்பமான இரண்டாம் கட்ட ஈழப்போர்




புலிகள் வெளியிட்ட காட்டூன்

அந்த முறைப்பாட்டை ஏற்க மறுத்த சிங்களப் பொலிசார் முஸ்லிம் வியாபாரியை விரட்டி விட்டனர்.

அந்த முஸ்லிம் வியாபாரி புலிகளிடம் சென்று முறையிட்டார்.

'அப்படியா சங்கதி' என்று கேட்டுவிட்டு, மட்டக்களப்பு தளபதி கருணாவிடம் புலிகள் தெரிவித்தனர்.

அந்த சிங்கள வியாபாரியைப் பிடித்து விசாரிக்குமாறு கருணா கூற, வியாபாரியை பிடிக்கப் போனார்கள். அந்த வியாபாரி பயத்தில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு சென்று விட்டார்.

அந்த வியாபாரியை ஒப்படைக்குமாறு புலிகள் கேட்க, பொலிஸார் முதலில் பயந்து ஒப்புக்கொண்டனர்.

பின்னர் புலிகளை எதிர்க்க முற்பட்டனர். உடனடியாக தாக்குதல் கொடுத்த புலிகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

அதேசமயம் வோக்கியில் தகவல்கள் பறக்க, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல பொலிஸ் நிலையங்களை துரித கதியில் முற்றுகையிட்டனர் புலிகள். அவையும் புலி களின் கட்டுப்பாட்டில் சென்றன.

### மோதல்

களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத்துக்குள் இராணுவத்தினரும் முகாம் அமைத்திருந்தனர்.

அதனால் புலிகள் முற்றுகை இட்டதும் சண்டை மூண்டது. அங்கிருந்து கல்முனை வாடி வீட்டில் இருந்த இராணுவத்திடம் உதவி கோரினர்.

கல்முனை வாடி வீட்டில் இருந்து புறப்பட்ட இராணுவம் கடற்கரை வீதி வழியாகப் புறப்பட்டு நகருக்குள் புக எத்தனித்தது.

முன்னேறிய இராணுவத்தை தடுத்து நிறுத்த புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

சண்டை தீவிரமானது. கொழும்புக்கு தகவல் பறந்தது.

கொழும்பில் இருந்து ஹெலிகளும் குண்டுவீச்சு விமானங்களும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் நோக்கி விரைந்து சென்றன.

பொறுத்த அடி ஒன்றை கொடுத்து விட்டு, பின்னர் வேண்டுமானால் யுத்த நிறுத்தம், செய்யலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டது.

அதனால்தான் குண்டுவீச்சு விமானங்கள் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டது.

கடற்படைப் படகுகளும் விரைந்து சென்றன.

இதற்கிடையே பொலிஸ் நிலையங்களில் இருந்த பொலிசாரை புலிகள் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

நீதியமைச்சர் ஹமீட் கொழும்பில் இருந்தபடி புலிகளுடன் தொடர்பு கொள்ள முயன்றார்.

அதற்காக ஈரோஸ் அலுவலகத்தில் இருந்த தகவல் தொடர்பு சாதனம் ஹமீட் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொருத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்த யோகி, மாத்தையா ஆகியோருடன் ஹமீட் பேசினார்.

மறுமுனையில் இருந்து அவர்கள் கூறினார்கள்:

"எப்படி ராஜீவ் காந்தி எங்களை நம்பவைத்து முதுகில் குத்தினாரோ, அப்படி பிரேமதாசாவும் எங்கள முதுகில் குத்திவிட்டார் என்று தலைவர் கூறுகிறார். எனவே உங்களை நம்ப நாங்கள் தயாராக இல்லை!"



சண்டை தொடங்குவதற்கும், அரசு மீது தங்களுக்கு சந்தேகம் ஏற்படவும் காரணமான விடயங்களை மறுமுனையில் இருந்து புலிகள் பட்டியலிட்டனர்.

அநுராதபுரத்தளம் விரிவாக்கப்பட்டமை, நடவடிக்கை தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டமை, ஜிகாத் உறுப்பினர்களுக்கு பொலிஸ் உத்தியோகம் அளிக்கப் பட்டமை போன்றவையே புலிகளது பட்டியலில் முக்கியம் இடம்பெற்றிருந்தன.

சண்டையை நிறுத்துவது என்றால் அதற்கு பல்வேறு முன்நிபந்தனைகளையும் புலிகள் விதித்தனர்.

ஒரு கட்டத்தின் பின்னர் தலைவர் விரும்பவில்லை என்று கூறி அமைச்சர் ஹமீட்டுடன் தகவல் தொடர்பு சாதனம் ஊடாகப் பேசுவதையும் புலிகள் தவிர்த்தனர்.

### ஹமீட் பயணம்

யோகி, மாத்தையா ஆகியோரை கொழும்பு வருமாறும், பேசித் தீர்க்கலாம் என்றும் ஹமீட் வேண்டுகோள் விடுத்தார். கெஞ்சும் தொனியில் கோரினார்.

'முடியாது!' என்று வந்தது ஒரே பதில்.

நேரில் சென்று பேச ஹமீட் புறப்பட்டார்.

அவர் பலாலி விமானத் தளத்தில் சென்று இறங்கும்போது நிலமை கட்டுமீறிக் கொண்டிருந்தது.

புலிகள் பலாலித்தளம் நோக்கி ஏவிய ஷெல் ஒன்று ஹமீட் அங்கு இறங்க முன்னர்தான் விழுந்து வெடித்திருந்தது.

பிரேமதாசா, ரஞ்சன் ஆகியோர் படைத்தரப்புடன் இணைந்து மேற்கொண்ட திரைமறைவு வேலைகள் அமைச்சர் ஹமீட்டுக்கு பூரணமாகத் தெரிந்திருக்க வில்லை.

அதனால் புலிகள் வேண்டுமென்றே கூறுகிறார்களோ? என்றுகூட அவர் சந்தேகப்பட்டார்.

அமைச்சர் ஹமீட்டை அனுப்பி தம்மை ஆழம் பார்க்கிறார் பிரேமதாசா என்று கருதினர் புலிகள். ஆகவே பிடிகொடாமல் நடந்துகொண்டனர்.

தோல்வியோடு திரும்பினார் ஹமீட்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிவிட்டது.

ஈரோஸ் பா.உக்கள் உடனடியாக பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.

பிரேமதாசா அரசுடன் இனிப் பேச்சுக்கே இடமில்லை என்று முடிவு செய்து விட்டார் பிரபாகரன்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# இன்றைய ஆட்சியாளரின் புலிச்சவாரி!

## அலசுவது- இராஜதந்திரி

"ஒரு நாயைக் கொல்ல வேண்டுமானாலும் அதற்கு பைத்தியக்காரப் பட்டம் கட்டிவிட்டுக் கொல்" என்பது இராஜதந்திரப் பழமொழி.

அந்தப் பழமொழியின் இராஜதந்திர சூட்சுமத்தையே இங்குள்ள புதிய பேரினவாதிகளும் இன்று கையில் எடுத்துள்ளனர்.

தனிச்சிங்களச் சட்டம், இலங்கைத்தீவு சிங்கள பௌத்த மக்களுக்கு உரிய நாடு, தமிழ் மக்கள் வந்தேறு குடிகள், இங்கு உரித்து இல்லாதவர்கள் என்றெல்லாம் தமது தமிழின எதிர்ப்பையும், அழிப்பையும் பகிரங்கமாக அறிவித்தனர் முன்னைய பேரினவாதிகள்.

இன்றும் அதுதான் பேரினவாதிகளது அடிமனதில் உள்ள எண்ணமாக இருக்கிறது. ஆயினும் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தினால் தமிழர் தரப்புக்கு உலக அனுதாபம் ஏற்பட்டுவிடும் என்று கருதியே தந்திரமாகவும், புன்னகையோடும் தங்கள் இன ஒழிப்புத் திட்டங்களை அரங்கேற்ற ஆரம்பித்துள்ளனர்.

உலக அனுதாபம் தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமாகுமே என்று பேரினவாதிகள் கடந்தகாலத்தில் அஞ்சியதில்லை. உலக கண்டனங்கள் பற்றிய கவலையே இல்லாமல்தான் இனக் கலவரங்கள் பலவற்றை அரங்கேற்றியிருந்தனர்.

ஆனால் இன்று நிலமை வேறாக உள்ளது. உலக அனுதாபம் தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமாக மேலோங்குமானால், அதனை பயன்படுத்தி பேரினவாத பூதத்தின் இதயத்திலேயே ஈட்டியைப் பாய்ச்சும் அரசியல் இராணுவ சக்தியாக புலிகள் பலம் பெற்றிருப்பதால்தான் பேரினவாதிகள் அடக்கி வாசிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதன் காரணமாகவே உலக அனுதாபம் தமிழ் பேசும் தரப்பை நோக்கி திரும்பிவிடக்கூடாது என்பதில் பேரினவாதிகள் மிகுந்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

நாவில் இனிப்புத் தடவிக் கொண்டும், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு அவசியம் என்று உலகின் செவிகளில் விழக்கூடியவாறு உரத்துக் கூறிக்கொண்டும் இன ஒழிப்புக்கான ஆயுதங்களை பேரினவாதிகள் ஏந்தி நிற்கின்றனர். இது புதிய அல்லது நவ பேரினவாதமாகும்.

'விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள்' என்ற பெயரில் தமிழ் பேசும் மக்களின் குரல்வளையை நெரித்து அவர்களது போராடும் பலத்தை ஒடுக்கி இரண்டாம் தர குடிமக்களாக அடங்கி நடக்க செய்வதுதான் இன்றைய நவ பேரினவாதத்தின் இறுதி இலக்காகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சார்பாகப் பேசாதீர்கள் என்றோ, ஜே.ஆர். ஒரு காலத்தில் கூறியதுபோல 'உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்' என்றோ வெளியுலகுக்கு இன்று கூறமுடியாது.

ஆகவே, 'புலிகள் பயங்கரவாதிகள், புலிகளுக்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்துங்கள்' என்ற கோஷத்துடன் தமிழ்பேசும் மக்களுக்கு சாதகமான உலக அபிப்பிராயத்தை குறிவைத்து தாக்கத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் பேரினவாதிகள் மேற்கொண்டுவரும் திட்டமிட்ட சதியாகவே அது அமைந்துள்ளது.

இனவாதத்தை கண்டித்துப் பதவிக்கு வந்த சந்திரிக்கா அரசாங்கத்தின் இன்றைய அரசியல், இராணுவ இலக்குகள் புதிய பேரினவாதத்துடன் இரண்டறக் கலந்தவையாக மாறியுள்ளன.

பேரினவாதிகள் மத்தியில் பல்வேறு பிரிவுகள் இருந்து வருகின்றன. இவற்றுக்கிடையே வெவ்வேறு அரசியல் அபிலாசைகளும் இருந்து வருகின்றன. அதன் காரணமாக தமக்குள் இவை இடைக்கிடையே முரண்பட்டுக் கொண்டாலும், தமிழ் பேசும் தரப்பின் பலத்தை தகர்க்கும் பொது இலட்சியத்தில் ஒன்றுபட்டே நிற்கின்றன.

பௌத்த மதபீடத்தினர் சிலர் இன்றைய சந்திரிக்கா அரசுடன் அரசியல் ரீதியாக உடன்படாவிட்டாலும்கூட, இன்றைய அரசாங்கம் முன்னெடுக்கும் யுத்தம், வெற்றியடைய மனப்பூர்வமாக பிரார்த்தித்தே வருகின்றனர்.

அதே சமயம் ஜனாதிபதி சந்திரிக்காவும் அவரது அரசாங்கமும் பதவிக்கு வருவதற்கு முன்னர் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் இன்று காற்றில் பறக்கவிட்டுள்ளனர்.

பேரினவாதத்தின் எதிர்ப்புக்கு அஞ்சி பண்டா, செல்வா ஒப்பந்தத்தை காற்றில் பறக்கவிட்டவர் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கா.

ஜனாதிபதி சந்திரிக்காவும் பேரினவாதிகளின் எதிர்ப்பைக் கண்டு அவர்களுடன் சமரசம் செய்து கொண்டிருக்கிறார். அந்த சமரசத்திற்கான விலையாக தீர்வுப் பொதியின் கனம் குறைக்கப்பட்டதுடன், வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான உத்தரவாதமும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி தமது சொந்த அரசியல் நலனுடன் கலந்த இராணுவத் தீர்வு முயற்சிகளில் வெற்றிபெறுவதற்கும், உலக உதவியைப் பெறுவதற்கும் புதிய பேரினவாதிகளதும், பௌத்த



மதகுருமாரினதும் உதவியை இன்றைய அரசாங்கம் நாடியுள்ளது.

விடுதலைப் புலிகள்மீது தடை விதிக்குமாறு

> **வட அயர்லாந்து ஒப்பந்தத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இனப்பிரச்சனையைத் தீர்க்கலாம்.**
>
> **—பிரிட்டிஷ் தூதர்**

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் உலகின் பலநாடுகளிடம் கோரிக்கை விடுத்து வருகிறார். குறிப்பாக பிரிட்டன் அரசிடம் திரும்பத் திரும்ப வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கை அரசின் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் நிராகரித்திருந்தது. அங்கு தொடர்ந்தும் புலிகளின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்டே வருகின்றது. அதுதவிர இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக கரிசனமான பார்வையையும் தற்போதைய அரசு வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில் பிரிட்டிஷ் தூதரகம் முன்பாக கொழும்பில் பௌத்த மதகுருமார் உட்பட பலர் கூடிநின்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவின் வாசஸ்தலமான அலரிமாளிகை அமைந்துள்ள முக்கிய பாதுகாப்பு வலயத்திற்குள்ளேயே பிரிட்டிஷ் தூதரகமும் அமைந்திருக்கிறது.

அவ்வாறு இருந்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்பகுதிக்குள் கூட்டமாக செல்ல அனுமதியளிக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டம் நடத்தவும் இடமளிக்கப்பட்டிருந்தது.

எனவே அரசாங்கத்தின் ஆசீர்வாதமும் இத்தகைய போராட்டங்களுக்கு இருப்பதுடன், அரசினது நோக்கமும், ஆர்ப்பாட்டக்காரர்களது நோக்கமும் ஒன்றாகவே விளங்குகிறது.

பிரிட்டிஷ் தூதரகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அரச வெகுஜன தொடர்புச் சாதனங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் எம்.பி.கள் சிலருக்கே, 'உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்' என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனே அன்று கூறியிருந்தார்.

ஆனால் இன்றைய அரசு தான் கூற விரும்புவதை மறைமுகமாக, ஆர்ப்பாட்டக்காரர்கள் மூலமாக பிரிட்டிஷ் அரசுக்கு கூறியுள்ளது.

காலமும், சூழலும், அரசாங்கங்களும் மாறும்போது இன ஒடுக்குமுறைக்கான வழிமுறைகள், தந்திரங்கள் என்பவை மாற்றமடைகின்றன, அடிப்படை நோக்கங்கள் மட்டும் மாறாமல் அப்படியே இருந்து வருகின்றன.

புலிகளுக்கு ஆதரவு கொடுப்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்று கூறப்பட்டாலும், அப்போராட்டம் நடைபெற்ற பின்னணி உற்று நோக்கப்படவேண்டியதாகும்.

'வட அயர்லாந்து பிரச்சனையை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கை இனப் பிரச்சனையை தீர்க்கவேண்டும்' என்று பிரிட்டிஷ் தூதர் கருத்து வெளியிட்டிருந்தார்.

பிரிட்டிஷ் மகாராணியின் பிறந்ததினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே தூதர் அக் கருத்தை கூறியதோடு, இவ் வருடத்தில் இனப் பிரச்சனை தீரவேண்டும் என்பதே தமது விருப்பமாகும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

13.06.98 அன்று தூதரின் கருத்து பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. அன்றிலிருந்து மூன்று நாட்களுக்குள் 16.06.98 அன்று பிரிட்டிஷ் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரிட்டிஷ் தூதரின் அறிக்கையில் புலிகளுக்கு அனுதாபமோ, அல்லது தலையீடு செய்வது போன்றதோரணையோ காணப்பட்டிருக்கவில்லை.

எனினும் அந்த அறிக்கையைக்கூட பேரினவாத சக்திகளால் ஜீரணிக்க முடியவில்லை. இப்படியே விட்டுவைத்தால் தமிழருக்கு ஆதரவாகப் பேசுவதற்கும் முன்வந்துவிடுவார் தூதர் என்று நினைத்தே ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். தமது உள்நோக்கத்தை மறைப்பதற்காக 'புலிகளுக்கு பிரிட்டனில் தடை விதிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்' நடத்துவதுபோல சித்தரித்திருந்தனர்.

ஏற்கனவே இந்தியாவின் முன்னாள் தூதர் ஜா கூறிய நியாயமான கருத்தை எதிர்த்தும் இதே சக்திகள் கிளர்ந்தெழுந்தன. வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும் இந்தியத் தூதரிடம் இலங்கை அரசின் ஆட்சேபத்தை தெரிவித்திருந்தார்.

திரு. ஜா. கூறிய கருத்தும், பிரிட்டிஷ் தூதர் வெளியிட்ட அறிக்கையும் புலிகளுக்கு சார்பானதல்ல. இலங்கைத் தமிழருக்கு சார்பானதாகவும், இனப்பிரச்சனை நியாயமாக தீர்க்கப்படவேண்டியதன் அவசியத்தை சிநேகபூர்வமாக எடுத்துச் சொல்வதாயுமே அமைந்திருந்தன.

இக் கருத்துக்களையே சகிக்க முடியாதளவுக்கு இலங்கை அரசுக்கும், பேரினவாதிகளுக்கும் இடையே ஒத்ததன்மை காணப்படுவதையே நடைபெற்றுள்ள நிகழ்வுகள் புலப்படுத்தியுள்ளன.

புலிகளுக்கு எதிரானவை என்ற அறிவிப்புக்களோடும், சித்தரிப்புக்களோடும் முன்னெடுக்கப்படும் சகல விதமான நடவடிக்கைகளும் தமிழ் பேசும் தரப்பை பலவீனப்படுத்தி, தனிமைப்படுத்தும் இலக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நன்கு அறியக்கூடியதாகவும் இருக்கிறது.

சகல ஆயுதங்களையும் இழந்து நின்ற இராவணனிடம் 'இன்று போய் நாளை வா' என்று இராமன் கூறியதாக இராமாயணக்



> **புலிகளுக்கு எதிரானவை என்ற சித்தரிப்போடு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தமிழ் பேசும் தரப்பை பலவீனப்படுத்தும் நோக்கம் கொண்டவையே.**

கதையில் விபரிக்கப்பட்டுள்ளது.

இங்கு தமிழ் பேசும் தரப்பு பலவீனமாகி வெறுங்கையுடன் நிற்குமானால் 'இன்று போய் நாளை வா' என்று பேரினவாதம் கூறப்போவதில்லை. அன்றே அந்த நொடியே 'நீ என் அடிமை' என்று கர்ஜிக்கும் ஆவலுடன் பேரினவாதப் பூதம் காத்திருக்கிறது.

அசோக சக்கரவர்த்தியின் போர் வெறியைத் தணித்தவர் ஒரு பௌத்த துறவியேயாகும். பௌத்தம் அமைதியை போதிக்கும் உன்னத கருத்துக்கள் பலவற்றை கொண்டிருக்கிறது.

ஆனால் இங்கோ, போரை தளர்வின்றித் தொடர்வதற்கு பௌத்த மதகுருமார்கள் கூட்டு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தென்னிலங்கையில் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு, போரைத் தொடருங்கள் என்று பௌத்த மதகுருமார்கள் சிலர் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

பலபிரிவுகளாக உள்ள பௌத்த பீடங்கள் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு கூட்டறிக்கை விடுத்திருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்தக் கூட்டறிக்கைக்கு அரச தரப்புக்குள் உள்ள முக்கியமான சிலரே பின்னணியில் நின்றுள்ளனர்.

சமீபத்தில் இரு அமைச்சர்கள் பௌத்த மதகுருமாரைச் சந்தித்து போர் நிலவரம் தொடர்பாக விளக்கமளித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதன்பின்னரே மேற்படி கூட்டறிக்கை வெளியானதுடன், அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் அனைத்திலும் தலைப்புச் செய்தியாகவும் பிரதான இடமளிக்கப்பட்டது.

தாம் எதிர்பார்த்த திருப்பங்கள் ஏற்படவில்லை என்பதால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதா விடுவதா என்று அரச தரப்புக்குள் குழப்பம் ஏற்பட்டது.

தேர்தல் நடந்தால் தோல்வி நிச்சயம் என்று கருதும் சிலரே பௌத்தபீடங்களது உதவியை நாடியதாகத் தெரிகிறது.

சொந்த அரசியல் இலாபத்துக்காக தேசிய பிரச்சனைகளில் மதபீடத்தின் தலையீட்டை உருவாக்குபவர்கள் அரசியல்வாதிகளேயாவர்.

கடந்த கால ஆட்சியாளர்களும் தங்கள் அரசியல் தேவைகளுக்கு மதபீட உதவிகளை நாடியிருந்தனர்.

இன்றைய ஆட்சியாளரும் மாகாணசபைத் தேர்தலை தங்கள் வெற்றிக்கான சூழல் தோன்றும்வரை ஒத்திப்போடும் அரசியல் நலனுக்காக மதபீட உதவியை நாடவேண்டியவர்களாகினர்.

இவ்வாறான உதவியை நாடியது மூலம், பௌத்த மதபீடங்களின் கட்டளைகளை மீறமுடியாதவர்களாக இன்றைய ஆட்சியாளர்களும் மாறிவிட்டமையும் தெளிவாகிறது.

சவாரிக்காக புலியின் முதுகில் ஏறுபவர் பின்னர் இறங்கமுடியாது. இறங்கினால் புலி அவரை அடித்து தின்றுவிடும் என்று கூறுவதுண்டு.

பௌத்த பீடங்களை அறிக்கை விடவைப்பது, பேரினவாதிகளின் ஆர்ப்பாட்டங்களை ஆசிர்வதிப்பது போன்றவை புலிச்சவாரி போன்றதேயாகும்.

தற்போதைக்கு இப்புலிச் சவாரி ஆட்சியாளருக்கு உதவினாலும்கூட, பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து மீளமுடியாத, பௌத்த மத பீட கட்டளைகளை மீறமுடியாத சூழலையும் ஏற்படுத்திவிட்டன. ஒருவேளை மீறமுற்பட்டால், அதாவது புலியின் முதுகில் இருந்து இறங்க முற்பட்டால் அந்தப் புலியே ஆட்சியாளர்களை விழுங்கிவிடும்.

இன்றைய ஆட்சியாளரின் புலிச் சவாரி ஆரம்பமாகிவிட்டது.

இனி புலியின் போக்கிலேயே இந்த ஆட்சியின் பயணமும் தொடரப்போகிறது. எனவே, இன்றைய ஆட்சியாளரால் நியாயமான அரசியல்தீர்வொன்றை இனி எக்காலத்திலும் வழங்க முடியாது.

அதுமட்டுமன்றி பௌத்த குருமார் ஊடாக யுத்த வெற்றியை நோக்கிச் செல்வதாக அறிக்கை விடுவதன்மூலம், இன்றைய யுத்தத்திற்கு எத்தகைய அர்த்தம் வழங்கப்படுகிறது என்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது.

இதன்பின்னரும் அரசுக்கு ஆதரவு வழங்கும் தமிழ்க் கட்சிகள் தங்கள் கண்களை இறுகமூடிக்கொண்டு, நடப்பது எல்லாம் புலிகளுக்கு எதிரான நகர்வுகளே என்பதுபோல பாசாங்கு செய்வது அப்பட்டமான ஏமாற்றுத்தனமேயாகும்.

விடுதலைப் புலிகள் வெற்றி கொள்ளப்பட்டால் அதன் பின்னர் உலக அபிப்பிராயம் பற்றி பேரினவாதிகள் கவலைப்படமாட்டார்கள். தமது சுயரூபங்களை காண்பித்தபடி இலக்கை நோக்கி முன்னேறுவர். அப்போது இந்தத் தமிழ்க் கட்சிகளும் காணாமல் போகலாம். ■

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

பௌத்த மதகுருமார் உள்ளிட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அவசரகாலச் சட்டம் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போராட்டம் நடத்தலாம்.

ஆனால் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோரின் உறவினர்கள் ஊர்வலம் நடத்த முற்பட்டபோது அவசரகால சட்டவிதிகளின்படி முன்னர் தடை செய்யப்பட்டது.

அரசுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கும் தமிழ்அமைப்புக்கள், கட்சிகள் 'அரசியலுக்காக நடத்துகிறோம்!' என்று முன்கூட்டியே கொள்கை விளக்கம் கொடுத்துவிட்டு போராட்டம் நடத்தினால் கண்டும் காணாதது போல விடப்படும்.

சீனாவில் பாடசாலைகள்மீதும், குடியிருப்புக்கள் மீதும் ஜப்பான் விமானங்கள் குண்டு வீசியபோது மா ஓ சேதுங் கூறினார்: இக் குண்டு வீச்சுக்கள் எதிரி எத்தனை கொடூரமானவன் என்பதை மட்டுமல்ல, நாங்கள் அவனுக்கு உண்மையான எதிரிகளாக இருக்கிறோம் என்பதையும் கூறுகின்றன."

தமிழ்க் கட்சிகள் போராட்டம் நடத்தினாலும் ஆட்சியாளர்கள் கோபப்பட மாட்டார்கள். ஏனெனில் போராட்டம் நடத்தி விட்டுவந்து தங்களுக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாமல், இன்றைய அரசின்மீது நம்பிக்கையில்லை என்பதை இத்தனை அனுபவத்தின் பின்னர்கூட உலகறியச் சொல்லாமல் இக் கட்சிகள் நடத்தும் போராட்டங்கள், முழக்கங்கள், வீரமான சுவரொட்டிகள் நினைவு தினக் கூட்டங்கள் எல்லாமே மக்களை ஏமாற்றி, அடுத்த தேர்தலுக்கு வாக்கு வங்கிகளை உருவாக்கும் முயற்சிகள் மட்டுமே. இவற்றால் அரசாங்கத்திற்கு பாதகம் ஒன்றுமில்லை.

அதுபோல பௌத்த மதகுருமார் நடத்தும் போராட்டங்களும் அரசுக்கு நன்மை விளைவிப்பனவே.

19.06.98 அன்று கொழும்பில் தமிழர் நடவடிக்கைக் குழு நடத்திய கூட்டத்திற்கு மட்டும் வித்தியாசமான உபசரிப்பு.

'கூட்டத்தை நடத்தவேண்டாம்' என்று மண்டப உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டதாம். மண்டபத்துக்குள் கூட்டம் நடத்துவதை தடுத்தால் சட்டப்பிரச்சனைகள் எழும் என்பதால் பின்னர் அனுமதி கிடைத்தது.

மண்டபத்தைச் சுற்றி உளவுப் பிரிவினர் நின்றனராம். கூட்டத்திற்கு செல்லும் ஆட்களை நோட்டம் விட்டனராம்.

கூட்டம் ஆரம்பமான பின்னர் கூட்ட நிகழ்ச்சிகள் அனைத்து இரு கோணங்களில் இருந்து வீடியோ கமராவில் விலாவாரியாகப் படமாக்கப்பட்டன.

### "நான் ஒரு புலி"

'இவர்கள் மேலிட உத்தரவுடன் வந்துள்ளனர். ஒத்துழைப்புக் கொடுங்கள்' என்று சீருடையுடன் நின்றவர்களால் கூறப்பட்டதாம். அதன்பின்னரே படப்பிடிப்பு நடந்தது.

இதனால் குமார் பொன்னம்பலம் படு சூடாகிவிட்டார். மேடையில் அவரை அறிமுகப் படுத்திய திரு. விஜயசிங்கம்: "இவர் ஒரு சிங்கம்" என்று கூற, அதனைமறுத்த குமார்: "நான் சிங்கமல்ல புலி" என்று கூறினார். அத்தோடு நிறுத்தாமல் "இங்கே உள்ளோரில் சி.ஐ.டி.யினரும் நிற்கின்றனர். எல்லோருக்கும் தெளிவாக கூறுகிறேன், நான் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை ஆதரிப்பவன்" என்று அறிவித்தார்.

படம் எடுத்துக் கொண்டிருந்தவர்களை கூட்டத்தினர் மொத்தமும் திரும்பிப் பார்க்க, அவர்கள் வெட்கப்பட்டது போலிருந்தது.

தமிழர் நடவடிக்கைக்குழுமீது தமிழ்க் கட்சிகளுக்கும் பிடிப்பில்லை. 'புலிகளின் ஆட்கள்' என்று சில கட்சிகளே முந்திரை குத்துகின்றனவாம்.

'இப்படியான அமைப்புக்கள் துணிச்சலாக



கருத்துக் கூறினால் தமக்கும் அப்படியொரு நிர்ப்பந்தம் ஏற்படும். அல்லது தமிழ் மக்களால் இளக்காரமாகப் பார்க்கப் படுவோம்' என்று தமிழ்க்கட்சிகளுக்கு உள்ளூர குறுகுறுப்பு. அதுதான் கிண்டல்.

அவர் இப்படி, இவர் அப்படி என்று தனிப்பட்டரீதியில் கிண்டலடித்து, தங்கள் இயலாமையை மூடிமறைப்பதும் ஒரு வழி.

தமிழர் நடவடிக்கைக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள் என்பதல்ல முக்கியம், இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற சில பணிகளை தம்மால் முடிந்தளவு யார் செய்தாலும் அதனை பொதுப் போராட்டத்திற்கு சாதகமாக மாற்றுவதே விவேகம்.

புதிய புதிய பெயர்களில் சமாதானம், மனித உரிமை என்ற உச்சரிப்புக்களுடன் பேரினவாத அமைப்புக்கள் பல தோற்றம் பெற்று வருகின்றனர். தமிழர் தரப்பில் இருந்து பதில் கொடுக்கக்கூடிய ஆளில்லை. தமிழ்க் கட்சிகள் கப்சிப்.

இந்நிலையில் தமிழர் நடவடிக்கைக்குழு மட்டுமல்ல பல்வேறு தமிழ் அமைப்புக்கள் தோன்றி கருத்துக்களை முன்வைக்கட்டுமேன்! என்ன நஷ்டம்? இல்லையெனில் தமிழர்கள் படிப்படியாக வாய் திறக்கவோ பயந்துபோகும் நிலைதான் தோன்றும். பேரினவாதப் பூதம் மட்டும் வாய் பிளந்து கொண்டு திரியும்.

என்ன நஷ்டம் என்றேனே? நஷ்டம் தமிழ்க் கட்சிகளுக்கு. சில தனிநபர்களே துணிந்து குரல் கொடுக்கும்போது ஆள், அம்பு, சேனை இருந்தும் நீங்கள் ஏன் குரல் கொடுக்கத் தயங்குகிறீர்கள்? என்று தமிழ மக்கள் கேட்டார்களே! கேட்டாலும் பரவாயில்லை, அடுத்த தேர்தலில் வாக்கு சேகரிக்க செல்லும்போது மறக்காமல் இருந்து தொலைத்தால் என்ன செய்வது? ●



படிப்பகம்

# இடி அமீன்

முதலைக் கறியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த அமீனுக்கு கறி ருசி திருப்தியாக இல்லை.

பவ்வியமாக நின்று கொண்டிருந்த தன் உதவியாளனைப் பார்த்தான். அமீன் சாப்பிட ஆரம்பிக்கும் முன்பாக, அமீனுக்கான உணவை உண்டு பார்த்து பரிசீலிப்பது உதவியாளன்தான்.

சியம்பாவின் செயலாளரது உடல் இப்போதும் அங்கேதான் கிடந்தது. அமீன் கட்டளையிடாமல் எந்தக் காரியமும் செய்யக்கூடாது; அதனால் உடலை அங்கிருந்து அகற்றவில்லை.

இப்போது தன் உதவியாளரிடம் அமீன் கூறினான்: **"அந்த உடம்பில் இருந்து இரண்டு விரல்களை வெட்டிப் போடு!"**

அமீன் உண்மையாகச் சொல்கிறானா, கேலி செய்கிறானா என்று தெரியாமல் அந்த உதவியாளன் திணறினான்.

ஏதோ இரண்டு வெண்டைக்காய் முறித்துப்போடு, என்று சொல்வதுபோல் சர்வசாதாரணமாக கூறிவிட்டு முதலைக் கறியை சப்புக்கொட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

இடி அமீன் மனித மாமிசம் சாப்பிடுவான் என்பதும், மனித இரத்தம் குடிப்பதில் இன்பம் காணுவான் என்பதும் அப்போது இரகசியமாக இருந்தது.

அதனால்தான் உதவியாளனால் அமீன் கட்டளையை நம்பமுடியாதிருந்தது. **"என்ன தாமதம்?"** என்று அமீன் உறுமிய உறுமலில், தான் எப்போது கத்தியை எடுத்தேன், எப்படி விரலை வெட்டினேன் என்று அவனுக்கே தெரியாதளவு வேகத்தோடு செயற்பட்டான்.

கோழிக்கால் சாப்பிடும் பாவனையோடு கைவிரலை இடி அமீன் இரசித்துச் சாப்பிடுவதைக் காண அவனுக்கு வயிற்றை குமட்டியது. இடி அமீனைப் பார்க்கவே பயமாக இருந்தது.

முதலைக் கறியையும், கைவிரல்கள் இரண்டையும் சாப்பிட்டு முடித்து ஏப்பம் விட்ட இடி அமீன், தன் வயிற்றைத் தடவிக் கொண்டே, **"வெளியே போய் சொல்லுவாயா?"** என்றான்.

"இ...இ...இல்லை." என்று அவன் உடம்பு நடுங்கிய நடுக்கத்தைக் கண்டு, உரத்துச் சிரித்த அமீன், **"இனி இந்த உடலை அகற்றிவிடு!"** என்றான்.

உகண்டா அதிபரானதும் நாட்டின் பல பாகங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்து, அங்குள்ள மக்களையும் அமீன் சந்திக்கத் தொடங்கினான்.

அமீனின் இந்த அணுகுமுறை மக்களைக் கவர்ந்தது. அதற்கு முன் இருந்த அதிபர்கள் மாளிகையில் இருந்து நிர்வாகம் நடத்தினார்கள்.

இடி அமீன்தான் மக்களை சந்திக்க இறங்கிவந்த முதல் அதிபர்.

இடி அமீன் ஒரு பகுதிக்குச் செல்கிறான் என்றால், முதல் நாள் மாலையில் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்படும்.

இரவோடு இரவாக மேடை போட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விடும்.

ஹெலிக்கொப்டரில் இடி அமீன் வந்து சேருவான். அதற்கு முன்னரே அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் கார்களிலும், ஹெலிக்கொப்டர்களிலும் வந்திறங்கிவிடுவர்.

மேடையில் இருந்து கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவான். இறுதியாக மேடையில் கம்பீரமாக நின்று அமீன் பார்க்கும் தோரணையில் மொத்தக் கூட்டமும் அமைதியில் உறைந்துபோகும்.

அந்தப் பகுதிக்குரிய முக்கிய பிரச்சனைகளைக் குறிப்பிட்டு, அவற்றை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு உத்தரவு போட்டுவிட்டு ஹெலியில் பறந்து விடுவான்.

இடி அமீன் இட்ட கட்டளையை நிறைவேற்றி முடிக்கும்வரை குறிப்பிட்ட அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் தூக்கமே வராது.

கூட்டங்களில் கலந்து கொள்ளும் அமீனின் கண்கள் அலைபாயும். அக்கண்களில் வளப்பமான அழகிகள் பட்டுவிட்டால் போதும்; இருப்பே கொள்ளாது.

அமீனின் குறிப்பறிந்து உதவியாளர்கள் அருகில் செல்லுவார்கள். எத்தனையாவது வரிசையில் அந்த அழகி என்ற விபரத்தை காதோடு கூறிவிட்டு அமர்ந்திருப்பான்.

கூட்டம் முடிந்து அமீன் புறப்படும் போது அந்த அழகி ஹெலிக்கொப்டருக்குள் இருந்தாக வேண்டும்.

முரண்டு பிடிக்கும் அழகிகள் மட்டும் அமுக்கிப் பிடிக்கப்பட்டு காரில் அமீனுடைய இரகசிய இடத்திற்குக் கொண்டு செல்லப்படுவர்.

அழகிகள் விடயத்தில் அமீனின் பலவீனம் மக்களிடையேயும் ஓரளவு தெரிந்தே இருந்தது.

அதனால் இடி அமீனின் கண்களில் பட்டுவிடாமல் இருக்குமாறு தன் பெண் பிள்ளைகளுக்கு பெற்றவர்கள் பலர் கண்டிப்பான கட்டளையையே போட்டிருந்தனர்.

'இடி அமீன் கொடூரமானவன்.



உகண்டாவில் சர்வாதிகாரம் தலை கால் தெரியாமல் ஆடுகிறது' என்று சர்வதேச செய்திகளில் எல்லாம் கூறப்பட்டு வந்தது.

தனது தடாலடிப் பாணியிலேயே பதிலடி கொடுக்க முடிவு செய்தான் இடி அமீன்.

கொல்லப்பட்டவர்கள், தப்பியோடியவர்கள்போக மீதியாக சிறையில் இருந்த ஒபேடேயின் ஆதரவாளர்களை பகிரங்கமாக விடுதலை செய்தான்.

விடுதலை செய்யப்படுவதற்குத் தெரிவான நாற்பது பேரும் அமீன் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

அமீனைக் கண்டதும் அத்தனைபேரும் சல்யூட் அடித்தனர்.

**"இப்போது சல்யூட் அடிக்கிறீர்கள். விட்டிருந்தால் என் உடம்புக்கு புல்லட் அடித்திருப்பீர்கள்!"** என்று கூறி அமீன் சிரித்த சிரிப்பில், தாங்கள் விடுதலையாகப் போவதாகக் கூறப்பட்டது சுத்தமான பொய் என்றே அவர்கள் நினைத்தனர். அதனால் அவர்களின் முகங்களில் இருந்த உற்சாகம் வடிந்து விட்டது.

**"அடே குளிரில் நடுங்கும் கோழிக்குஞ்சுகள்போல ஏனடா நடுங்குகிறீர்கள்? இந்த அமீன் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்கு கெட்டவன்!"** என்று கூறிய அமீன், சட்டென்று "நீங்கள் நல்லவர்களா? கெட்டவர்களா?" என்றான்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 15

**கடந்தவாரம்**

**உகண்டா முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் அந்தரங்கச் செயலாளரை தன் பக்கம் இழுக்கிறான் அமீன். சியம்பாவை வலையில் வீழ்த்த பயன்பட்ட அழகியை அமீன், சியம்பா முன்பாகவே சுட்டுத்தள்ளுகிறான்....**

**இனி....**

யாரும் பதில் பேசும் நிலையில் இல்லை. அதனால் அமீனே பதிலையும் கூறவேண்டியிருந்தது.

**"பாதி நல்லவர்கள்; மீதி கெட்டவர்கள்!"** என்று இடியென நகைத்தபோதும், அருகில் நின்ற சிப்பாயிடம் அமீன் துப்பாக்கியை பெற்று அவர்களில் ஒவ்வொருவராக குறிபார்த்தபோதும், அத்தனைபேரும் தங்கள் உயிரைக் கையில் பிடித்தபடியே நின்றிருந்தனர்.

அந்த அவதியை ரசித்த இடி அமீன் அவர்களில் மூன்று பேரை ஒவ்வொருத்தராக சுட்டுப்போட்டான்.

நீள் வரிசையில் மூன்றுபேரின் இடம் வெற்றிடமானது. இரத்தம் சிந்தியபடி மூன்றுபேர் சாவை அணைத்துக் கொண்டு இருந்தனர்.

'அடுத்தது யார்?'

'அடுத்தது யார்?'

மீதியிருந்தவர்கள் ஒவ்வொருத்தரின் இதயமும் பந்தயக் குதிரை வேகத்தில் துடித்தது.

மூன்று தடவை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் ஒவ்வொருத்தராகக் குறிபார்த்து விட்டு, சட்டென்று துப்பாக்கியை விட்டெறிந்தான்.

துப்பாக்கி அவர்கள் முன்னால் விழுந்து கிடந்தது.

**"எடுத்துக் கொள்ளுங்கள். இந்த அமீன் தன் எதிரிகளுக்கும் ஒரு தடவை சந்தர்ப்பம் கொடுக்காமல் விட்டதில்லை. என்னைச் சுட வேண்டும், ஒழித்துக் கட்ட வேண்டும்போல் இருக்கிறதா? எடுங்கள்; சுடுங்கள்! ரவைகளால் என்னைத் துளையுங்கள். ஐந்து நிமிட அவகாசம்! தவறவிட்டால் அதன் பின்னர் நான் உங்களைச் சுடுவேன். என்ன சாக விருப்பமா? சாகடிக்க விருப்பமா?"**

ஐந்து நிமிடமும் அத்தனைபேரும் அசைவே இல்லாமல் சிலையாக நின்றிருந்தனர்.

ஐந்து நிமிடம் முடிந்ததும் அமீன் சொன்னான்: **"இப்போதே இந்தநொடியே நான் உங்களை விடுதலை செய்கிறேன்!"**

நம்பமுடியாமல் பார்த்தனர். **"ஆனால் ஒரு நிபந்தனை! வெளியே போய் பெண்டாட்டி கையால் சாப்பிட்டதும் யாருக்காவது வீரம் வந்தால், உங்கள் சாவு கோரமாக இருக்கும்!"** என்றவன் சுட்டுவிரலை நீட்டி மேலும் உறுதியாகக் கூறினான்: **"உங்களுடன் உங்கள் குடும்பமும் காணாமல் போகும்!"**

"இல்லை இல்லை!" என்றனர்.

இடி அமீன் நகைத்துவிட்டு: **"இந்த அமீன் சொன்னதைச் செய்வான்; ஆனால் செய்வதைச் சொல்லமாட்டான்!"** என்றான் சிரிப்பை நிறுத்தாமல்.

ஒபேடேயின் ஆதரவாளர்கள் விடுதலை என்ற செய்திகள் வெளியானதும் அமீனுக்கு மக்களிடம் மேலும் செல்வாக்கு ஏற்பட்டது.

அமீனுக்கான பத்திரிகையாளர் அமீனுக்கு பிடித்தமான கேள்வியைக் கேட்டார்: "ஏன் உங்கள் எதிரிகளையும் விடுதலை செய்கிறீர்கள்?"

மாட்சிமை பொருந்திய உகண்டா ஜனாதிபதி இடி அமீன் கூறினார்: **"நான் ஒரு ஜனநாயகவாதி. ஜனநாயகத்தை புத்துயிரூட்டுவதற்காக என் உயிரைக் கொடுக்கவும் சித்தமாக இருக்கிறேன்!"**

அதனைத் தொடர்ந்து இடி அமீன் மேற்கொண்ட தடாலடி நடவடிக்கைகளால் அவனை வெறுத்தவர்கள்கூட குழம்பிப் போனார்கள்.

(இடி தொடரும்)



# தருவது ரசிகன்

## கொல்ல வந்த காதலன்



இத்தாலியில்தான் 'மாபியா' எனப்படும் கூலிக்காக எந்த கொடூரத்துக்கும் தயங்காத கும்பலின் தலைமையகம் இருக்கிறது.

போதைக் கடத்தல், ஆயுதக் கடத்தல், கூலிக்காக ஆட்களைத் தீர்த்துக் கட்டுதல் என்பன மாபியா கும்பலுக்கு கைவந்தகலை.

மாபியா கும்பலில் ஒரு முக்கிய புள்ளி கியாவானி ஃபிக்காரா.

இவனது கும்பலில் இருந்த பிரான் செஸ்கா கெமிலி என்ற இளம்பெண் கும்பலை விட்டு ஒதுங்கிப்போனாள்.

அவள் மூலம் இரகசியங்கள் கசிவதாக சந்தேகப்பட்ட கியாவானி அவளைத் தீர்த்துக் கட்ட தன் ஆள் ஒருவனை அனுப்பினான்.

தீர்த்துக்கட்டச் சென்றவன் அவள் அழகைக் கண்டு பிரமித்து நின்றான். துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப் போனவனை, தன் விழியாலேயே சுட்டு வீழ்த்திவிட்டாள் பிரான் செஸ்கா.

இருவரும் காதலர்களாகினர். "உன்னைச் சுடத்தான் வந்தேன்... ஆனால்..." என்று உண்மையை உரைத்தான்.

இருவரும் பொலிசில் சரணடைந்தனர். தாங்கள் முன்னர் செய்த குற்றங்களைக் கூறி குறைந்த தண்டனையை எதிர்பார்த்து சிறையில் இருக்கின்றனர்.

வெளியே வந்ததும் காதல் வானில் சிறகடிக்கப் போகிறார்கள். சினிமாக் கதைபோன்ற நிஜக் கதைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

## சூப்பர் ஸ்டாரின் காதலிகள்



நடைபெற்று வரும் கால்பந்து போட்டிகளில் சூப்பர் ஸ்டார் ரொனால்டோ. பிரேஸிலின் இந்த இளம் வீரர் கால்பந்தாட்டத்தில் மட்டுமல்ல. காதல் பந்தாட்டத்திலும் மகா கில்லாடி.

இவராக நாடிப் போய்வலை வீசியதும் உண்டு. அவர்களாக தேடி வந்து வலை வீசியதும் உண்டு.

ரொனால்டோவின் முதல் காதலியின் பெயர்: வெரோனிக்கா. பதின்மூன்று வயது.

பின்னர் ஹொலந்தில் கால்பந்தாட போனபோது, இவரை கண்களால் பந்தாடியவர் நாடியா ஃபிராங்கா. இருவரும் ஜோடியாக அலைந்தனர். நாடியா கருவுற்றார்.

"என் குழந்தைக்கு ரொனால்டோதான் தந்தை" என்று கூறினார். அதனை வன்மையாக மறுத்தார் ரொனால்டோ.

மரபணு சோதனை நடந்தது. ரொனால்டோ தந்தை இல்லை என்பது முடிவானது.

பின்னர் பி.எஸ்.பி. கால்பந்து அணியின் நிர்வாகியின் மகளை சிறிது காலம் காதலித்தார். பின்னர் திகட்டியதால் அந்தக் காதல் காற்றுப்போன பந்துபோல ஆகிவிட்டது.

தற்போது ரொனால்டோ சிரத்தையாக காதலித்து வருவது மொடல் அழகி சூசனோவை.

சூசனோ வெறும் மொடல் அழகி மட்டுமல்ல, பிரேசில் நாட்டில் உள்ள பெண்களுக்கான கால்பந்தாட்ட அணியின் வீராங்கனை.

யார் யாரை பந்தாடப் போகிறார்களோ தெரியவில்லை.

## டைட்டானிக் பிரிவு



உலகெங்கும் பேசப்படும் அளவுக்கு டைட்டானிக் கப்பலை காதல் காவியமாக்கி விட்டார் இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன்.

ஏற்கனவே 'டெர்மினேட்டர்' போன்ற பிரமாண்டமான படங்களை எடுத்தபோதும் கிட்டாத புகழ் 'டைட்டானிக்' மூலம் கிடைத்திருக்கிறது.

காதல் கதையை இத்தனை அருமையாக ஹொலிவூட் இயக்குநர்கள் வேறு யாரும் தரவில்லை என்று இளம் வட்டாரங்கள் கூறுகின்றனர்.

ஆனால், உலகம் வியக்கும் காதல் கதை சொன்ன ஜேம்ஸ் கெமரூனின் நான்காவது மனைவியும் சமீபத்தில் விவாகரத்துக் கோரியுள்ளார்.

'அவர் சினிமாவை மணமுடித்து வைத்திருக்கிறார். மனைவி என்ற ஒருத்தி இருப்பதையே மறந்து போகிறார்!' என்கிறார் நாலாவது மனைவி. ஏற்கனவே பிரிந்த மூன்று மனைவிகளும் இதே மாதிரித்தான் கூறிவிட்டுப் போனார்கள்.

## பந்து நடனம்



உலகக் கால்பந்து திருவிழா ஃபிரான்சில் நடைபெற்று வருகிறது. செக்சுக்கு பெயர்போன நாடு ஃபிரான்ஸ்.

இரவு விடுதிகள், வீதியோர அழைக்கும் அழகிகள், காபரே நடன அரங்குகள் என்று ஒரே அமர்க்களம்.

உலகெங்கும் இருந்து பல இலட்சம் இரசிகர்கள் ஃபிரான்சுக்கு படையெடுத்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை தவறவிடுவார்களா அழகிகள்?

இரவு விடுதிகளில் காபரே நடனத்துடன் சேர்ந்து, கால்பந்தை உதைத்து விளையாடும் நடனத்தையும் புதிய அம்சமாக இணைத்துள்ளனர்.

இரவு விடுதிகள் முன்பாக அரைகுறை ஆடை அழகிகள் கால்பந்தை உதைத்து ஆடும் விளம்பர சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ரசிகர்களை பந்தாட முடிவுசெய்து விட்டார்கள்.

## கண்டுபிடித்துவிட்டனர்



மனிதர்களுக்கு அதிகமான செக்ஸ் உணர்வை உருவாக்கும் ஜீன் (மரபணு) அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகளால் கண்டுபிக்கப்பட்டுள்ளது.

ஒருவரது அடிப்படைக் குணங்கள், தோற்றம் போன்றவற்றை ஜீரணிப்பது மனித செல்களில் இருக்கும் மரபணுக்கள்தான்.


இவை பரம்பரையாகத் தொடரும். ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு மரபணு பொறுப்பேற்கும்.

செக்ஸை தூண்டும் மரபணு எது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்தனர். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடிக்கு ஒருநாள் கூட செக்ஸ் இல்லாவிட்டால் தலைவலி வந்துவிடும். அவரே கூறிய தகவல் அது. கிளின்ரனுக்கும் அப்படித்தானோ தெரியவில்லை.

அதிகப்படியான செக்ஸ் உணர்வைத் தூண்டும் மரபணு எது என்பதை கண்டுபிடித்துவிட்டதால், இனிமேல் அதற்கான மருத்துவ மாத்திரைகளை கண்டுபிடிப்பது சுலபம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு அமெரிக்காவில் பரபரப்பை எற்படுத்தி உள்ளது.

www.padippakam.com



## எந்தளவு உயரலாம்?

↑ உலகில் இன்று அதி உயர மனிதர் என்று கின்னஸில் அங்கீகரிக்கப்பட்ட முகமட் ஆலம்கான் இங்கு சராசரி உயரமான இருவர் மத்தியில் காணப்படுகிறார். இவர் பற்றிய விபரங்கள் முரசு வாசகர்கள் அறிந்ததே. இவரது உயரம் 7 அடி 7 1/4 அங்குலம்.

சராசரி உயரமான பெற்றோருக்கு பிறப்பவர்கள் எப்படி அதி உயரமாக வளருகின்றனர்? உடலில் உள்ள சில சுரப்பிகளின் மாறுபாடான செயற்பாட்டால் ஏற்படும் கோளாறுதான் இது.

இப்படி அதி உயரமாக வளர்பவர்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருப்பார்களா? இல்லை. 18 முதல் 24 வயதுவரையுள்ள காலப்பகுதியில்தான் இந்த அசாதாரண வளர்ச்சி ஏற்படுகிறது. அதனால் குறிப்பிடப்பட்டளவுதான் உயரமுடியும். தென்னை மரம் அளவு வளருவதற்கு காலம் போதாது. இல்லாவிட்டால் வளர்ந்து வானத்தை நலம் விசாரித்துவிடுவர்.

இந்த அசாதாரண வளர்ச்சிக்கு காரணமான சுரப்பிகளின் கோளாறான செயற்பாட்டை அறுவைச் சிகிச்சை மூலம் தடுக்க தற்போது வழி கண்டுள்ளனர்.

உலகில் அதி உயரமானவர் றோபேர்ட் பேர்சில் வட்லோவ். 8 அடி 11 1/10 அங்குலம். அமெரிக்கர். தனது 22 வது வயதில் 15 ஜூலை 1940ல் மண்டையைப் போட்டுவிட்டார்.

அடுத்தவர் சீனப்பெண்மணி, பெயர்: ஸெவ் ஜின்லியான். 8 அடி 1 3/4 அங்குலம். 1982ல் தனது 18வது வயதில் இறந்துவிட்டார்.

பெண்களில் இன்று உயிருடன் இருக்கும் உயரப் பெண்மணி சான்லி அலன். 7 அடி 7 1/4 அங்குலம். அமெரிக்கர்.

உலகிலேயே உயரமான தம்பதி என்ற பெருமையைப் பெற்ற இருவரும் இன்று உயிருடன் இல்லை. 1871 ஜூன் 18ல் இவர்களது திருமணம் நடைபெற்றது. பெண்ணின் உயரம் 7 அடி 5 2/5 அங்குலம். கனடாவைச் சேர்ந்தவர். பெயர் அன்னா. கணவர் பெயர் மார்ட்டின். 7 அடி 2 3/4 அங்குலம். அமெரிக்கர். என்ன உயரமான தகவல்கள் போதுமாங்கோ!

## மரம் காய்ந்து போனால்



→ மரம் சாய்ந்து போனால் விறகாகலாம் என்று தெரியும். மரம் காய்ந்து போனால் என்னாகும் தெரியுமா? கல்லாகும்!

முறைக்காதீர்கள். இயற்கையின் எத்தனையோ விசித்திரங்களில் அதுவும் ஒன்று. இங்கிலாந்தில் ஸ்டேன்டன் ட்ரியூ பகுதியில் ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 'ஓக்' மரங்கள் இன்று கல்லாக மாறி நிற்கின்றன.

எமது அயல் நாடான இந்தியாவில் உள்ள புதுவை மாநிலத்திலும் கல்லாக மாறிய மரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.


மரம் நிலக்கரியாவதும், கல்லாக மாறுவதும் இயற்கையின் விநோதங்கள். ■

↓ பிரிட்டனில் நடைபெற்ற 'ஃபாஷன் ஷோ' ஒன்றில்தான் இந்த முடி அழகிகள் தரிசனம் கொடுத்தனர்.

இந்த அலங்காரங்களை வடிவமைத்தவர் பிரிட்டனைச் சேர்ந்த தொப்பி வடிவமைப்பாளர் பிலிப்ட்றெய்சி.

அழகிகளால் தொப்பிகளுக்கு அழகா? தொப்பிகளால் அழகிகளுக்கு அழகா? அப்படியும் சொல்லலாம். இப்படியும் சொல்லலாம் என்கிறீர்களா? நீங்கள்தான் நடுநிலைவாதி! (தகவல்: அருண்)

## முடி அழகிகள்



↓ என்னதான் அனலாக வெய்யில் அடித்தாலும் அதற்காக இப்படியா? என்று நினைக்கிறீர்கள்தானே. சமாச்சாரம் அதுவல்ல. பிறந்தநாள் உடையுடன் குழுவாக நின்று போஸ் கொடுப்போருக்கு ஆயிரம் பவுண்ட்டுகள் தரப்படும் என்று இலண்டன் 'சன்' பத்திரிகை விளம்பரம் செய்தது.

திருவிளையாடல் தருமிபோல பணத்துக்கு ஆசைப்பட்டு இப்படி பளீர் போஸ் கொடுத்துவிட்டனர். இவர்கள் அத்தனைபேரும் இலண்டனில் உள்ள விளம்பர நிறுவனம் ஒன்றின் மொடல்கள். இடுப்புக்கு கீழே மட்டும் கொஞ்சூண்டு உடை போட்டிருக்கிறார்கள். ஆனால் போடவேயில்லை. முழுக்க முழுக்க பிறந்தநாள் கோலம்தான் என்கிறார்கள். துணிச்சல்தான்! ●

## ஆயிரம் 'பவுண்ட்' பரிசு





## முயல் வேட்டை

← மாவீரன் நெப்போலியனின் கடைசிப் போர்க்களம் வாட்டர்லூ. பிரிட்டனில் வாட்டர்லூ கோப்பைக்காக வித்தியாசமான போட்டி ஒன்றை நடத்துகின்றனர்.

நாய் முயல் விளையாட்டு. முயலை ஓட விட நாய் துரத்தி வேட்டையாட வேண்டும். குறைந்த நேரத்தில் துரத்தி முயலைக் குதறும் நாய்க்கே வெற்றிக் கோப்பை. பயங்கரமான வேட்டை நாயான 'கிரேய் ஹவுண்ட்' இன வேட்டை நாய் ஒன்று முயலை துரத்திச் செல்லும் காட்சிதான் படத்தில் உள்ளது. இரையைக் கவ்வும் ஆவேசத்துடன் பாய்கிறது.

இந்தப் போட்டிக்கு அங்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது. மிருக வதை எதிர்ப்பாளர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். ஆனாலும் 'முயல் வேட்டை'ப் போட்டிகள் வருடா வருடம் நடந்து வருகின்றன. (தகவல்: அருண்) ●

## தகவல் பெட்டி





## சுற்றி வளைப்பு

← துள்ளியோடும் மான்மீது மலைப்பாம்புக்கும் மையல்! காத்திருந்து மடக்கிவிட்டது.

பாய்ந்துவந்த மானின் உடலை சுற்றிவளைத்து தழுவிக் கொண்டது. இது மரணத் தழுவல். மானின் கதை முடியும் கடைசிக் கட்ட காட்சி. மான் கதை முடியும் நேரமிது! ■

## சிற்பிக்குள் முத்து

↑ தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி முக்கால் செஞ்சுரி போட்டிருக்கிறார். 75 வயது!

திருக்குவளை என்ற ஊரில் பிறந்து, தமிழ்க் கடலில் நீந்தி வந்தவர் பவளவிழாக் கண்டிருக்கிறார்.

அவரது பவளவிழாவை முன்னிட்டு சென்னைக் கடற்கரையில் வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது.

பவளவிழாவுக்கு பொருத்தமாக முத்துச் சிற்பி வடிவத்தில் மேடை அமைத்து அசத்திவிட்டனர். சிற்பிக்குள் முத்து இருக்கும். இந்த சிற்பிக்குள் முத்துவேலரின் மகனான கருணாநிதியை அமரவைத்தனர்.

அவரது அரசியலை நிராகரிப்பினும் தமிழ்ப் புலமையை நிராகரிக்க இயலாது. ■



படிப்பகம்

www.padippakam.com

# காதோடு சொல்லுகிறோம்

படப்பிடிப்பு ஆரம்பமான தினத்தன்று 'பா' நடிகர் சீண்டியதால் முரண்டு பண்ணினார் கீர்த்தி மிக்க நடிகை. படப்பிடிப்பு ஆரம்பமாக முன்னரே உயரமான நடிகர் நட்பு கொள்ள அழைத்ததால் அங்கும் முரண்டு பிடித்தார். அப்படத்திலும் 'கட்'. "என் மகள் தங்கள் போக்குக்கு இசையவில்லை என்பதால் நீக்கிவிட்டு, என்மகள் மீதே குற்றம் சொல்லுகிறார்கள். இந்த சினிமா உலகையே நம்பமுடியவில்லை". என்று கூறுகிறார் நடிகையின் தாய்க்குலம்.

மூன்றெழுத்து இளம் நடிகர் படுக்கையில் விழுந்ததும் சிலர் கதைகட்ட ஆரம்பித்தனராம். இனி நடிக்கவே முடியாது என் உயிர்த்தோழன் ஹீரோ பாபு போல நீண்டகாலம் ஓய்வில் இருக்க வேண்டிவரும். என்றெல்லாம் வதந்திகள் கிளப்பி விடுகிறார்களாம். 'விரைவில் வந்துகலக்கத்தான் போகிறார். முதல் விருந்து கொடுப்பதே நான்தான்' என்று சங்க நடிகை உறுதியாக கூறிக் கொண்டிருக்கிறார். நடிகர் விரைவாக குணமடைந்து விடுவது உண்மை.

ரஞ்சிதமான நடிகையின் திருமணத்தில் அவருடன் ராசியாக இருந்த முக்கிய நடிகர்கள் தலைகாட்டவில்லை. ராதிகா, ரேவதி, தவிர முன்னணி நடிகைகள் கூட எட்டிப் பார்க்கவில்லை. விரைவில் கணவருடன் புதுடில்லிக்கு பறக்கப்போகிறார். கணவர் இராணுவ உத்தியோகஸ்த்தர்.

அந்த நட்சத்திர தம்பதியின் கலைக்குடும்பத்தில் அடுத்த வாரிசும் அமோகமாக தயாராகிவிட்டார். 'பேபி' நடிகையாக இருந்த அந்த 'தேவி' இன்று பூத்துக் குலுங்குகிறார். தமது வழக்கமான பாணியில் அவருக்கும் வாய்ப்புத் தேடுகிறார்கள் தம்பதியர்.

உடை ஒன்றின் பெயர் கொண்ட படத்தில் நடித்த நடிகருடன் மற்றொரு உலக அழகியையும் நடிக்க வைக்க படநிறுவனம் ஒன்று முயன்றதாம். நடிகர் ஐஸ் நடிகைக்கு ஐஸ் வைத்ததை அறிந்திருந்தார் அழகி. அதனால் நடிகருடன் இணைய முடியாது என்று மறுத்துவிட்டாராம்.

மூன்றெழுத்து 'ரா' நடிகரும் சூப்பர் சாந்தியும் நெருக்கம் என்பதும், நடிகையின் முழுக்கட்டுப்பாட்டில் அடங்கி நடப்பவர் நடிகர் என்பதும் தெரிந்த சங்கதி. தன் கட்டளையை மீறாமல் இருக்க நடிகருக்கு விலை உயர்ந்த பரிசு ஒன்றை வழங்கியுள்ளாராம் சூப்பர் சாந்தி. நடிகர்கள் தான் நாயகிகளுக்கு பரிசுகொடுக்க வேண்டுமா என்ன?

## ரஜினியுடன் ஐஸ்வர்யா ராய்

ரஜினியின் அடுத்த படத்தில் அவருடன் ஜோடி சேர சிம்ரான், ப்ரீதா விஜயகுமார் என்று ஒரு பட்டாளமே காத்திருக்கிறது. ஆனால் ரஜினியின் பார்வை உலக அழகி ஐஸ்வர்யா பக்கம் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

'ஜீன்ஸ்' படத்தில் ஐஸ்வர்யா ராயின் எடுப்பான நடிப்பு ரஜினியைக் கவர்ந்துவிட்டதாம். எல்லோருடனும் நடித்தாகிவிட்டது. உலக அழகியுடனும் நடித்துப் பார்ப்போமே என்றும் நினைத்திருக்கலாம்.

படத்தை இயக்கப்போவது கே.எஸ்.ரவிக்குமார். 'ராம கிருஷ்ணா' என்று பெயர் வைக்க நினைத்திருந்தார். அதே பெயரில் கார்த்திக் ஒரு படத்தில் நடிக்க இருப்பதால் 'கிருஷ்ணா' என்று பெயர் சூட்ட உள்ளனர்.

இதெல்லாம் ரஜினி தன் வாயால் கூறுகிறவரை உறுதிப்படுத்தப்படாத செய்திகள்தான். சஸ்பென்ஸ்... சஸ்பென்ஸ்!



சரத்குமார்-சிம்ரான்
படம்: நட்புக்காக

## தூக்கப்படும் நடிகை

'தேவதை' பட நாயகி கீர்த்தி ரெட்டிக்கு தூக்கப்படும் ராசி. முன்னர் 'கல்யாண சுந்தரம்' படத்தில் இருந்து தூக்கப்பட்டார். தற்போது 'பொண்ணு வீட்டுக்காரன்' படத்திலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

சத்யராஜுக்கு பொருத்தம் இல்லை என்று காரணம் கூறித் தூக்கிவிட்டார்கள். 'இனியவளே' படம் வெளியாகியுள்ளது. இப்படத்தில் இருந்தும் தூக்கப்பட்டிருப்பார். பிரபு தலையிட்டு தடுத்துவிட்டாராம்.

## ஷாக் அடிக்குது

'என்றும் ஆனந்தம்' படப்பிடிப்பில் நாயகன் விக்னேசுக்கு ஒரே ஆனந்தம். அதற்கு காரணம் ரசிகா.

"ஷாக்...ஷாக்...அடிக்குது
டைம் பாம் வெடிக்குது
வப்டப் வப்பீட்டிலே
லவ் லவ் கேட்குதே..."

என்ற பாடல் காட்சிக்காக விக்னேசை இறுகத் தழுவியபடி ரசிகா ஆடிய ஆட்டத்தால் படப்பிடிப்பு குழுவினரே ஆடிப்போனார்கள். விக்னேஷ் என்ன பாடுபட்டிருப்பாரோ? ஷாக் அடித்திருக்கும்தான்.

## குஷ்புவின் தம்பி

குஷ்புவின் சிபாரிசால் அறிமுகமானவர் அவர் தம்பி அப்துல்லாகான். அவரும், புதுமுகம் சுப்ரஜாவும் ஜோடி சேர்ந்து நடிக்கும் படம் 'என் காதல் புதுசு'. புது இயக்குநர் கே. ஜீவன்ராஜ் இப்படத்தை இயக்குகிறார். ஜெய்கணேஷ் மலேசியா வாசுதேவன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## ஜாலி அல்ல

அப்பாஸ்-கௌசல்யா நடித்து திரைக்கு வந்துள்ள படம் 'ஜாலி'. லிவிங்ஸ்டன், குஷ்பு, மற்றொரு ஜோடி.. படம்பப்படமாகி தோல்வி கண்டுள்ளது. இயக்குநரின் பிழையால் கதை பிற்பகுதியில் ஆமை வேகத்தில் நகர்கிறது. முற்பகுதியில் மட்டும் கலகல. அப்பாஸின் மார்க்கெட்டை தகர்க்க என்று தான் இப்படியான படங்கள் எடுக்கிறார்களோ? ஜாலி படம் அப்பாசுக்கு ஜாலி அல்ல.

## 'செண்டிமெண்ட்'

பாரதிராஜா தன் முதல் படமான 'பதினாறு வயதினிலே' படத்தின் முதல் காட்சியை வீரபாண்டி மாரியம்மன் கோவில்தான் சுட்டாராம்.

இப்போது தன் மகனை வைத்து எடுக்கும் தாஜ்மஹால் படத்தின் முதல் காட்சியையும் அங்கு தான் சுட்டிருக்கிறார்.

திரையுலக மறுபக்கம் 61

## சரச நாயகனின் இரகசி...

### நட்சத்திர தம்பதி...

ஒரு ஹீரோவுக்கும் வடநாட்டிலிரு... வந்த நடிகைக்கும் இடையிலான உ... விரிசல். முதல்வரிடம் அந்த நடிகை து... என்றெல்லாம் பத்திரிகை ஒன்றில்... பரப்பாக வெளியான செய்தி உ... தானா? கேள்விகளைச் சும... கோடம்பாக்கத்தைச் சுற்றிவந்தோம்... வேண்டாம் என்ற நிபந்தனையுட... மனம் திறந்தார்கள்.

அந்த ஹீரோவை வைத்து ப... கோவை தயாரிப்பாளர் ஒரு... கிறார்:

"அந்த ஹீரோ பெண்கள்... பலவீனமானவர்தான். கவர்ச்சியாக நடிக்கக்க... நடிகர்களுடன் நெருங்கிப் ... என்றெல்லாம் பல்வேறு நி... மும்பை நடிகைக்கு விதித்... ஆனால் அந்த ஹீரோ... நடித்த கதாநாயகிகள் நெருங்கிப் பழகியது மட்... அதனால்தான் மும்... படைந்து 'இந்த ஆளை... நடு ஆத்துல விட்டுடு... ஒதுங்க ஆரம்பித்தார்... நடிகைக்கு நெரு... கள் கூறும் விஷயங்க... அவசரத்துக்கு உ... பொருள் மாதிரி... பண்ணினா என்ன... பண்ண முடியும்... அதுதான்... நேரடியா... ...



ராகுல்-பாவனா
படம்: ஜெயம்

## நக்மாவின் தங்கை

'லவ் டுடே', 'துள்ளித் திரிந்த காலம்' ஆகிய படங்களை இயக்கியவர் பாலசேகரன். அவர் அடுத்து இயக்கும் படத்திற்கு சூட்டியுள்ள பெயர் 'சொல்லிவிடு'

கதாநாயகன் புதுமுகம். பெயர் ரகுராம். கதாநாயகி ஜோதிகா. இவர் நக்மாவின் இரண்டாவது தங்கை.

முதலாவது தங்கை ரோஷினி. ஜோதிகா ஏற்கனவே இந்தியில் நடித்துக் கொண்டிருக்கிறார். 'காதலுக்கு மரியாதை' இந்தி தயாரிப்பில் கதாநாயகி ஜோதிகாதான்.

சரத் விவகாரத்தில் மூட் அவுட்டான நக்மா தன் தங்கைகளையும் விட்டை விட்டு விரட்டியடித்தது பழைய கதை.

'சொல்லிவிடு' படத்தில் மணிவண்ணன் பிரகாஷ்ராஜ், ரகுவரன், தாமு ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.

## ஜோடி சேர்க்க ஆசை

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியினரின் அருந்தவச் செல்வி ப்ரீதா விஜயகுமார் நடித்து வெளியான தெலுங்குப் படத்தை சூப்பர் ஸ்டார் ரஜினி பார்த்தாராம். ப்ரீதாவை நேரில் கண்டபோது மனம் திறந்து பாராட்டினாராம்.

ரஜினியின் அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக ப்ரீதாவை நடிக்க வைக்க விஜயகுமாருக்கும் மஞ்சுளாவுக்கும் ஆசையோ ஆசை. ரஜினியிடமும் சாடை மாடையாகத் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கம்போல சஸ்பென்சாக பார்க்கலாம் என்றிருக்கிறார்.

## அத்தை மகன்

தமிழில் தக்க வாய்ப்பு இல்லாமல், தெலுங்கு பட உலகப் பக்கம் சென்ற நடிகைகளில் ஒருவர் ரம்யா கிருஷ்ணன்.

கார்த்திக் ஜோடியாக மீண்டும் தமிழ்ப்பட ரசிகர்களை சந்திக்கப்போகிறார். சி.சுந்தர் இயக்கும் 'அத்தை மகன்' படத்தில் கார்த்திக் ஜோடி ரம்யாகிருஷ்ணன்.

சிவகுமார், மணிவண்ணன், ஆனந்தராஜ், தாமு, டெல்லி கணேஷ், காகா ராதாகிருஷ்ணன் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: சிற்பி.

## பிரபுதேவா நாயகன்

சத்யராஜுக்கும் அவர் மனேஜர் ராமநாதனுக்கும் இடையில் உறவு முறிந்தது பழைய கதை.

இப்போது தனியாகப் படம் தயாரிக்கும் ராமநாதன், பிரபுதேவாவை கதாநாயகனாக ஒப்பந்தம் செய்துள்ளார். இப்படத்தை செல்வபாரதி இயக்கவுள்ளார். இசை: தேவா. மும்பை அழகி ஒருத்தியை அறிமுகம் செய்யப் போகிறார்கள்.

## நட்புக்காக

நக்மா மும்பை சென்று தங்கிவிட்டதால் சிம்ரானுக்கு போட்டியாளர்களில் ஒருவர் குறைந்துவிட்டார். இப்போது ரம்பா, மீனா ஆகியோரை ஓரம் கட்டி படுவேகமாக முன்னேறி நிற்கிறார் சிம்ரான்.

'நட்புக்காக' படத்தில் சரத்குமாருடன் நடிக்கையில் அவருடன் நட்பாகி விட்டதுதான் சிம்ரானின் சமீபத்திய சாதனை. சிம்ரான் நட்புக்காக எதையும் செய்ய கூடியவர்.



அக்ஷரா
படம்: பிரார்த்தனா

## துணை நடிகை

காதலுக்கு மரியாதை படத்தில் ஷாலினி கதாநாயகி. முன்னாள் குழந்தை நட்சத்திரமான ஷாலினியை நாயகியாக நடிக்க வைத்தவர் பாசில்.

ஷாலினியின் தங்கை ஷாமிலியும் துடுக்கான குழந்தையாக பல படங்களில் நடித்தவர். இப்போது வளர்ந்துவிட்ட ஷாமிலியை தனது படம் ஒன்றில் துணை நடிகையாக நடிக்கவைக்கிறார் பாசில். அப்படத்தில் மம்முட்டி-மோகன்லால் இருவரும் இணைந்து கலக்க உள்ளனர். மலையாளப் படம். பெயர் இன்னமும் சூட்டவில்லை.

## மீண்டும் க...

கதாநாயகன... னாக பிரபலமா... போது மறுபடி... நடிக்க வாய்ப்...

'வங்கக்... படத்தில் கதா... அவருக்கு ... இவர்களுட... விஜயா... சார்லி, வடி... யோர் ... றனர்.

www.padippakam.com

## ...ன் 'கலைச் சேவை'

நடிகை முணுமுணுக்க ஆரம்பித்தார். இங்கிலிஷ் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தார். இதில் என்ன தப்பு? மனம் திறந்து பேசின ஒரே குற்றத்துக்காக ஒரு பொண்ணை துன்புறுத்துவதும், பயமுறுத்துவதும் எந்த விதத்தில் நியாயம்?" இதுதான் நடிகையின் வட்டாரங்கள் கூறும் விஷயங்கள்.

### நட்சத்திர தம்பதி

இந்த நடிகையை மிரட்டி வருவதாகக் கூறப்படும் ஹீரோவுக்கும், மற்றும் பிரபலங்களுக்கும் கலைச்சேவை செய்துவரும் நட்சத்திர இலட்சியத் தம்பதியினைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்த போது ஏகப்பட்ட அதிர்ச்சித் தகவல்கள் கிடைத்தன.

உச்ச நட்சத்திரம் முதல் பல்வேறு நடிகர்களும், நடிகைகளும் இக் குடும்ப நண்பர்கள்.

பிரபலமான எந்த ஹீரோவும் தன்னுடன் நடிக்கும் நடிகை படிந்து வரவில்லை என்றால் இந்தத் தம்பதிகளிடம் மனு தந்து விட்டால்போதும். மற்றதை இவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

பெரும்பாலான நடிகர்களின் கேளிக்கை மாளிகை இந்த இலட்சிய தம்பதிகளின் வீடுதான். அங்கு விஜயம் செய்யாத வி.ஐ.பி.களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

இந்தத் தம்பதியின் மகள் தெலுங்கில் கதாநாயகியாக நடித்து ஒரு படம் வந்தது. அந்தப் பட இயக்குநர் இப்போது தம்பதியின் வீட்டில் குடியேறிவிட்டாராம். அந்த இயக்குநரின் சம்பளத்தை சமீபத்தில் அம்மணியே போய் தயாரிப்பாளரிடம் கேட்டு வாங்கி வந்தாராம்.

இதேபோல் மாணிக்கமாய் படம் எடுத்த நடிகர் அந்த வீட்டுக்குள் நுழைந்து ஒட்டாண்டியாகி வெளியே வந்திருக்கிறார்.

இத்தனை புகழ்பெற்ற அந்தத் தம்பதியின் மிரட்டல் அடாவடித்தனம் நடிகையிடம் அதிகமாகிப் போனதும் அவர் அரசாங்க மேலிட உதவியை நாடினார். காதும் காதும் வைத்தாற்போல பாதுகாப்பாக மும்பைக்கு அனுப்பப்பட்டாராம்.

நடிகை இப்போது மும்பையில்தான் இருக்கிறார். தகுந்த பாதுகாப்பு கிடைத்தால்தான் சென்னை திரும்புவார். தற்போது பிரச்சனையில் உள்ள அந்த ஹீரோவுக்கும் நடிகைக்கும் காதல் வேகமாக வளர்ந்ததும் அந்தப் பிரபல நட்சத்திரத் தம்பதியின் வீட்டு குஞ் குஞ் அறை ஒன்றில்தானாம்.

### 'ஏ' ஜோக்

"அவர்கூட நடித்து பழகி அதெல்லாம் ரொம்ப நாளாகிவிட்டது. நடந்து முடிந்த பழங்கதையைப் பேசி உஷ்ணமாவதில் எனக்கு விருப்பமில்லை. இந்த உலகத்தில் நாம் நல்லது செய்தால் நல்லது நடக்கும். கெட்டது செய்தால் கெட்டது நடக்கும்" இது நடிகை ஹீராவின் விரக்தியான பதில்.

அவர் நிறைய 'ஏ'ஜோக் சொல்வார். மத்தபடி மோசமாக என்கூட நடக்கவில்லை. என்கூட நல்ல நண்பராக பழகினார் அவ்வளவுதான்" இது நடிகை வினிதாவின் பதில்.

"ஸாரி! அது பத்தி நான் எதுவும் பேசத் தயாரில்லை!" இது தேவயானியின் கோபமான பதில்.

மேற்கண்ட தகவல்கள் அத்தனையும் தமிழகத்தின் பிரபல வார சஞ்சிகை ஒன்றில் சமீபத்தில் வெளியானது. நடிகர் நடிகை யார் என்பது தெரிந்திருக்கும். நட்சத்திரத் தம்பதி பற்றி ஒரு 'க்ளு'. மனைவி நடிகையின் பெயருக்கும் மஞ்சளுக்கும் தொடர்பு இருக்கிறது.

## அரசியல் வாடை

கௌதமி பாரதிய ஜனதா கட்சியில் சேர்ந்திருப்பதால், அவரது திருமணமும் அரசியல் வாடையுடன் அமர்க்களமாக நடந்தேறியது.

ஜெயலலிதா உட்பட பாரதிய ஜனதா தலைவர்கள் பலர் ஆஜராகியிருந்தனர்.

ஆனால், கௌதமியுடன் நடித்த கமல், ரஜினி, பிரபு, சத்யராஜ், விஜயகாந்த் போன்ற திரையுலகப் பிரபலங்கள் சமூகமளிக்கவில்லை.

பழம்பெரும் நடிகை பானுமதி கலந்து கொண்டு வாழ்த்தினார்.

## கோதுமைக் கஞ்சி

குஷ்பு தினமும் படப்பிடிப்புக்கு செல்லும்போது கோதுமைக் கஞ்சிதான் குடிக்கிறார். முன்புபோல மூக்கு முட்ட ஒரு பிடி பிடிப்பதில்லை. சுந்தர்தான் உடம்பைக் குறைக்கச் சொல்லி இருக்கிறாராம். காதலர் கட்டளையைத் தட்ட முடியுமோ?

## ராணிமீது காதல்

அரவிந்தசாமி, மனிஷா கொய்ராலா இணைந்து நடிக்கும் இந்திப் படம், 'ராஜா கோ ராணி ஸே பியார் ஹோ கயா' (ராணிமீது ராஜாவுக்கு காதல்)

கமல் நடித்த 'சாணக்கியன்' படத்தை இயக்கிய ராஜீவ்குமார் தான் இயக்குகிறார்.

'பம்பாய்' படத்தில் ஜோடி சேர்ந்து பரிச்சயமான ஜோடி என்பதால் தூள் கிளப்புகிறார்களாம்.

## மீண்டும் எஸ்.எஸ்.ஆர்.

இலட்சிய நடிகர் என்று போற்றப்பட்டவர் எஸ்.எஸ். ராஜேந்திரன். நடிகை விஜயகுமாரியை மணம் செய்தவர். நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் நடிக்கப் போகிறார்.

'தர்மா' படத்தில் நேர்மையான பொலிஸ் அதிகாரி வேஷம். ஜெயலலிதாவால் ஒதுக்கப்பட்டவர்களில் ராஜேந்திரனும் ஒருவர். சினிமா அவரை மீண்டும் அரவணைக்கிறது.

## வில்லுப் பாட்டுக்காரி

பாரதி கண்ணன் இயக்கிவரும் படம் 'கண்ணாத்தாள்'. இப்படத்தின் கதையைக் கேட்டதும் ஈடுபாடாக இசை அமைத்ததுடன், தானே பாடல் ஒன்றை எழுதி பாடியுமுள்ளார் இளையராஜா.

இப்படத்தில் வில்லுப்பாட்டுக்காரியாக நடித்திருக்கிறார் குஷ்பு. ஒரேயொரு வில்லுப்பாட்டு காட்சியில் மட்டும்தான் நடித்திருக்கிறார்.

## சுருதி அங்கே

முகப்பில் இருப்பது சுருதியின் படம். 'கல்கி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர்.

முகப்பில் இருக்கும் படம் 'பெரிய மனுசன்' படத்திற்காக எடுக்கப்பட்டது. சில காட்சிகளின் பின்னர் சுருதியை விலக்கிவிட்டு, ரவளியை நடிக்கவைத்தனர்.

கவர்ச்சியான பாத்திரங்களுக்கு ஏற்றவரல்ல என்று கருதப்பட்டதால் சுருதியை தமிழ்ப்பட உலகம் ஓரம் கட்டியது. அதனால் பிறமொழிப் படங்களில் நடிக்கப் போய்விட்டார்.

## இந்தி அப்பாஸ்

ஐநூறுக்கு மேற்பட்ட படங்களில் நடன இயக்குநராக இருந்த தருண்குமார் 'பரம்பரை, 'தர்ம சக்கரம்' ஆகிய படங்களில் வில்லனாக நடித்துள்ளார். அவர் இப்போது இந்தியில் இயக்குநராகப் போகிறார். அப்படத்தின் கதாநாயகன் அப்பாஸ். கதை எழுதுபவர் பாக்யராஜ்.

## சிங்கப்பூரில் ஜீன்ஸ்

'ஜீன்ஸ்' படம் சிங்கப்பூரில் நன்றாக ஓடுகிறது. அங்குள்ள 32 திரையரங்குகளில் தினசரி 3 காட்சிகளாக இரண்டாவது மாதத்தை தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

முகப்பில்

சரத்குமார்

சுருதி



கமல்-தபு
படம்: சாக்ஷி 420 (இந்தி)



ஐஸ்வர்யா ராய்
படம்: தால் (இந்தி)

சினிவிசிட்

## வேண்டாம் கோமாளி

வெற்றிப் படங்கள் பல தந்த இயக்குநர் மு.களஞ்சியம். இவரது படங்களில் தொடர்ந்து நடித்து வருபவர் தேவயானி. அடுத்த படத்திலும் தேவயானி இருக்கிறார். ஜோடி கார்த்திக்.

படத்தின் பெயர்தான் பிரச்சனையாகியுள்ளது. 'கோமாளி' என்று பெயர் சூட்டி இருந்தார் களஞ்சியம். அதனை மாற்றுமாறு கோரியுள்ளார் கார்த்திக்.

## அப்பா-மகன்

நதியா, ரேவதி போன்ற நடிகைகளுக்கு பொருத்தமான ஜோடியாக வலம் வந்தவர் சுரேஷ். சமீப காலமாக தமிழ் படங்கள் சிலவற்றில் தலைகாட்டியிருக்கிறார். அதற்காக வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கிறார் என்று அர்த்தமல்ல. சுரேஷ் தெலுங்கில் பிஸி. இதுவரை தமிழ் தெலுங்கு உட்பட மொத்தம் நூற்றைம்பது படங்களுக்கு மேல் நடித்துவிட்டார். தற்போது 'யுவபாரதம்' என்னும் படத்தில் நடிக்கிறார். இதனை இயக்குபவர் கோபிநாத். இவர் சுரேஷின் அப்பா.

## நழுவிய படம்

மணிரத்னம் படமான 'தில்சே' யில் சிம்ரான்தான் நடிப்பதாக இருந்தது. இரண்டுநாள் நடித்தார். மூன்றாம் நாள் கும்பிடு போட்டுவிட்டனர்.

"படு பிஸி என்றதால் தேதிகள் ஒத்துவரவில்லை. அதுதான் பிரச்சனை" என்கிறார் சிம்ரான். ஆனாலும் மணிரத்னத்தின் படம்கை நழுவியதால் அம்மணிக்கு வருத்தம்தான்.

## தேடல்

ராம்கி கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஆனந்த பாண்டவரே. இப்படத்திற்கான கதாநாயகி தேர்வு நடந்து வருகிறது. அழகி தேடுகிறார்கள்.

## பிரிந்த அஞ்சு

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி கதாநாயகியாக, அம்மாவாக என்று பல்வேறு முகம் காட்டியவர் அஞ்சு. கன்னட நடிகர் பிரபாகரை லவ்வி கல்யாணம் பண்ணி இப்போது பிரிந்து கண்கலங்கி மறுபடியும் நடிக்க வந்துவிட்டார். சில மலையாளப் படங்களில் நடிக்கத் தொடங்கியுள்ள அஞ்சு தமிழ்ச் சினிமாவிலும் வாய்ப்புத் தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளார்.



பரத்குமார்-வினிதா
படம்: விடிவெள்ளி

## சாமியாரிடம்

ஒரு இளம் இயக்குநரை காதலித்து கல்யாணம் செய்ய தயாரானார் வடிவுக்கரசி. இளம் இயக்குநர் கடைசி நேரத்தில் கைவிரித்துவிட்டாராம்.

ஏமாந்துபோன வடிவுக்கரசி பிரபல சாமியார் ஒருவரை நாடி ஜோசியம் கேட்க, சாமியார் ஜோசியத்தையும் தாண்டி ஏதேதோ சொல்லிப் புலம்பி கைநீட்ட ஒருவிதமாக உருவிக் கொண்டு வந்துவிட்டாராம்.

## புது இரத்தம்

தமிழில் இளம் நாயகர்கள் கலக்குகிறார்கள். அதுபோல மலையாளப் பட உலகில் கலக்குபவர் குஞ்சாக்கோ போபன். இவருக்கு ஜோடியாக கஜோல் நடிக்கப் போகிறார். மம்முட்டி, மோகன்லால் போன்றோருக்கு வயதாகிவருகிறது புது இரத்தம் தேவைதானே?

## கமலின் புதுமை

மருதநாயகத்தில் யுத்தக் காட்சிகளை அட்டகாசமாக காண்பிக்கத் திட்டமிட்டுள்ளாராம் கமல்.

ஆயிரக்கணக்கான குதிரைகள், பல்லாயிரம் போர்வீரர்களை கொண்ட யுத்தக் காட்சிகளை இடம்பெறச் செய்யப்போகிறார்.

அத்தனை பேரை பிடித்து ஊதியம் கொடுப்பது எப்படி? கமலா? கொக்கா? ஹொலிவுட் தொழில்நுட்பம் ஒன்றை புகுத்தப் போகிறார்.

'பிரேவ் ஹார்ட்' என்ற ஆங்கிலப் படத்தில் யுத்தக் காட்சிகளை 'இமேஜ் குளோனிங்' என்ற முறையில் படமாக்கினார்களாம். அந்த முறையில்தான் 'மருதநாயகம்' படக் காட்சிகள் எடுக்கப்படப்போகின்றன.

அது என்ன இமேஜ் குளோனிங்? சில நூறு பேரை மட்டும் வைத்து படமாக்குவது. பின்னர் அதனைப் பலநூறாக பெருக்கிக் காட்டுவதுதான் இமேஜ் குளோனிங்.

www.padippakam.com

## கோடை காலக் கவிதை

வரண்டு போச்சு,
வரண்டு போன–
என் கிராமத்து
சில 'பெரிசு'களின்
மனசுகள் போல்....
இந்த பூமியுமிப்போ
வரண்டு போச்சு!
o
இரப்பவனிடமே கறக்கின்ற
சில 'வள்ளல்'கள் கூட
வானத்திடம் இரக்கின்ற
நிலையாய் போச்சு!
இந்த பூமியுமிப்போ
வரண்டு போச்சு!
o
வரண்டு போச்சு,
பூமி வரண்டே போச்சு!
ஆக,
பொழியாமலிருக்கின்ற
மழைக்குத்தான் ஏச்சு!
பாவம்,
மாரியாய் மழை
வந்தாலும் ஏச்சு;
கோடைக்கு கொஞ்சம்
குறைந்தாலும் ஏச்சு!
o
அடடா!
வா என்றால்
வருவதற்கும்;
போ என்றால்
போவதற்கும்
மழையொன்றும் உனக்கு
மனைவியில்லை மனிதா!
o
ஓ...
என் கிராமத்து 'தியாகி'களே!
எத்தனை மழை–
பொழிந்தாலும்
காய்ந்துவிட்ட
உங்கள் இதயங்கள்
இனி–
இளகப்
போவதேயில்லையென்று
மழைக்குக்கூட
தெரிந்துவிட்டதோ!?
o
இல்லை,
குருதி மழை–
பொழிவது கண்டு
மழை,
இந்தக் குட்டித் தீவோடு
கோபித்து விட்டதா?
o
எப்படியோ,
வரண்டு போச்சு!
வரண்டு போன
என் கிராமத்து–
சில 'பெரிசு'களின்
மனசுகள் போல்...
இந்த பூமியுமிப்போ
வரண்டு போச்சு!
o
ஆதலால்,
வாருங்கள்!
என் கவிதை படிப்பவர்களே...
வாருங்கள்!
வரட்சியின் உச்சத்தில்
புழுங்கிப் போய்க் கிடக்கும்
என் கவிதையின் மேனிக்கு
அவசரமாயொரு
விசிறி தாருங்கள்!!
o

யூஎல் மப்றூக்–
அட்டாளைச்சேனை.

## வந்ததும் வராததும்!

கோழி வந்தது
முட்டை வந்தது
ஹொண்டாவோடு
யமகா வந்தது
பயணிகள் செல்ல
பஸ் பல வந்தது
நிரந்தரமான
நிம்மதி வரவில்லை!

வகை வகையாய்
சோடா வந்தது
வாசமுள்ள பவுடரும்
பூச வந்தது
விஸ்கியோடு பிரண்டி
வந்தது!
குடித்தவருக்கு வெறியும்
வந்தது!
விடியலுக்கான
சமாதானம் வரவில்லை!

சீனி, மா வந்தது
சினிமா வந்தது
திரையரங்கில்
படமும் வந்தது
பார்த்தவருக்கு
பரவசம் வந்தது
நித்தியமான
நிம்மதி வரவில்லை!

ரெலி.:போன் வந்தது
ரெலெக்சும் வந்தது
"ஹலோ" எனக் கதைக்க
கிலோவில் காசும் வந்தது
மின்கும்.ழ் மிளிர
மின்சாரம் வந்தது
அற்புதமான
அமைதிவரவில்லை!

துரைசீலன்- யாழ்
மாவட்டம்.

## ஏக்கம்

அன்றும் ஏக்கம் இன்றும் ஏக்கம்
என்றும் ஏக்கம் தமிழனாய்ப்
பிறந்துவிட்டால்
என்று தணியும் இந்த ஏக்கம்
எங்கு காண்போம் என்றும் இன்பம்?

தமிழனாய்த் தமிழ் மண்ணிலே
இருந்துவிட்டால் நித்திரையிலும் ஏக்கம்
தமிழனாய்ப் பிள்ளை ஒன்றை
இம்மண்ணில் பெற்றுவிட்டாலும் ஏக்கம்!

அருமைக் கல்விதனைக் கற்றுவிட்டால்
கற்றதற்கே வேலை இல்லை என்றேக்கம்
வேலை ஒன்று கிட்டிவிட்டாலோ
மாற்றமுடன்
படியுயர்ச்சியும் இல்லை என்றேக்கம்

தாய் மண்ணைத் தவிக்கவிட்டே
தேசம் கடந்துவிட ஏக்கம்
வெளிநாடு போகவென்றே எம்
பணத்தைக் கொடுத்தாலும் ஏக்கம்!

வானூர்தி தரிக்குமிடம் அது
சென்றுவிட மனதினில் ஏக்கம்
வானூர்தியில் ஏறிவிட்டால் அங்கே
நாட்டினில் இறங்கிவிட ஏக்கம்

நம்பிய நாட்டில் எம்மை நன்
மனத்துடனே ஏற்பரோ என்றேக்கம்
நாட்டிற்குள் விட்டுவிட்டால் என்
நலமாய் நீதியுரைப்பரோ என்றேக்கம்

தொலைபேசி மணி அடித்தாலும் ஏக்கம்
சீட்டுக்கட்ட வா என்பாரோ என்றேக்கம்
கடன் கேட்பாரோ என்று ஏக்கம்
பணம் அனுப்பென்பாரோ என்றேக்கம்

சீட்டைக் கட்டிவிட்டால் அவர்களுடன்
கட்டுப்பணம் கிட்டுமா என்று ஏக்கம்!
கடனைக்கொடுத்து விட்டால் அவர்கட்கு
கொடுத்த கடன் கிடைக்குமா? என்றேக்கம்.

ஊற்று மைந்தன்– கனடா.

## நீ வருவாயா?

நாமெல்லாம் கண்விழித்துன்னை
–காத்திருக்க
நாய்கள் மட்டும் நள்ளிரவில்
–குரைத்திருக்க
வீட்டுக்கத வெல்லாம் பயப்பீதியால்
–அடைத்திருக்க
நாடெல்லாம் தன் நிறமிழந்து
–அழுதிருக்க
சிறைகள் மட்டுமே நமக்காக
–திறந்திருக்க
நீ மட்டும் எங்கு சென்றாய்?
ஏய் சமாதானமே! நீ வருவாயா?

அபிராமி வன்னியகுலம்- திருமலை.

தேன் கிண்ணம்

# உலக சாதனை எழுத்தாளர்



மனைவி பிள்ளைகளுடன்

ராஜேஸ்குமார்-இதுவரை எழுதி முடித்திருப்பது 995 நாவல்கள். இன்னமும் ஐந்து நாவல்கள் எழுதி முடித்ததும் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் பெயர் பொறிக்கப்படும்.

இந்த கிரைம் சக்கரவர்த்திக்கு சமூக நாவல்களும் கைவந்த கலை. இந்த வாரம் முதல் முரசில் ஆரம்பமாகும் 'முள் நிலவு' அதற்கு சான்றுதரும். சமூக நாவலையும் விறுவிறுப்பாக நகர்த்துவதில் சூரர்.

**25** வருட எழுத்துலக அனுபவம் இருக்கிறது. இலட்சோப இலட்சம் ரசிக, ரசிகைகளை பெற்றிருக்கிறார். உலக சாதனை படைத்த முதலாவது தமிழ் நாவல் ஆசிரியர் என்ற பெருமையும் விரைவில் சேரப்போகிறது.



நீ...ண்..ட வாசகர் கடிதம் ஒன்றுடன்



மற்றொரு பிரபல எழுத்தாளரான மறைந்த ராஜேந்திரகுமாருடன்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். இமாம்தீன்,
வயது: 19
முகவரி:
149, பிரதான வீதி,
மதவாச்சி.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
ஆர். குமுதினி,
வயது: 20
முகவரி:
16, 4ம் குறுக்குத்தெரு,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனாநட்பு.

## இந்த வாரம் உங்கள் பலன்

(28.06.1998 தொடக்கம் 04.07.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, கௌரவமிகுதி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| **புதன்**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், பணவரவு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- வெளியிடப்பயணம், உறவினர் உதவி. | பகல் | 11 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **சனி**- உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணிமிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 மணி |
| **புதன்**- இனசன நன்மை, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **சனி**- பெரியோர் பகை, மனக் கவலை. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நட்பு, கௌரவ மிகுதி. | பகல் | 11 மணி |
| **சனி**- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண் செலவு, கடன் படல். | மு.ப. | 11 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, கௌரவமிகுதி. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, கடன் தொல்லை. | மு.ப. | 10 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன். |
| கர்க்கடகம் | - புதன். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. |
| இடபம் | - செவ்வாய், வெள்ளி. |

சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், மனக் கவலை. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், அந்நியர் நட்பு. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| **சனி**- பெரியோர் பகை, துயர் மிகுதி. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 மணி |
| **சனி**- புதிய முயற்சி, கடன் படல். | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 மணி |
| **புதன்**- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **சனி**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- உயர்ந்த எண்ணம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- பிரயாண மிகுதி, கடன் சுமை. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, கௌரவமிகுதி. | பி.ப. | 1 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 11 மணி |
| **திங்கள்**- பெரியோர் சகாயம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- இனசன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**



படிப்பகம்

www.padippakam.com

## குடும்பத் தலைவிக்கு

### வரவுக்கேற்ற செலவு

'பணம் வருவதும் தெரியவில்லை. போவதும் தெரியவில்லை' என்று அநேகமான குடும்பத்தலைவிகள் அங்கலாய்ப்பதைக் காணலாம்.

எவ்வளவோ பணம் வரும். ஆனால் பலரால் சேமிக்க முடிவதில்லை. மாதச் சம்பளம் வாங்குபவர்கள் 20ம் திகதிக்குமேல் யாரிடம் கடன் கேட்கலாம் என்றபடி வாழத் தொடங்கி விடுகிறார்கள்.



இதற்கெல்லாம் என்ன நிவாரணம்? கடன் வாங்காமல் செலவு செய்வது எப்படி?

ஒரு மாதமாவது நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயையும் மறந்து விடாமல் குறித்து வையுங்கள்.

அப்படிக் குறித்து வைத்தால் எந்தெந்தப் பொருளுக்காக எவ்வளவு பணம் செலவழித்தோம் என்பது தெரியும். அதைப் பார்த்து அநாவசிய செலவுகளை இனங்கண்டு அவைகளைக் குறைப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

இரண்டு மாதச் செலவைக் குறித்து வைத்திருந்தால், மூன்றாவது மாதத்தில் செலவைக் கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம்.

பணம் கையில் இருக்கும் போது, அந்த மாதத்தின் கடைசி நாட்களைக் கடன் வாங்காமல் கழிக்கவேண்டும் என்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி வைக்க முன்வாருங்கள். பணச்செலவில் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால், ஓரளவாவது மாதக் கடைசிப் பிரச்சனைகளைத் தவிர்த்து விட முடியும்.

## எலுமிச்சை மருத்துவம்

எலுமிச்சம்பழம் ஏராளமான மருத்துவ குணங்களைக் கொண்டது.

* எலுமிச்சம்பழச்சாற்றில் சீனி போட்டு பருகுவதற்குப் பதில் சிறிதளவு உப்பு சேர்ப்பது நல்லது. உப்பு சேர்த்த எலுமிச்சம்பழச்சாறு உடல் சோர்வைப் போக்கும்.
* சோற்றில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து கிளறினால், அது இரண்டு நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
* சாலட்டில் தயிர் சேர்ப்பதற்குப் பதில் எலுமிச்சம்பழச்சாறு சேர்த்தால் ஆரோக் கியத்திற்கு நல்லது.
* பச்சைக் காய்கறிகளில் சிறிதளவு எலுமிச் சம்பழச்சாறு கலந்து வேக வைத்தால் காய்கறிகளின் இயற்கை நிறம் சிதையாது.
* எலுமிச்சம் பழத்தை வெட்டி ஃபிரிட்ஜில் வைத்தால், ஃபிரிட்ஜில் மோசமான வாடை வீசாது.
* தேயிலைச் சாறுடன் எலுமிச்சம்பழச்சாறு கலந்து குடித்தால் வயிற்றுக்குச் சுகம் கிடைக்கும்.
* துணிகளில் ஏற்படும் சிலவகைக் கறைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் நீக்கிவிட முடியும்.
* எலுமிச்சம்பழச்சாற்றை ஃபிரீசரில் வைத்துக் குளிரவிட்டு, முகத்தில் புரட்டினால் முகத்தின் மெருகு கூடும். தினமும் புரட்டக் கூடாது. ஒருநாள் விட்டு ஒருநாள் தேயுங்கள்.
* எலுமிச்சம்பழச்சாறும், கிளிசரினும் சேர்த்து சருமத்தில் தேய்த்தால் 'பளிச்' சென்ற நிறம் கிடைக்கும்.



* எலுமிச்சம்பழச்சாறும், தேங்காய் எண்ணெயும் சம அளவு கலந்து தலையில் தேய்த்தால் பொடுகு மறையும்.
* எலுமிச்சம்பழச்சாறும், சீனியும் கலந்து உள்ளங்கையில் தேய்த்தால் கைக்கு மிருதுத்தன்மை கிடைக்கும்.
* தினமும் 1/2 கப் எலுமிச்சம்பழச் சாறு குடித்தால், உடல் பெருக்காமல் தடுத்து விடலாம்.
* எலுமிச்சம்பழத்தோலைக் காயவைத்து தூளாக்கி சோஸ் மற்றும் ஃபுறூட் சாலட்டுக்களில் சேர்த்தால் அதிக சுவை கிடைக்கும்.
* எலுமிச்சம்பழத் தோலைக் காயவைத்துத் தூளாக்கி தீக்கனலில் போட்டால் வீட்டின் உள்ளே சுகமான மணம் பரவும்.
* மீன் வாடை கையில் ஏற்பட்டால், எலுமிச்சம்பழத்தோலைத் தேய்த்துக் கழுவினால் உடனடியாக நீங்கி விடும்.

## மூக்கில் இரத்தமா? பயப்படாதீர்கள்

சிறுவர் சிறுமியரின் மூக்கில் இருந்து திடீரென்று சிறிதளவு இரத்தம் வெளியேறும். 'அய்யய்யோ குழந்தைக்கு ஏதோ ஆகிவிட்டதே' என்று பலரும் பதறுவார்கள். பொதுவாகவே மூக்கில் இருந்து இரத்தம் வெளியேறுவதைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை.



சிறுவர்கள் ஓடி விளையாடும் பருவத்தில் எங்கேயாவது முட்டி மோதி காயம் ஏற்படுவதன் மூலம் மூக்கில் இருந்து இரத்தம் வெளியேறும். மூக்கின் உள்ளே விரலைப் போட்டுக் குடைவதன் மூலமும் தொடர்ந்து மூக்கைச் சீந்துவதன் மூலமும் மேலும் சிறிது இரத்தம் வெளியேறக்கூடிய நிலை ஏற்படும்.

காரணம் எதுவும் இல்லாமல் கூட மூக்கில் இருந்து இரத்தம் வெளியேறும். சில குழந்தைகளுக்கு மூக்கின் உள்ளே உள்ள இரத்தக் குழாய்கள் பலகீனமானதாக இருக்கும். அதனாலும் மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறும்.

அதற்கு நீங்களே சாதாரண முறையில் வைத்தியம் பார்க்கலாம்.'

எப்படி?

மூக்கின் இருபகுதியையும் பிடித்து அழுத்தி, கெட்டி நிற்கும் இரத்தம் அனைத்தையும் வெளியேற்றுங்கள். குறைந்தது பத்து நிமிட நேரமாவது அவ்வாறு செய்ய வேண்டும். குழந்தை மூக்கின் வழியாக இரத்தத்தை மேலே இழுத்து விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

பத்து நிமிடமாகியும் இரத்தம் நிற்காவிட்டால் குளிர்ந்த நீரில் முக்கிய துணியையோ, ஐஸ் கட்டியையோ மூக்கின் மேற்பகுதியில் இரண்டு நிமிடம் வையுங்கள். மீண்டும் மூக்கைச் சீந்தி இரத்தத்தை வெளியேற்றி விடுங்கள்.

இரத்தம் வருவது முழுமையாக நின்ற பிறகு குறைந்தது நான்கு மணி நேரமாவது வேகமாக மூக்கைச் சீந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DY

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-07-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




## கண்ணீரில் கரைந்த இரவுகள்

புவனா

'டயானாவும் சாள்ஸும் தனிமையில் சந்தித்து மனம்விட்டுப் பேசினர்', என்ற செய்தி பெரிதாக வெளியாகி இருந்தது.

இருவர் மத்தியிலும் நிலவிய பிணக்குத் தீர்ந்தது என்று மக்கள் நினைத்தனர்.

"சாள்ஸை சந்தித்துப் பேசிய அன்று இரவுதான் நான் நிம்மதியாகத் தூங்கினேன்!" என்று தன் சிநேகிதிகளிடம் டயானா கூறியிருந்தார். விவாகரத்துக்கு சாள்ஸ் சம்மதம் தெரிவித்ததே நிம்மதிக்குக் காரணம்.

சாள்ஸ் எதிர்பார்த்ததுக்கு மாறாக டயானாவின் முகம் பிரகாசமடைந்தது. கண்களாலேயே நன்றி சொன்னார் டயானா.

அதனால் சாள்ஸின் முகம்தான் இருண்டுவிட்டது.

டயானாவுக்கும் தனக்கும் நடந்த சந்திப்புத் தொடர்பாக மகாராணியிடம் சாள்ஸ் விளக்கிக் கூறினார்.

டயானா எதற்கும் தயாராக இருப்பதையும், விவாகரத்து அவருக்கு மகிழ்ச்சியைத் தரும் என்பதை தான் நேரில் உணர்ந்த



கரோலினுடன் டயானா

இருவரது சந்திப்புத் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் டயானாவின் நினைப்புக்கு மாறாக இருந்தன.

அரச குடும்பம் என்ற நரகத்தில் தொடர்ந்து வாழ டயானா இணங்கிவிட்டது போல சில பத்திரிகைச் செய்திகள் சித்தரிக்க முனைந்தன.

அச் செய்திகளுக்கு பதிலாக உண்மையைத் தெரிவிக்கத் தவறினால் டயானா குற்றவாளியாக மாறுவார்.

இணங்கிவாழச் சம்மதம் தெரிவித்துவிட்டு பின்னர் மனம் மாறியவராக டயானா மீது பழிவிழும் என்றெல்லாம் அவரது சிநேகிதிகள் உஷார்படுத்தினார்கள்.

அதன் பின்னர் டயானாவின் நெருங்கிய சிநேகிதி ஒருவரது கணவர் மூலமாக பத்திரிகைகளுக்கு தகவல் தரப்பட்டது.

### மகாராணியின் நினைப்பு

சாள்ஸ், டயானா சந்திப்பில், 'விவாகரத்துக்கு இருவரும் இணக்கம்' என்று செய்திகள் வெளியாகின.



செய்தியைப் பார்த்ததும் மகாராணியும் அரச குடும்பத்தினரும் அதிர்ச்சியடைந்தனர்.

டயானா விடயத்தில் தாங்கள் போடும் திட்டங்கள் எல்லாம் தோல்வியைத் தழுவி வருவதை எண்ணிச் சினந்தனர்.

சாள்ஸ்-டயானா இருவரும் பிரிந்து செல்வதற்கு அனுமதியளிக்க ஆயத்தமாக உள்ளவர் போன்றே மகாராணி முன்னர் நடந்து கொண்டார்.

அரச குடும்ப உறவைத் துண்டிக்க டயானா மனப்பூர்வமாக விரும்பமாட்டார்.

சாள்ஸுடன் ஒன்றிப்போக முடியாவிட்டாலும் இளவரசி என்ற அந்தஸ்த்தையும், நாளை காத்திருக்கும் ராணிப் பட்டத்தையும் இழக்க யார்தான் முன்வருவர்?

'ஒரு வீறாப்புக்காகத்தான் விவாகரத்துப் பற்றி டயானா பேசுகிறார், விவாகரத்து வழங்கத் தயார் என்று ஒரே போடாகப் போட்டுவிட்டால் பின்னர் அடங்கிவிடுவார்.' என்றே மகாராணி நினைத்தார்.

சாள்ஸ்கூட விவாகரத்துக்கு டயானாவிடம் சம்மதம் தெரிவித்தபோது டயானாவின் முகபாவங்களை எடைபோட முயன்றார்.

'நான் சம்மதிக்க மாட்டேன், சம்மதித்தால் அரசர் பதவி கிடைக்காமல் போய்விடுமே என்று அஞ்சுவேன்?' என்று நினைத்திருப்பாளோ, என்ற சந்தேகமும் சாள்ஸுக்கு இருந்தது.

அதனால் சம்மதம் கூறிவிட்டு டயானாவின் முகக்குறிப்பை ஆழ்ந்து கவனித்தார்.

அரச குடும்பத்தினருக்கான சிறப்பு ஆசனங்களில் கமீலாவும் கணவரும் அமர்ந்திருந்தனர்.

### பிரபுக்கள் சீற்றம்

'டயானாவின் கதை' பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருப்பதை அலட்சியம் செய்வதுபோல, அரச குடும்பம் பாசாங்கு செய்ததெல்லாம் வெளிப்பூச்சுக்குத்தான்.

அரச குடும்பமும், அதன் ஆதரவாளர்களான பிரபுக்கள் பலரும் உள்ளூர சீற்றம் கொண்டனர்.

புனிதர்களாகவும், ஏனைய மக்களைவிட உயர்ந்த நிலையில் உள்ள உதாரண புருஷர்களாகவும் காட்டிக்கொண்டு, சுகபோகங்களை அனுபவிக்கும் தங்கள் முகமூடிகள் கிழித்து வீசப்படுவதை அவர்கள் எப்படி ஜீரணிப்பர்?

பிரிட்டிஷ் அரச குடும்பம் என்றால் வானத்தில் இருந்து வந்திறங்கிய பரிசுத்தமானது என்று சாதாரண மக்கள் நம்பிக் கொண்டிருந்தால்தான், மக்களின் வரிப் பணத்தில் உல்லாசத்தில் புரளமுடியும்!

டயானாவின் கதையை எழுதிய பிரபல எழுத்தாளர் அண்ட்று மோட்டனை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும், என்று பிரபுக்கள் கொக்கரித்தனர்.

அரச குடும்பம்தான் பிரபுக்களின்

## மகாராணி நடத்திய நாடகம்

தாகவும் சாள்ஸ்கூறக் கூற, மகாராணிக்கு கவலை பிடித்துக்கொண்டது.

சாள்ஸ் அலட்டிக் கொள்ளவில்லை. டயானாவுடன் சந்திப்புப் பற்றிய செய்திகளும், டயானாவின் கதையும் பத்திரிகைகளில் வெளியாகி அரச குடும்ப மானத்தைக் கப்பலேற்றிக் கொண்டிருந்தன.

ஆனால் சாள்ஸ் வின்சர் பூங்காவில் போலோ விளையாட்டில் பங்குபற்றச் சென்றார்.



அந்த நிகழ்ச்சிக்கு மகாராணியே பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் டயானாவின் கதை வெளியாகி பரபரப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

பிரிட்டனில் மட்டுமன்றி அப் பத்திரிகை செல்லும் நாடுகள் எங்கும் அரச குடும்ப அந்தரங்கங்கள் அம்பலமாகிக் கொண்டிருந்தன.

அக் கதை வெளியாவதால் தனக்கோ, தன் தாயாரான மகாராணியாருக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்பதுபோல காண்பிக்கவே போலோ விளையாட்டில் இருவரும் கலந்து கொண்டனர்.

### கமீலாவுக்கு அழைப்பு

இன்னொரு காரியமும் செய்திருந்தார் மகாராணியார்.

சாள்ஸின் உள்ளம் கவர் கள்ளியான கமீலாவையும் அவள் கணவர் பார்க்கரையும் தம்பதியாக வந்து கலந்துகொள்ள தன் சார்பாக அழைப்பு அனுப்பி வைத்தார்.

அவர்களும் வந்து கலந்து கொண்டனர். பார்க்கர் சாள்ஸுடன் சிரித்து அளவளாவிக் கொண்டிருந்தார்.

இது எல்லாமே ஒரு நாடகம் போலவே தென்பட்டது.

கமீலாவுக்கும் சாள்ஸுக்கும் காதல் என்றால், கமீலாவும் பார்க்கரும் எப்படி இன்னமும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்? பார்க்கர் சாள்ஸுடன் அன்னியோன்னியமாகத்தானே இருக்கிறார்?

'மொத்தத்தில் எல்லாமே கட்டுக் கதைதான்' என்று காண்போர் கருதும் விதமாக மகாராணி நடத்திய நாடகம் அது.

குரலில் தன் ஆற்றாமையை வெளியிடுகிறது என்று டயானாவின் நெருங்கிய வட்டாரங்கள் பதிலடி கொடுத்தன.

### தாறுமாறான விமர்சனம்

இத்தனை சர்ச்சைகள் மத்தியில் அரண்மனைக்குள் இருப்பது டயானாவுக்கு கூரிய ஆணிகள்மீது நடப்பது போலிருந்தது.

எல்லோரும் அவரை முறைத்து முறைத்துப் பார்த்தனர். ஆணியடிக்கின்ற பார்வைகள்.

அங்கேயே அடைந்து கிடந்தால் பைத்தியம் பிடித்துவிடும் என்று, தன் சிநேகிதியான கரோலின் என்பவரது இல்லத்துக்குச் சென்றார் டயானா.

பத்திரிகையில் தனது கதை பிரசுரமாகிக் கொண்டிருந்தமையால் பகிரங்கமாக நடமாட டயானாவுக்கு கூச்சமாக இருந்தது.

அதனால் சிநேகிதி வீட்டுக்கும் இரகசிய விஜயம் போன்றே சென்றார்.

அதுதான் விவகாரமாகிவிட்டது. டயானா மாளிகையில் இருந்து புறப்பட்டவுடனேயே மாளிகையில் இருந்து பத்திரிகை ஒன்றுக்கு இரகசியத் தகவல் கொடுக்கப்பட்டு விட்டது.

அதனால் டயானா சென்ற கார் பின் தொடரப்பட்டது. சிநேகிதி வீட்டின் முன்னால் டயானா சென்று இறங்குவதும் டயானா அறியாமலேயே படம் எடுக்கப்பட்டது.

அரச குடும்பத்தின் தூண்டுதலும் பணமும் விளையாடியது.

ஒரு பத்திரிகை பின்வருமாறு செய்தி வெளியிட்டது:

'டயானாவுக்கு ஆண் சிநேகிதர்கள் அலுத்துவிட்டனர். சிநேகிதிகள் தேடுகிறார். இரகசியமாக சென்று சந்திக்கிறார்.'

அப்படியொரு செய்தியை இடம்பெற வைத்ததில் அரச குடும்பத்திற்கு அளவற்ற ஆனந்தம்.

டயானா அதற்கு எப்படி பதிலடி கொடுத்தார் தெரியுமா?

(அடுத்த வாரமும் வரும்)


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? காலி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

**B.F. றயீஸா,**
103, கிதுலம்பிடிய, உலுவிடிக்கே, காலி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக,வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

### தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 07


* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜீவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





இயற்கையென் றுனையுரைப்பார்-சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள் என்றிசைப்பார்;
செயற்கையின் சக்தியென்பார்-உயிர்த்
தீமுயென்பர், அறிவேன்பர், ஈசனென்பர்;
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# தனக்கு வந்தால் தெரியும்!

ஓர் ஊரில் பேராசைக்கார இடையன் ஒருவன் இருந்தான். அவன் பணத்தைச் செலவழிக்காமல் மந்தையைப் பெருக்க வேண்டும் என எண்ணினான். அதற்காக ஒரு திட்டமும் தீட்டினான்.

ஒருநாள் காட்டிற்குச் சென்று ஓநாய்க் குட்டி ஒன்றை எடுத்து வந்தான். அந்த ஓநாய்க் குட்டிக்கு, மற்றவர்களின் மந்தைக் கூட்டத்திற்குள் புகுந்து, ஆடுகளைத் திருடிக் கொண்டுவர கடுமையான பயிற்சியளித்தான்.

நன்றாகக் களவு வித்தையைக் கற்றுக் கொண்ட ஓநாய்க்குட்டி பக்கத்து மந்தைக் கூட்டத்திலிருந்து இரவு வேளைகளில் இரண்டு மூன்று ஆடுகளைக் கொண்டு வரும்.

பத்திரமாக ஆடுகளை ஒப்படைக்கும் ஓநாய்க்குட்டிக்கு தினமும் ஒவ்வொரு ஆட்டை உணவாகக் கொடுப்பான்.

பேராசைக்கார இடையனிடம் பணம் செலவு செய்யாமல் மந்தைக் கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. அவனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

பேராசைக்கார இடையனிடம், மந்தை பெருகிய அதேவேளை, பக்கத்து மந்தைகளில் ஆடுகள் குறைந்து கொண்டே வந்தன. இதனால் பக்கத்து மந்தைக்காரர்கள் தங்கள் மந்தைக் கூட்டத்திற்கு பலத்த காவல் போட்டனர்.

பக்கத்து மந்தைக் கூட்டத்தில் பலத்த காவல் போடப்பட்டதால் ஓநாய்க் குட்டியால் முன்புபோல ஆடுகளைத் திருட முடியவில்லை. ஆடுகளை ஓநாய் கொண்டு வராததால் ஓநாய்க்கு தினமும் உணவாகக் கிடைக்கும் ஆடும் கிடைப்பதில்லை.

பசி பொறுக்க முடியாத ஓநாய், பேராசைக்கார இடையனின் மந்தைக் கூட்டத்தில் இருந்து ஆடுகளைத் திருடித் தின்ன



ஆரம்பித்தது.

தன் மந்தையில் உள்ள ஆடுகள் குறைந்து வருவதைப் பேராசைக்கார இடையன் கவனித்தான். ஒருநாள் ஓநாய்க்குட்டி அவன் மந்தையில் உள்ள ஆட்டை அடித்துத் தின்பதைப் பார்த்துவிட்டான்.

உடனே கோபம் கொண்டு ஒரு தடியை எடுத்துக்கொண்டு ஓநாய்குட்டியை அடிக்க ஓடினான். தன்னை இடையன் அடிக்க வருவதைப் பார்த்த ஓநாய் அவனிடம்,

"பேராசைக்காரா! நீதானே இந்த வித்தையைக் கற்பித்தாய்? உனது மந்தையில் உள்ள ஆடுகளைத் திருடும்போது உனக்கு இவ்வளவு கோபம் வருகிறதே? மற்றவர்களின் ஆடுகளைத் திருடும்போது அவர்கள் மனது எவ்வளவு வேதனைப்படும் என்று உனக்குத் தெரியுமா?

கஷ்டங்கள், துன்பங்கள் உங்களுக்கு வரும்போதுதான் உங்களுக்கு அதன் வேதனை புரியும். அந்த கஷ்டங்கள், துன்பங்களால் மற்றவர்களும் எவ்வாறு கஷ்டப்படுவார்கள் என்றும் தெரியும். நீ இனிமேலாவது திருந்தி நட!" என்று கூறிவிட்டு காட்டிற்குள் ஓடிச் சென்றது ஓநாய்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



→ ராய் கேஸ்டில் என்பவர் இங்கிலாந்தில் இருந்து ஃபிரான்சிற்கு விமானப் பயணம் மேற்கொண்டார். வழக்கமான இருக்கையில் உட்காராமல் விமானத்தின் இறக்கையில் இறக்கையின் மீது 3 மணி 23 நிமிடங்கள் வரை உட்கார்ந்து இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.



← இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெயராமன் என்பவர் 1988ம் ஆண்டு நிமிடத்திற்கு 160 கைதட்டல்கள் வீதம் 58 மணி 9 நிமிடங்கள்வரை தொடர்ந்து கைதட்டி சாதனை படைத்தார்.



← 1993ல் அமெரிக்காவைச் சேர்ந்த அஸ்ரிடா பர்மேன் என்பவர் தன் தலையில் பால்குடத்தைச் சுமந்தபடி, கைகளால் பிடிக்காமல் 113.76கிலோமீட்டர் தூரம் நடந்து சாதனை படைத்தார். இச்சாதனையை இவர் 18 மணி 46 நிமிடத்தில் செய்தார்.



← டாக்டர் ரொனால்ட் எல்.அல்ஹானா என்ற அமெரிக்கர் 138 கிராம் நிறையுள்ள 17 வழைப்பழங்களை இரண்டே நிமிடங்களில் சாப்பிட்டு முடித்து விட்டார். இவர் இச்சாதனையை 1973ல் செய்தார்.

# வாரம் ஒரு நாடு

## கிர்கிஸ்தான்(கிர்கீஸியா)

தலைநகர்: பிஷ்கேக்
பரப்பு: 198,500 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை: 47 இலட்சம்
மொழி: கிர்கிஸ், ரஷ்யன்.
எழுத்தறிவு: 97%
சமயம்: இஸ்லாம், கிறிஸ்தவம்.
நாணயம்: சோம்.
தனிநபர் வருமானம்: 680 டொலர்.

**அமைவிடம்:**
கஸ்பியன் கடலுக்கு வடபகுதியிலுள்ள கஸக்கிஸ்தானின் மேலே அமைந்துள்ளது.

**வரலாறு:**
முன்னாள் சோவியத் யூனியனின்



குடியரசுகளின் ஒன்றாக இருந்தது. 1991ம் ஆண்டு தனிநாடாகப் பிரிந்தது.

**பொருளாதாரம்:**
கால்நடை வளர்ப்பு மிக முக்கிய தொழில். செம்மறியாடுகள், குதிரைகள் அதிகமாக உள்ளன. அதிகளவில் தொழிற்சாலைகள் உள்ளன. கோதுமை மற்றும் தானியங்கள் அதிகம் விளைவிக்கப்படுகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.07.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 251**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 249

பரிசுக்குரியவர்:
ஐறின் றூபற்,
மட்/ புனித சிசிலியா ம.ம.வி. மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஏ.பீ.பா. நிஹ்லா, வான்வீதி, முதலாம் ஒழுங்கை, புத்தளம். | யோ. பெனி, யாழ் திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, யாழ்ப்பாணம். |
| ந. பவித்ரா, ந. பைரவி, பெர்னாண்டோ வீதி, வெள்ளவத்தை. | எம்.என். ஸினாஸ் முகமட், ஹமீதியா மு.ம.வித்தியாலயம், கும்பலங்கை, இப்பாகமுவ. |
| எம். சதீஸன், கடவளை த.ம.வி, கினிகத்தேரியா. | என். அரவிந்த், தேசிய புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. |
| எஸ். லோகநாதன், குமில்வத்தை தமிழ் வித்தியாலயம், அட்டன். | வைஷ்ணவி திலகன், சென் கெப்ரியல் ம.வித்தியாலயம், ஹட்டன். |
| ஆர். பிரசாத், பரிசுத்த திருத்துவக் கல்லூரி, நுவரெலியா. | கி. ஷர்மினா, இ/சீ.சீ. தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை. |

# கங்காருக் குட்டி

மானின் தலை, தவளையைப்போல் தாவிக்குதிக்கும் திறன், பறவைகளைப் போன்ற கால்கள்- இதுதான் கங்காரு. முழு வளர்ச்சியடைந்த இந்தக் கங்காரு சுமார்



180 முதல் 275 சென்டிமீட்டர் நீளம் வரை இருக்கும். இதன் உயரம் 180 சென்டிமீட்டர். இதன் நிறை சுமார் 130 கிலோ.

இந்தக் கங்காருவுக்குப் பிறக்கும் குட்டி இதன் வயிற்றிலுள்ள பையில் வளரும். வயிற்றுப்பையில் வளரும் கங்காருக் குட்டிக்குப் பெயர் ஜோயி. இது பிறக்கும்போது 7 சென்டி மீட்டர் நீளமும் 10 கிராம் நிறையும் கொண்டதாக இருக்கும். முழு வளர்ச்சி அடையாத இதன் வளர்ச்சி முழுவதும் தாயின் வயிற்றுப்பையில்தான்.

5 மாதங்களுக்குப் பிறகுதான் கங்காருக் குட்டி தாயின் வயிற்றுப் பையிலிருந்து வெளியே எட்டிப்பார்க்க ஆரம்பிக்கின்றது. 8 மாதங்களுக்குப் பின்னர் தாயின் வயிற்றுப் பையில் இருந்து கங்காருக்குட்டி வெளியே வருகிறது.

# குட்டிச் செய்திகள்

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அல்லது ஐக்கிய அரபுக்குடியரசுகள் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். அவற்றில் இணைந்துள்ள மாநிலங்கள் எவையெவை தெரியுமா? அபுதாபி, துபாய், சார்ஜா, அஜ்மான், புஜைரா, ரஸ் அல்கைமா, உம் அல் குவெய்ன் ஆகிய 7 மாநிலங்கள் ஆகும்.

உலகிலேயே பெரிய காடு எங்கிருக்கிறது என்று தெரியுமா? ரஷ்யாவில் உள்ளது. ரஷ்யாவின் வடக்குப் பகுதியிலும் ஆர்க்டிக் பெருங்கடல் ஓரத்தில் உள்ள பகுதிகளிலும் 270கோடி ஏக்கர் பரப்பில் இக்காடு அமைந்துள்ளது.

# டைட்டானிக் (TITANIC)



* 'டைட்டானிக்' என்றால் என்ன?
உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த விஞ்ஞான தொழில் நுட்பத்துடன்- கவிழ்க்கவே முடியாது என்ற எண்ணத்துடன் தலை சிறந்த விஞ்ஞானிகளால் கட்டப்பட்ட கப்பல்தான் டைட்டானிக் ஆகும்

* இது எந்த நாட்டில் கட்டப்பட்டது?
இங்கிலாந்து நாட்டில் கட்டப்பட்டது.

* பின்னர் இக்கப்பலுக்கு என்ன நடந்தது?
இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது பனிப்பாறை ஒன்றுடன் மோதி இக்கப்பல் கடலில் மூழ்கியது.

* இந்த விபத்து எத்தனையாம் ஆண்டு நடந்தது?
1912ம் ஆண்டு நடந்தது.

* இந்த விபத்தில் எத்தனை பேர் இறந்தனர்?
2207 பேர் பயணம் செய்த இக்கப்பலில் 1500 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். குறைந்தளவானோரே காப்பாற்றப் பட்டனர்.

# எப்படி எழுதுகிறது?



குண்டு முனைப்பேனா (BALL POINT PEN) எவ்வாறு எழுதுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா? குண்டு முனைப்பேனாவின் எழுது முனையில் ஒரு சிறிய உலோகக் குண்டு குழிவில் பொருத்தப்பட்டுள்ளது. நாம் எழுதும்போது இந்தச் சிறிய குண்டு சுழல்கிறது. இதனால் பேனாவில் உள்ள குழலிலிருந்து மைப்பசை சீராக வருகிறது.

நம்மால் பார்க்க முடியாத குண்டின் மறுபக்கம் (பேனாவின் உள்ளே இருப்பது) மைப்பசையுள்ள சிறுகுழலின் முனையோடு பொருந்தியுள்ளது. குண்டு சுழலும் போதெல்லாம் மை, சிறிது சிறிதாகக் குண்டின்மீது பாய்ந்து எழுதுவதற்குச் சீராக வருகிறது.

# ஏன் தெரியுமா?



பெரிய நீர்ப்பரப்புக்களான ஆறு, குளம், ஏரி போன்றவற்றில் காணப்படும் நீர்ப்பரப்புக்களைப் போலவே பெரிய நீர்ப்பரப்புக்களான கடல்களிலும் நீர் உள்ளது. ஆனால் கடல் நீர் மட்டும் நீல நிறமாகத் தெரிகிறது.

இது ஏன் தெரியுமா?

சூரிய ஒளியில் உள்ள ஏழு நிறங்களில் கடல்நீர் நீல நிறத்தை மட்டும் எதிரொலிப்பதால் ஆகும். இந்த ஆராய்ச்சி உண்மையைக் கண்டறிந்தவர் இந்தியாவின் அறிவியல் மேதை சேர். சி.வி.ராமன் ஆவார்.

# லூனாமோத்



லூனா மோத் எனப்படும் பெண் வண்ணத்துப்பூச்சியானது ஒரு வகை இரசாயனப் பொருளை வெளிப்படுத்தி காற்றில் பரவச்செய்கிறது.

இதன் மணத்தை 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள ஆண் வண்ணத்துப்பூச்சி தெரிந்து கொள்ளும்.

இவ்வகை வண்ணத்துப்பூச்சிகள் இரவு நேரங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ள, இவற்றின் உடலில் இருந்துவெளிப்படும் இரசாயன பொருளில் உள்ள மணம் பயனளிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## அமோக வாரம் 02

# மேற்கே ஒரு குற்றம்

### எழுத்துலக வேந்தன் சுஜாதா

**20 வருடங்களுக்கு முன்னர் தமிழக சஞ்சிகை ஒன்றில் வெளியாகி பிரமாதமான வரவேற்பைப்பெற்ற அட்டகாச நாவல் இது.**

வசந்த் சற்று நேரம் கவனித்தான். அவன் முகம் மாறியது. "அவங்க விலாசம் இருக்குமா?"

"......"

"என் பேர் வசந்த். அவுங்களுக்குத் தெரிஞ்சவங்க."

"......"

"கொஞ்சம் இருங்க. எழுதிக்கறேன்."

"தாங்ஸ்." எழுதிக் கொண்டான். வைத்தான்.

"ரிஹர்ஸலுக்கு வரவே இல்லையாம். மூன்று மணியிலிருந்து காத்திருக்கிறார்களாம்! விலாசம் கொடுத்தாங்க!"

"ம்!" கணேஷ் அந்தப் பெண் கிறுக்கியிருந்த காகிதத்தைப் பார்த்தான். வெறும் வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று தொட்டுக் கொண்டு, குறுக்கிட்டுக் கொண்டு... காத்திருக்கும்போது அவள் கைகள் தன்னை அறியாமல் வரைந்த வட்டங்கள்.

"ஏண்டா தூங்குமுஞ்சி! புதுசா ஒரு ஆள் வந்தா உடனே உள்ளேவுட்டுடறதா?" என்று ராமு மேல் பாய்ந்தான் வசந்த்.

"நான் என்னங்க செய்யறது? நம்ம ஆபீசுக்கு எவ்வளவோ பேர் வராங்க..."

"கமான் வசந்த்; அவுங்க கொடுத்த விலாசத்தில் போய் விசாரிக்கலாம்."

ராஜா அண்ணாமலை புரத்தில் இருந்தது அந்த விலாசம். சமீபத்திய மழையினால் சேறும் சகதியுமாக கார்ப்பரேஷன் கடாட்சம் படாமல் இருந்தது அந்த ரோடு. தாழ்வாக கூரையிட்ட ஒரு பள்ளி. பாங்க் ஊழியர்கள் ஒரே மாதிரி வீடு கட்டிக்கொண்ட ஒரு காலனி. மிச்சமிருக்கும் காலி மனைகளில் கட்சிக்கொடிகள். நாய் சகிதமாகக் குடிசைகள். ஒரு சர்ச். கணேஷின் ஃபியட் அந்தச் சிறிய வீட்டின் முன் நின்றது. 'மைலாப்பூர் ராமாராவ்- மிருதங்க வித்வான்' என்று போர்டு போட்டிருந்தது. அதன் கீழ் நின்ற ஒரு பட்டி நாய் குலைத்துவிட்டு உடனே வாலாட்டியது.

உள்ளே 'திரிகிடதம்' ஒலிக்க, "யாரு?" என்று ஒரு பெண் குரல் ஒலித்தது.

"இங்கே தீபான்னு ஒருத்தரை..." மிருதங்க ஒலி நின்றது.

"அவுட் ஹவுஸ்!" என்றது ஒரு ஆண் குரல். மைலாப்பூர் ராமாராவாக இருக்கவேண்டும்.

அவர்கள் அவுட் ஹவுஸ் நோக்கிச் செல்ல மறுபடி 'திரிகிடதம்' துவங்கியது. காம்பவுண்டுச் சுவர் அடுத்த வீட்டு ஜன்னல் ஊடே டெலிவிஷனில், பாக்கிஸ்தானில் கிரிக்கெட் தெரிந்தது.

கதவைத் தட்டினான். மணியைப் பார்த்தான். நாலு ஐம்பத்தி ஐந்து.

ஒரு ஐம்பது வயது அம்மாள் திறந்தாள்.

"யாரு?"

"தீபாவைப் பார்க்க வந்தோம்."

"அவ ரிஹர்ஸலுக்குப் போயிருக்கா. வர நாழியாகும். ஏழு ஏழரை ஆகும். நீங்க யாரு?" கண்களில் பயம்.

"என் பேர் கணேஷ். ஒரு வக்கீல். தீபா வந்தா கணேஷ் வந்து விசாரித்தார்னு சொல்லுங்கோ. நீங்க அவங்க தாயாரா?"

"ஆமாம்: வக்கீல் எதுக்கு? அவ கிளம்பிப் போற விஷயமா ஏதாவது இருக்குமோ?"

"தெரியலை. எங்களைப் பார்க்க மத்தியானம் வந்திருந்தாங்க... சாயங்காலம் வரச் சொல்லியிருந்தோம். வரலே. இந்தப் பக்கமா போனோம். விசாரிச்சுப் பார்க்கலாம்னு வந்தோம். வேறு ஒண்ணும் விசேஷமில்லை."

"வந்துடுவா...ஏழு மணிக்குள்ள வந்தா சொல்றேன். நிக்கறேளே?"



"இல்லை. நாங்க வரோம்."

திரும்பிச் செல்லும்போது ஒரு ஹோட்டலிலிருந்து மறுபடி கலாராதனாவுக்கு டெலிஃபோன் செய்தார்கள்.

அவள் அங்கே வரவில்லையாம்.

"வேற எங்கேயாவது போயிருப்பாள். ஆளைவிடு...அந்தப் பெண்ணைப் பற்றி முழுக்கத் தெரியாது... நாளைக்குக் காலை மறுபடி நம்மை அவ பார்க்க வந்தாலும் வருவாள்..."

"பின்னே எதுக்கு பாஸ் இவ்வளவு தூரம் வந்தோம்?"

"ஹானஸ்ட் வசந்த். எனக்குக்கூட சற்றுக் கவலையாத்தான் இருந்தது! அந்த வட்டங்கள்!"

கணேஷ் தன் பைக்குள்ளிருந்து அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தான். "கைல நடுக்கம் தெரியறது. மனதில உளைச்சல் தெரியறது... வட்டங்கள்."

"இப்ப என்ன செய்யறது?"

"அவ்வளவுதான் அத்தியாயம் முடிஞ்சுது. வீட்டுக்குப் போய் கோபாலச்சாரியின் பொய்களுக்கு எதிர்ப் பொய் தயாரிக்க வேண்டியதுதான்!"

இரவு அந்தப்பெண் கணேஷின் நினைவுகளில் சில தடவை தென்பட்டாள். அந்த வட்டங்கள் அவனைச் சிந்திக்க வைத்தன. நடுநடுவே கணேஷின் தற்போதைய வழக்கின் சிந்தனைகளும் குறுக்கிட மறுபடி அந்தப் பெண் குறுக்கிட குழப்பமான நிலையில் தூக்கமின்றி மாத்திரைகளை நாடினான்.

காலை துல்லியமாக இருந்தது. அந்தப் பெண் அகன்று விட்டாள். பால் கலக்காமல் சர்க்கரை கலக்காமல் காப்பி சாப்பிட அவன் கசப்பு நாக்கைத் தாக்க கதவின் அடியில் கிடந்த செய்தித்தாளை ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டு பார்வையிட்டான். முதல் பக்கம் பூராவும் சிக்க மகளூர் பரவியிருந்தது. இந்தியக் குழு கிரிக்கெட்டில் தோற்றுப் போனதில் வருத்தப்பட்டான். தீபாவளி ரிலீஸ் சினிமாக்கள் வரவேற்றன.. குறுக்கெழுத்து சதுரங்களில் மனம் வைக்கு முன் ஓரத்தில் அச்சிடப்பட்டிருந்த செய்தி அவனைத் தாக்கியது.

***சாலையில் இளம் பெண் மரணம்!***

அடையாறு செல்லும் சாலையில் நேற்று இரவு ஒரு இளம் பெண்ணின் உடல் கிடந்தது! சாலை விபத்தில் லாரி அல்லது பஸ் மோதி இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அந்தப்பெண் ராஜா அண்ணாமலை புரத்தைச் சேர்ந்தவள் என்றும் பெயர் தீபா என்றும் தெரியவந்தது.

பொலிஸ் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

"மை காட்! இது என்ன?"

டெலிஃபோன் ஒலித்தது. எடுத்தான்.

"பாஸ், வசந்த்! இன் னிப் பேப்பரைப்..."

"பார்த்தேன் வசந்த்! அவளாத்தான் இருக்கணும்!"

"நான் நினைச்சேன் பாஸ்! ஸம்திங் ராங்னுட்டு அவ கண்களிலேயே தெரிஞ்சுது..."

"வசந்து! நீ உடனே ஒரு காரியம்பண்ணு, நேரா ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வா! நானும்வரேன். நேரா மார்ச்சுவரிக்கு வந்துடு!"

கணேஷ் அவசரமாகச் சட்டை மாற்றிக் கொண்டு ஷெட்டிற்கு ஓடி காரை எடுத்தான். அவன் ரிஃப்ளெக்ஸ் சக்திகள் காரைச் செலுத்த மனம் வேறு இடத்தில் பாய்ந்தது!

'சாலை விபத்தா! நான்சென்ஸ்! இது வேறு ஏதோ விபரீதம். ஒரு பெண் என்னிடம் வருகிறாள், பயப்படுகிறாள். யாரோ ஒருவன் வந்து அவளை அழைத்துச் செல்கிறான். அவள் நடன ஒத்திகைக்குச் செல்லவில்லை. வீட்டுக்குச் செல்லவில்லை. இரவு சாலை விபத்தில் இறக்கிறாள். சே! தப்புச் செய்துவிட்டேன். அவள் என்னிடம் என்ன சொல்ல வந்தாள்? அதைக் கேட்காமல் கோபாலாச் சாரியுடன் வழக்கு எனக்குப் பெரிதாகிவிட்டது! அக்கிரமம்! நான் கேட்டிருந்தால் அவள் காப்பாற்றப்பட்டிருக்கலாம்! ஆம்! குற்றம் என்னுடையது! என்னுடையது...!'

'க்றீச்!' என்று ப்ரேக் போட்டான். நல்ல வேளை. அந்த சைக்கிள்காரன் தப்பித்தான். மற்றொரு சாலை விபத்து தவிர்க்கப்பட்டது!

மற்றொரு சாலை விபத்தா? ம்ஹூம்! இல்லை. இல்லை. அது சாலை விபத்தே அல்ல! எந்தக் கிராதகன் ஜோடித்த விபத்து அது? யார் அவன்? தீபா நீ யார்? என்ன சொல்ல விரும்பினாய்? எதற்காக அந்த வட்ட வட்டங்களை வரைந்தாய்?'

மார்ச்சுவரியின் வாசலில் வசந்த் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான்.

பத்துப் பதினைந்து பேர் இருப்பார்கள். விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள் தீபாவின் அம்மா. கணேஷைப் பார்த்ததும் உடைந்து, "வக்கீல் ஸார், அவ வீட்டுக்கு வரவே இல்லையே! ராத்திரி பூரா என் செல்வம் ரோடில கிடந்திருக்காள்! எந்தப் பாவி எந்தப் பாதகன் என் குழந்தையை இப்படி மோதிட்டுச் சொல்லாமல் போய்ட்டான்? நான் எதுக்கு இருக்கணும்? நான் போறேன் நான் போறேன்!"- என்று மார்பில் அடித்துக்கொண்டாள்.

மெதுவாக மார்ச்சுவரியின் சரிவிலிருந்து அந்தச் சக்கர வண்டி வெளிவர காக்கிச் சட்டை சிப்பந்தி, "என்னாடமாசய்யா? சுருளி பொம்பளை வேசம் போட்டுகிட்டு வர்றான் பாரு கொட்டாயே இடிச்சு போய்டுது. சிரிச்சு சிரிச்சு..." என்று அருகிலிருப்பவனிடம் பேசிக்கொண்டே நகர்த்திக் கொண்டு வந்தான்.

வெள்ளைத் துணி மூடப்பட்டு தீபாவின் முகம் மட்டும் தெரிந்தது. சாந்தமாக இருந் தது. அருகில் இருந்த இளம் பெண்களும் அம்மாவும் கதறினார்கள். அந்தப் பெண்கள் நாட்டியக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். தீபாவின் கை தெரிந்தது. சற்று நீலம் பாரித்திருந்தது. அந்த வட்டங்களை வரைந்த கை, கண்களில் இன்னும் மையின் சுவடுகள் தெரிந்தன. ஒரு செகண்டு ஜிலு ஜிலு வென்று நகைகள் அணிந்து கொண்டு கண்களில் மை யெழுதி சலங்கை குழுங்க தீபா நடன மாடினாள்.

"என் கண்ணே! என் செல்வமே! என்னை விட்டுவிட்டுப் போய்ட்டியேடி,"

"ஹலோ இன்ஸ்பெக்டர்; என் பெயர் கணேஷ். ஒரு லாயர்!"

"ஹலோ!"

"நிச்சயமா டிராஃபிக் ஆக்ஸிடண்ட் தானா?"

"அப்படித்தான் தெரியுது. டயர் மார்க் தெரிஞ்சுது உடம்புமேல. போஸ் மார்ட்டம் ரிப்போர்ட்டும் கன்ஃபர்ம் ஆறது. க்ளீனா பெல்விஸ்ல வண்டி ஏறியிருக்குது. பாய்ஸனிங், ஸ்ட்ராங்குலேஷன் எதுவும் இல்லே! ஹிட் அண்ட் ரன்!"

"எந்த இடத்தில் விபத்து நடந்தது?"

"அடையார் பக்கம்! கொஞ்சம் தனியான ரோடு. ராத்திரி! பாஸ்டார்ட். கண் மண் தெரியாம அடிச்சுட்டு பறந்திருக்கான்!"

"கண்டு பிடிக்கிறது...."

"ரொம்ப கஷ்டம். இந்தப் பொண்ணு எதுக்கு அந்த ரோடுக்குப் போச்சுன்னு முதல்லே தெரியணும்!"

நேத்து அவள் என்னிடம் வந்தாள். ஏதோ சொல்ல நினைத்தாள். என்று சொல்ல நினைத்தான் கணேஷ் அதற்குள் அந்த இன்ஸ்பெக்டர் விலகிச் சென்றுவிட சற்று நேரம் பிரமிப்பில் நின்றான். தீபா ஒரு டாக்ஸியின் பின்சீட் விலக்கப்பட்டு அதனுள் செலுத்தப்பட்டாள். அவள் அம்மா மயங்கிவிட முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள்.

வசந்த் அருகில் வந்தான்.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

'அன்ன பூரணி' ஏடனிலிருந்து புறப்படுவதற்குச் சில காலம் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

அமெரிக்காவிலிருந்து றொபின்சன் தம்பதியர் வந்து சேரவேண்டும்.

தம்பிப்பிள்ளை தண்டையல் கோஷ்டி வந்து சேர வேண்டும்.

அதுவரை-

# 'அன்ன பூரணி அம்மா'

### பயணம் - 08

வல்வெட்டித்துறைப் பக்கம் ஒரு முறை சென்று திரும்புவோமா?

1918ம் ஆண்டுக்குப் பின், வல்வெட்டித்துறை துறைமுகத்தில்,

சித்திரை, வைகாசி, மாதத்தில், 60 கப்பல் வரை காணக்கூடியதாக இருக்கும்.

வல்வெட்டித்துறை மக்களின் வாழ்வே இந்தக் கப்பல் தொழிலில்தான் தங்கியிருந்தது.

யாழ்ப்பாணத்துப் புகையிலைக்குத் திருவனந்தபுரத்திலும், கொல்லத்திலும், ஆலைப்பள்ளியிலும் நல்ல கிராக்கி!

கப்பல்கள் இவற்றைப் பெருவாரியாகக் கொண்டு சென்றன.

வேப்பூர், மங்களபுரம், போன்ற பல்வேறு இடங்களிலிருந்து ஒடுகள் ஏற்றிக் கொண்டு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆகிய துறைமுகங்களில் இறக்கினார்கள்.

இப்படியான பல சுவையான அந்தக் காலப் பெருமைகளை என்னிடம் கூறியவர், 'வ.இ' என்று வல்வெட்டித்துறை மக்களால் அன்பாக அழைக்கப்படும் இராமசாமிப் பிள்ளை அவர்கள்தான்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அவரை, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியது இன்னமும் என் நினைவில் இருக்கிறது.

இப்போது வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக இருக்கும் பெரியார் ச. ஞானமூர்த்தி ஐயா அவர்கள் தான், அவரை எனக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

1925- ஆம் ஆண்டு தொடக்கம், 1958- ஆம் ஆண்டு வரை சிறிய கப்பல் முதல் பெரும் கப்பல்களுக்கு அதிபதியாக இருந்தவர் 'வ.இ'. சிலோன் மாஸ்டர் சேர்டிபிக்கேற், மெற்றியாஸ் இரண்டாவது காப்டன் சேர்டிபிக்கேற் பெற்றுக் கப்பலோட்டியாகவும் இருந்தார்!

திடகாத்திரமான உடலும், சுறுசுறுப்பும் உறுதியான பேச்சும், நிமிர்ந்த பார்வையும்-

'வ.இ.' அவர்களைப் பற்றி நினைக்கும் போது, இப்படித்தான் அவர் என் கண் களுக்குள் வருகிறார்!

பாம்பன்,<br>
தேவிப்பட்டினம்,<br>
தொண்டி,<br>
முத்துப்பேட்டை,<br>
அதிராம் பட்டினம்<br>
கோடியாக்கரை ஊடாக<br>
நாகபட்டினம்,<br>
காரைக்கால்,<br>
பறங்கிப்பேட்டை,<br>
கடலூர்,<br>
பாண்டிச்சேரி,<br>
தமிழ்நாடு,<br>
ஆகியபட்டினங்களுக்கும்,<br>
தெலுங்குநாடு,<br>
கொத்தபட்டணம்,<br>
காக்கிநாடு,<br>
விசாகபட்டணம்,<br>
வங்காள விரிகுடாவில் கல்கத்தா,<br>
சிட்டிகாமம்,<br>
அரிக்கன்,

போன்ற பல்வேறு இடங்களுக்கும் திரைகடலோடி, திரவியம் தேடி வெற்றி கண்டிருக்கிறது இவரது கப்பல்கள்.

- சிவகாமசுந்தரி
- ஆதிலட்சுமி
- சண்முகசுந்தரலட்சுமி
- திருநிலைநாயகி
- ஸ்ரீமகாலட்சுமி
- நரசிம்மசாமி

இராமசாமிப்பிள்ளை அவர்களுக்குப் பெருமை தேடிக்கொடுத்த கப்பல்கள்தான் இவை.

**ஈ.கே. ராஜகோபால்**

40 தொன் முதல் 295 தொன் வரையான பெரிய கப்பல்கள் வைத்துப் பெரும் வியாபாரங்களை நடத்தியவர் இவர்!

அவரே உங்களுடன் பேசுகிறார்:

"பெரிய பாய்மரக் கப்பல்கள் புரட்டாதி மாதத்தில் புறப்பட்டு, அரிக்கனிலிருந்து இலட்சக்கணக்கான நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் துறைமுகங்களில் பறிக்கப்பட்டு வந்தன.

பர்மா, ரங்கூன், மோல்மீன், அந்தமான் நிக்கோபார், யாவா, சுமத்திரா, போர்னியோ, பினாங்கு, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் நம்மவர்கள் பலசாமான்களை ஏற்றியும் இறக்கியும் வந்தார்கள்.

அப்போது பிரதான துறைமுகமாக வல்வெட்டித்துறையும், அடுத்துப் பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகியனவும் திகழ்ந்தன.

அக்காலத்தில் பாய்க்கப்பல்கள் கட்டுவதில், கை தேர்ந்த கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள் பலர். அவர்களில் சிலரைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்-

வேலுப்பிள்ளை மேஸ்திரியார்,<br>
வடிவேலு மேஸ்திரியார்<br>
சின்னத்தம்பி மேஸ்திரியார்.


போன்ற சிலரை என்னால் இன்னமும் மறக்க முடியாதிருக்கிறது.

நவீன முறையில், கப்பல்களை உருவாக்கிய பெருமை இவர்களையே சேரும்.

150 தொன் தொடக்கம், 200,250 தொன் வரையான மூன்று பாய்மரக் கப்பல்கள் பிரசித்தி பெற்றவை.

இந்தக் கப்பல்களில் சேர்டிபிக்கேற் பெற்ற காப்டன், இரண்டாவது காப்டன், கப்பல் செலுத்தும் சுக்கானியார், கிலாசு, சமையல்காரர் போன்றவர்கள் கடமையாற்றுவார்கள்.

முழுக்க முழுக்க வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களே சகல வேலைகளையும், துணிகரமாகவும், நேர்மையாகவும் செய்து வந்தார்கள்.



ஜப்பான்காரன் குண்டுபோட்ட போது, நீர்மூழ்கிக் கப்பலால் பாய்மரக் கப்பலைச் சிதறடித்தபோது கடலுக்கு அர்ப்பணித்த வல்வெட்டித்துறை வீரர்கள் பலர்! சிதறடிக்கப்பட்ட கப்பலின் ஒரு துண்டைப்பிடித்துக்கொண்டு தப்பிய வல்வெட்டித்துறைச் சாமிக்கண்டு மேஸ்திரி என்பவரை நான் சந்தித்துப் பேசிய போது திகில் நிறைந்த பயங்கர அனுபவங்களை எனக்குச் சொன்னார்.

சமையல்காரராகக் கப்பலில் சென்ற ஒருவர் ஒரு காலை பயங்கரத் தாக்குதலின்போது இழந்து உயிருடனேயே வல்வெட்டித்துறை திரும்பிய 'கதை'யைக் கேட்டபோது, என்கண்களில் நீர் வழிந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

மறைந்த தண்டையல்கள் பலரின் வீரசாகசங்களை கேட்டறிந்து வியந்தேன்.

அவர்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தண்டையல்கள் சிலரின் அனுபவங்களை கேட்டறிந்தேன்.

(அடுத்த வாரமும்...)



படிப்பகம்

www.padippakam.com

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல்கதை, இந்த வாரம் முதல் உங்கள் இதயத்தில் இந்த கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

# முள் நிலவு

## நிலவு 01

நிலா கண்ணாடிக்கு முன்பாக நின்று ஸ்டிக்கர் பொட்டை நெற்றியின் மையம் பார்த்துப் பொருத்திக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டுப் ப்ரியா ஒரு கன்றுக் குட்டியின் துள்ளலோடு உள்ளே வந்தாள்.

"ஏய் நிலா.... நான் கேள்விப்பட்ட நியூஸ் உண்மையா...? இன்னும் கொஞ்சம் நேரத்துல உன்னைப் பெண் பார்க்க வரப்போறாங்களாமே?"

பட்டுப் புடவையில் நடமாடும் சொர்க்கம் போல இருந்த நிலா, ஸ்டிக்கரைச் ச்ரியாகப் பொருத்திக் கொண்டு கண்ணாடியினின்றும் திரும்பினாள்.

"ஆமா.... ஆமா..."

"மாப்பிள்ளைக்கு ஸ்டேட்ஸ்ல நல்ல வேலையாமே?"

"ஆமா.... ஆமா!"

"மாப்பிள்ளையோட அம்மாவும் அப்பாவும்தான் இன்னிக்கு உன்னைப் பார்க்க வரப்போறாங்களாமே?"

"ஆமா.... ஆமா...."

"உங்கம்மா வந்து சொல்லித்தான் எனக்கே தெரியும். பார்த்துட்டிருந்த வேலையை எல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஓடி வர்றேன்.... ஏன்டி விஷயம் என்னான்னு சொல்லி ஒரு குரல் கொடுக்கக்கூடாதா எனக்கு?"

"ஸாரிடி... ப்ரியா...! கல்யாணத்தரகர் அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் ஃபோன் பண்ணி விஷயத்தைச் சொன்னார். எந்தப் பட்டுப்புடவை கட்டிக்கிறதுன்னு யோசனைபண்ணி முடிவு எடுக்கவே பதினைந்து நிமிஷம் ஆயிடுச்சி...."

"மாப்பிள்ளைக்கு ஸ்டேட்ஸ்ல என்ன வேலை?"

"ஏதோ ஒரு கம்யூட்டர் கம்பெனியில சீஃப் புரோகிராமராம்."

"அப்படின்னா சம்பளம் எக்கச்சக்க டாலர்ல இருக்கும்!"

"பின்னே?"

"அவர் பெயர் என்னவாம்?"

"கிருஷ்ண காந்த்......"

"ஆள் எப்படி? போட்டோவைப் பார்த்தியா?"

"இன்னும் பார்க்கலை......"

"ஏய்... பொய் சொல்லாதே...."

"அட நிஜமாத்தான் ...." நிலா உதட்டைச் சுழித்துச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நிலாவின் அம்மா பாக்கியம் உள்ளே வந்தாள்.

"நிலா! மாப்பிள்ளையோட அம்மாவும் அப்பாவும் வந்துவிட்டாங்க.... ரெடியா....?"

"நான் எப்பவோ ரெடி....."

"இதோ பார்.... உன்னோட வாய்த்துடுக்கை எல்லாம் மூட்டை கட்டிட்டு அவங்க கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் பதிலைச் சொல்லணும்."

"சரி......"

"மாப்பிள்ளையோட அப்பா கொஞ்சம் பழங்கால டைப். நீ அடக்க ஒடுக்கமா இருந்தாத்தான் அவங்களுக்குப் பிடிக்கும், தெரிஞ்சிக்கோ."

"சரி...."

"நான் குரல் கொடுக்கும்போது தாம்பூலத்தட்டை எடுத்துக்கிட்டு ஹாலுக்கு வந்தாப்போதும்."

"சரி..."

அம்மா போய்விட,

நிலா அறையின் அடுத்த ஜன்னல் பக்கமாய்ப் போய் ஓரமாய் நின்று க்ரில் கம்பிகளின் வழியே ஹாலுக்குப் பார்வையைத் துரத்தினாள்.

மாப்பிள்ளையின் அப்பா வெங்கடேஷ்வரனும் அம்மா சௌந்தரமும் சோபாவில்



சாய்ந்திருக்க, எதிரே நிலாவின் அப்பா சிவராஜன் உரத்த குரலில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

ப்ரியா... நிலாவின் தோளைத் தட்டினாள்.

"நிலா....!"

"ம்...."

"என்னடி இது... மாப்பிள்ளையோட அப்பா எள்ளுருண்டை கலர்ல குண்டா இருக்கார்.... அந்தம்மா சிவப்பா ஒட்டடைக்குச்சியாட்டம் இருக்காங்க... மாப்பிள்ளை இவங்கல்ல யார் ஜாடையா இருப்பார்னு தெரியலையே... மொதல்ல போட்டோவை வாங்கிப்பாரு... திருவண்ணாமலை ஜோதி மாதிரி இருக்கிற உனக்கு எவனாவது கொள்ளிக்கட்டை மாதிரி வாய்ச்சுடப்போறான்...."

"கொஞ்ச நேரம் புலம்பாம இருக்கியா?"

"சரி நான் போயிட்டு அப்புறமா வர்றேன். மாப்பிள்ளையோட போட்டோவைக் கேட்டு வாங்கிவை. நான் பார்த்துட்டு ஓ.கே. சொன்னாத்தான் கல்யாணத்துக்குச் சரின்னு சொல்லணும்...."

"ம்..ம்.."

ப்ரியா பின்பக்க வழியால் அவளுடைய வீட்டுக்குப் போய்விட, நிலா அம்மாவின் குரலுக்காகக் காத்திருந்தாள்.

பத்து நிமிடம் கழித்து பாக்கியத்தின் குரல் ஜன்னல் அருகே கேட்டது.

"தாம்பூலத் தட்டை எடுத்துக்கிட்டு வா நிலா...!"

கனமான பட்டுப்புடவைக்குள் சிக்கியிருந்த நிலா தாம்பூலத் தட்டோடு மெல்ல நடந்து ஹாலுக்குள் நுழைந்தாள்.

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

கையில் இருந்த தாம்பூலத்தட்டை டீப்பாயின்மேல் வைத்துவிட்டு நமஸ்கரித்த பின்னர் பாக்கியத்துக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

மாப்பிள்ளையின் அப்பா வெங்கடேஷ்வரன் ஒரு பெரிய புன்னகையோடு நிலாவை ஏறிட்டார்.

"இதோ பாரம்மா, பெரியவங்க நாங்க இந்தக் கல்யாணத்தைப் பத்தி பேசி முடிவு எடுக்கறதுக்கு முந்தி உன்னோட முடிவைத் தெரிஞ்சுக்க விரும்பறோம். என் பையன் கிருஷ்ணகாந்த் அடுத்த மாதம்தான் ஸ்டேட்ஸிலிருந்து வருவான். இப்போதைக்கு என் பையனை நீ போட்டோவில்தான் பார்க்க முடியும். அதே மாதிரி அவனும் உன்னை போட்டோவில்தான் பார்க்க முடியும். நேத்தைக்கு என் பையன்கிட்டே ஃபோன்ல பேசும்போது நிலாவோட போட்டோவை வாங்கி அனுப்பட்டுமான்னு கேட்டேன். அதுக்கு அவன், 'வேண்டாம்பா நான் பொண்ணைக் கல்யாணத்தன்னிக்கு மணமேடையிலேயே முதன் முதலாக பார்க்க ஆசைப்படறேன். அது எனக்கு த்ரிலிங் ஆகவும் இருக்கும். பொண்ணுக்கு வேண்டுமானால் என் போட்டோவைக் குடுங்க. நான் இருக்கிற வீடியோ கேசட்டைக் குடுத்து டெக்கில் போட்டுப் பார்க்கச் சொல்லுங்க. என்னைப் பொண்ணுக்குப் பிடிச்சிருந்தா கல்யாணத் தேதியை நிச்சயம் பண்ணுங்க... வர்றேன்னு சொன்னான்."

நிலா வியப்போடு நிமிர, அவர் ஒரு பையை நீட்டினார். தொடர்ந்தார்,

"இந்தப் பைக்குள்ளே என் மகனோட போட்டோ ஆல்பமும், வீடியோ கேசட்டும் இருக்கு. ரெண்டையும் பாரம்மா. பார்த்துட்டு என் பையனைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு சொல்லு..."

நிலா தயக்கமாய் வெங்கடேஷ்வரனை ஏறிட்டாள்.

"வேண்டாங்க...!"

அங்கே ஆச்சரியப் பார்வைகள் கலந்தன.

"ஏம்மா வேண்டாங்கறே...?"

"உங்க மகன் என்னோட போட்டோவைப் பார்க்காமலேயே கல்யாணத்துக்குச் சம்மதம் கொடுத்திருக்கார். என்னை மணமேடையில்தான் முதன் முதலாப் பார்க்கறதுக்குப் பிரியப்பட்டிருக்கார். அதே பிரியம் எனக்கு இருக்கக்கூடாதா என்ன? நானும் அவரைக் கல்யாண நாள் அன்னிக்கே மண மேடையில் பார்க்க ஆசைப்படறேன்."

மாப்பிள்ளையின் அம்மா சௌந்தரம் குறுக்கிட்டாள்.

"நீ சொல்றது சரியில்லேம்மா... எதுக்கும் என் பையனோட போட்டோவை ஒரு தடவை பார்த்துடு..."

நிலா புன்னகைத்தாள்.

"வேண்டியதில்லை..."

"இது என்னம்மா பிடிவாதம்?"

"உங்க மகனோட பிடிவாதத்தை மட்டும் ஒதுக்கிட்டீங்களே?"

வெங்கடேஷ்வரன் பெருமிதம் கலந்த சிரிப்போடு சிவராஜனைப் பார்த்தாள்.

"இனி உங்க பொண்ணுக்கு நீங்கதான் சொல்லணும்."

சிவராஜன் மகளை ஏறிட்டார். "பாரம்மா, கல்யாணம்ங்கிறது சாதாரண விஷயம் இல்லை. இரண்டு காதையும் கண்ணையும் அகலமா திறந்து வெச்சிக்கிட்டு யோசனை பண்ணவேண்டிய விசயம். மாப்பிள்ளை உன்னோட போட்டோவைப் பார்க்கலைங்கிற காரணத்துக்காக நீயும் பார்க்க மாட்டேன்னு சொல்றது சரியில்லை..."

"அப்பா நீங்களும் அம்மாவும் வேணும்ன்னா மாப்பிள்ளையோட போட்டோவைப் பாருங்க... உங்களுக்குப் பிடிச்சா ஓ.கே. சொல்லுங்க. பிடிக்கலையா... வேண்டாம்னு சொல்லிடுங்க.."

"நானும் அம்மாவும் மாப்பிள்ளையோட போட்டோவைப் பார்த்துட்டோம் நிலா..."

"உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"பிடிச்சிருக்கு."

"அது போதும்."

"இருந்தாலும் நாங்க பார்க்கிற பார்வைக்கும், நீ பார்கிற பார்வைக்கும் வித்தியாசம் நிறைய இருக்கும். இது ஆயிரங் காலத்துப் பயிர். வாழ்நாள் பூராவும் வாழ்க்கை நடத்த வேண்டிய பந்தம்..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதா என்ன?"

"பின்னே ஏம்மா அதை விளையாட்டா எடுத்துக்கறே?"

"இது விளையாட்டில்லை... ஒரு நல்ல அனுபவம்."

"பின்னாடி பிரச்சனையாயிட்டா?"

"பிரச்சனையாகாதுன்னு ஒரு நம்பிக்கைதான்..."

"எங்க திருப்திக்காகவாவது ஒரு தடவை மாப்பிள்ளையோட போட்டோவை..."

"ஸாரி..."

எழுந்து கொண்டாள் நிலா. வெங்கடேஷ்வரனையும் சௌந்தரத்தையும் புன்னகையோடு பார்த்தபடி சொன்னாள்.

"இந்த நிமிஷத்திலிருந்து நீங்க ரெண்டு பேரும் எனக்கு மாமா அத்தை. கல்யாண ஏற்பாடுகளை ஆரம்பிச்சடலாம். எனக்கு இந்தக் கல்யாணத்தில் பரிபூர்ண சம்மதம்."

சொல்லிவிட்டுத் தன்னுடைய அறை நோக்கிப் போகும் நிலாவையே நான்கு பேரும் வியப்போடு வெறித்தார்கள்.

**(தொடரும்)**

முதல் அத்தியாயத்தை எழுதி முடித்து 'தொடரும்' போட்டு விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்தான்.

"நீ சொன்ன எதிர் வீட்டு 'நிலா' கதையைத் தொடரா எழுத ஆரம்பிச்சு முதல் அத்தியாயத்தை முடிச்சிருக்கேன். மீதிக்கதையை அத்தியாயங்களாக எழுதி முடிக்கிறதுக்கு முந்தி.....?"

"முந்தி...?"

"அந்த நிலாவை நான் பார்க்கணும்."

"அது முடியாதுங்க..."

"ஏன்...?"

"அவ அட்மிட் ஆகியிருக்கிற மன நோய் நல ஹாஸ்பிடலில் டாக்டர்ஸ் ரொம்ப ஸ்ட்ரிக்ட். நிலாவைப் பார்க்கறதுக்கு அவளோட அப்பா, அம்மாவைத் தவிர யாரையும் 'அலவ்' பண்றதில்லை..."

"நான் ஒரு எழுத்தாளன். ஒருவேளை டாக்டர்கள் என்னை அனுமதிக்கலாம். கிளம்பு!"

கிளம்பினோம்.

**(தொடர்ந்து வரும்)**

---

## திடீர் தொடர் 03

கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை....

# கவியரசுவின் சுயசரிதை

அவனுக்குச் சுவீகாரச் சடங்கு நடத்திக்கொண்டிருந்தார்.

அவன் கையில் ஒரு வெள்ளித் தட்டைக் கொடுப்பார்கள்: அதில் வெற்றிலை, பாக்கு வைத்திருப்பார்கள்.

பையனுக்கு எதிரே முதலில் அவன் தந்தை வந்து நிற்பார்.

குடும்பத்துப் பட்டுத் துண்டு ஒன்றை அவர் தலையிலே கட்டிக்கொள்வார்.

தன் கையிலிருக்கும் வெள்ளித் தட்டை, மகன் தந்தையிடம் தருவான்.

பிறகு அவர் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிடுவான்.

"போய் வருகிறேன்" என்பது அதன் பொருள்.

இப்படி வரிசையாக தாய், சகோதர சகோதரிகள் எல்லோருமே வந்து நிற்பார்கள்.

காலில் விழுந்து எழும்போது, 'கோ' வென்று அலறிவிடுவார்கள்.

காரணம், அந்நாளிலிருந்து அந்தக் குடும்பத்தில் அவனுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை.

உறவுகூட- பையனின் பாச உணர்ச்சியைப் பொறுத்தே பிறகு நீடிக்கும்.

பெரும்பாலும், குழந்தையை விலைக்கு விற்கிற மாதிரி இது.

பத்தாயிரம் இருபதினாயிரம் என்று அதற்கு விலையே உண்டு.

அவனுக்கு வாங்கப்பட்ட விலை ரூபாய் ஏழாயிரம்.

❖ ❖

**ந**டுத்தரக் குடும்பத்திலிருந்து பணக்காரக் குடும்பத்திற்குப் போகிற எந்தப் பையனும், நாளாக நாளாகப் பிறந்த வீட்டுப் பாசத்தை இழந்துவிடுவான்.

ஆனால் அவனுக்கோ குடும்பப் பாசம் என்பது இரத்தத்தோடு கலந்தது.

தாய் தந்தையரிடமும் உடன்பிறந்தோரிடமும் விடை பெற்றபோது அவர்கள் அழுதது போலவே அவனும் அழுது விட்டான். இத்தனைக்கும் அவனைச் சுவீகரித்துக்கொண்ட குடும்பத்தின் சொத்து மிகவும் குறைவுதான்.

பல பையன்கள் பெரும் கோடீஸ்வரர்கள் வீட்டிற்கே சுவீகாரம் போயிருக்கிறார்கள்.

ஆனாலும் பிள்ளைப்பேறு இல்லாத ஒரு தாயின் மனத்துக்கு அமைதி தரப்போகிறோம் என்கிற மகிழ்ச்சி அவனுக்கு இருந்தது.

அவன் சுவீகாரம் போன இடத்தில், சொத்துத்தான் அதிகமில்லையே தவிர, அரசியலுக்கும் அதற்கும் சம்பந்தமிருந்தது.

காரைக்குடியிலேயே மிகப் பெரிய அரசியல்வாதி, தியாகி என்றெல்லாம் போற்றப்பட்டவரும், இன்று சுதந்திரா கட்சிப் பிரமுகராக இருப்பவருமான திரு. சா. கணேசனின் சொந்த அத்தையே அவனை சுவீகரித்துக்கொண்ட தாயாவார்.

அவனை அழைத்துப்போக திரு. கணேசனும் வந்திருந்தார்.

அவர் முன்னேற்பாடாகவே அவனைக் காங்கிரஸ்காரனாக ஆக்குகிற நிலையில் வந்திருந்தார்.

கதர் வேட்டியும், கதர்ச் சட்டையும் அவனுக்கு ஏராளமாகத் தைக்கப்பட்டிருந்தன.

காலை ஐந்துமணிக்கெல்லாம் அவன் பிறந்த ஊரிலிருந்து காரைக்குடிக்கு வந்து சேர்ந்தான்.

கழுத்துக்குச் சங்கிலி, கைக்குச் சங்கிலி, வைரக் கடுக்கன், வைர மோதிரம் என்று ஏராளமான நகைகளை அவன் உடம்பில் பூட்டினார்கள்.

அதுவரை அந்த வீட்டில் கணக்கப்பிள்ளையாக இருந்த ஒருவர், அவனிடம், வந்து "நான்தான் உங்கள் வீட்டுக் கணக்கப்பிள்ளை," என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"உங்கள் வீடு?" என்று அவர் சொன்ன வீட்டிற்கு அவன் இனித்தான் போகவேண்டும்.

முதலில் அவனைக் கொண்டுவந்து இறக்கிய வீடு அவனது உடன்பிறந்த சகோதரர் வீடாகும்.

அவர் ஏற்கனவே காரைக்குடிக்கு சுவீகாரம் வந்தவர்.

அந்த வீட்டிலிருந்து காலை எட்டரை மணிக்கு ஊர்வலமாக அவனை அழைத்துப் போனார்கள்.

வழிநெடுகிலும் பெண்ணைப் பெற்றோர் பலர் நின்று அவனைப் பார்த்தார்கள்.



அவன்கூடவே வந்த புதுவீட்டு உறவினர் ஒருவர் ஒவ்வொரு வீதியிலும் வரும்போதும் பாதி மறைந்து நின்ற சில பெண்களைக் காட்டி "இந்தப் பெண் வீட்டார் கேட்டார்கள்; அந்தப் பெண்வீட்டார் கேட்டார்கள்," என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

ஏதோ மிதிலாபுரியில் ராமன் ஊர்வலம் வருபதுபோல் அவன் வந்துகொண்டிருந்தான்.

புதுவீடு வந்தது.

புதிய அன்னை எதிர்கொண்டார்.

"இவர்தான் உன்தாய்!" என்று அறிமுகப் படுத்தினார்கள்.

காலைத் தொட்டு வணங்கினான்.

புதிய வீட்டுக்குள் நுழைந்தான்.

புதிய பெயரொன்றைச் சூட்டினார்கள்.

அது சுவீகாரத் தாயின் மாமனார் பெயர்.

அவனது பாட்டனார் பெயர்.

பழைய முத்தையாவிலிருந்து அவன் புதிய நாராயணனானான்.

அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் இரண்டொரு நாள் அங்கேயே தங்கிவிட்டு, கண்ணீரோடு விடைபெற்றுக் கொண்டார்கள்.

அவர்களைப் பிரிந்த அன்றிரவு அவன் பட்ட துயரம் சிறிதன்று!

புதிய இடம் பிடிபடுவதற்கு ஒரு வாரம் ஆயிற்று.

ஒருவாரம் கழித்து, மீண்டும் சென்னைக்குக் கிளம்பினான்.

*(சரிதம் தொடரும்)*



படிப்பகம்

www.padippakam.com

# திருட்டு மணம்

**கலுவாஞ்சிக்குடி யோகன்**
**அவுஸ்திரேலியா**

**தி**வ்யா திருமணத்தை வெறுக்கவில்லை. இப்பொழுது என்ன அவசரம் என்றுதான் கேட்டாள். அவளைப் பொறுத்தவரை அவளுக்குத் திருமணத்திற்கு இன்னும் வயதிருக்கிறது, அதைவிட அழகு நிறைய இருக்கிறது, சீதனமாகக் கேட்பதையெல்லாம் கொடுக்குமளவிற்கு பணவசதி இருக்கிறது. அப்படியிருக்கும்போது இப்பொழுது ஏன் அவசரப்படவேண்டும் என்பது அவளின் வாதம்.

அந்த வாதத்தை திவ்யாவின் தந்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அம்மா உனக்குக் கல்யாண வயது வரவில்லையென்பது ஏதோ உண்மை. ஆனால் நாடு கெட்டுக்கிடக்கிறது. எங்கும் வெட்டுக்குத்துப் பிரச்சனைகள், கற்பழிப்பு, கழுத்து நெரிப்பு என்று வேலியே பயிரை மேயும் கொடுமை. பருவப் பெண்கள் படலையைத் தாண்ட முடியாதளவிற்குப் பாதகம். ஏன் உனக்கே தெரியுமே நமது கிருஷாந்திக்கு நடந்த அநீதி?அப்படியிருக்கும்போது நாங்கள் அவசரப்படுவதில் என்ன பிழையிருக்கிறது? உனக்கு ஏதாவது நடக்கக்கூடாதது நடந்தால் என்னையும் அம்மாவையும் உயிருடன் பார்ப்பாய் என்றா எண்ணுகிறாய்?" என்று உணர்ச்சிபூர்வமாய் பேசி நிறுத்தினார் தந்தை.

இதன் பிறகு அவள் வாய்திறக்கவில்லை. விருப்போ, வெறுப்போ-சம்மதம் என்பது போல் இருந்துவிட்டாள்.

பவளம் மாமிதான் இந்தக் கல்யாணத்தைப் பேசிவந்திருந்தாள்.மாப்பிள்ளை இலண்டன் யூனிவேசிட்டி. இந்த மாதம் படிப்பு முடிகிறதாம், முடிந்ததும் திருமணஞ் செய்து வைக்கப் பெற்றோர்கள் விரும்புகின்றார்களாம், என்று விபரங்களைத் தெரிவித்திருந்தாள்.

இரு வீட்டிலும் சம்மதங்கள் தெரிவிக்கப்பட்டன. தட்டுக்கள் பரிமாறப்பட்டன. மாப்பிள்ளை இலண்டனிலிருந்து வந்திறங்கினார்.

அண்ணாந்து பார்க்குமளவு உயரம், கம்பீரமான தோற்றம், வெள்ளை வெளேரென்று- நுனி நாக்கில் ஆங்கிலம். திவ்யா மாப்பிள்ளையைப் பார்த்து மலைத்துப் போனாள்.

'பெற்றோர்கள் வற்புறுத்தியதால்தான் நானே சம்மதித்தேன். இல்லாவிட்டால் இவரைத் தவறவிட்டிருப்பேனே!' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டாள் திவ்யா.

"இரு வீட்டிலும் தட்டுக்கள் பரிமாறப்பட்டன. மாப்பிள்ளை இலண்டனிலிருந்து வந்திறங்கினார்."



சீதனம் பற்றிப்பேச்சு எழுந்தது. அது மகனின் விருப்பம் என்று மாப்பிள்ளையின் பெற்றோர்கள் தெரிவித்தார்கள்.

"அங்கிள் நான் ஒன்றும் கேட்கவில்லை. நீங்கள் விரும்பினால் உங்கள் ஒரே மகளுக்குச் செய்யவேண்டியதைச் செய்யலாம்!" என்று பாதி ஆங்கிலமும் பாதி தமிழிலுமாக மாப்பிள்ளை கூறினார்.

மாப்பிள்ளையின் பேச்சு நடவடிக்கைகள் திவ்யாவின் தந்தையை வெகுவாகக் கவர்ந்தன. தன் ஒரே மகளுக்குச் சேரவேண்டிய சொத்துக்களை மாப்பிள்ளைக்கு எழுதினார். பணமாகவும் ரொக்கங்கள் பரிமாறப்பட்டன. அதிக ஆடம்பரமில்லாமல் கொழும்பிலுள்ள ஒரு 'ஹொட்டலில்' திவ்யாவின் திருமணம் நிகழ்ந்து முடிந்தது.

திருமணம் முடிந்ததும் "திவ்யா, திவ்யா" என்று அவளுக்குப் பின்னாலேயே மாப்பிள்ளை சுற்ற ஆரம்பித்துவிட்டார்.

நிமிட வாக்கில்கூட அவர் திவ்யாவை பிரியவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அவளின் சொந்தங்கள் சிலர் மாப்பிள்ளையை பெண்டாட்டி தாசன், பெண்ணைக் காணாதவன் என்றுகூட முணுமுணுத்தார்கள். இவையெல்லாம் திவ்யாவிற்குப் பெருமையாக இருந்தது.

சகல விதத்திலும் தனக்குப் பொருந்திய இந்த மாப்பிள்ளை கிடைத்ததற்கு ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டாள் அவள்.

மாப்பிள்ளையின் மூன்று மாதகால 'விஸா' நிறைவாகியது. இரண்டு தடவைகள் 'விஸா'வை மாற்றி நாட்களை அதிகமாகவும் பெற்றுவிட்டார் அவர். அவருக்குப் புதுமனைவியை விட்டுப் பிரிந்துபோவதற்கு எள்ளளவும் இஷ்டமில்லாமல் இருந்தது. இருந்தும் இனிப் போயே ஆகவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.

அன்று திவ்யாவைப் பொறுத்தளவில் துக்ககரமான நாளாக இருந்தது. கணவர் இலண்டன் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவருக்கும் மனைவியை விட்டுப் பிரிவது சுலபமாக இருக்கவில்லை.

"இது தற்காலிக பிரிவுதான் டியர். போய் மூன்று மாதத்திற்குள் உன்னை 'ஸ்பொன்ஸர்' பண்ணுகிறேன்!" என்று கூறிவிட்டு அவர் இலண்டன் பயணமானார்.

அவர் நாட்டைவிட்டுப் புறப்பட்டு கிழமையொன்று நகர்ந்திருக்கும். அதற்குள் பத்துக்கும் மேற்பட்ட தடவை திவ்யாவுடன் தொலைபேசியில் பேசிவிட்டார். நாட்கள் நகர்ந்து மாதமொன்று கழிந்தது. அப்பொழுது மாப்பிள்ளை கடிதமொன்று எழுதியிருந்தார். கூடிய விரைவில் திவ்யாவை 'ஸ்பொன்ஸர்' பண்ணுவதாக குறிப்பிட்டிருந்தார் மாப்பிள்ளை.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன் கடமையைச் சரிவரச் செய்துகொண்டிருந்தது. ஆனால் திவ்யாவின் காரியங்கள் மட்டுமே எதுவும் நிகழாமல் இருந்தன.

மாப்பிள்ளை அனுப்பிய ஓரிரு கடிதங்களும் நின்றுபோக ஆரம்பித்தன. இப்படியும் அப்படியுமாக தொடர்புகள் எல்லாம் துண்டிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது.

திவ்யாவும், பெற்றோர்களும் கலவரப்படத் தொடங்கிவிட்டார்கள். மாப்பிள்ளையின் பெற்றோர்களிடம் ஓடினார்கள். தங்களுக்கும் தொடர்புகள் எதுவும் இல்லை என்று அவர்களும் கையை விரித்தார்கள்.

அப்பொழுதுதான் திவ்யாவின் தந்தை விழித்துக்கொண்டார். தெரிந்தவர்கள் மூலமாக விசாரிப்புக்கள் தீவிரமாயின. அதன் பலனாகத்தான் அந்தச் செய்தி இடியாக வந்து காதில் விழுந்தது.

"மாப்பிள்ளை படிக்கும் காலத்தில் இலண்டன் பெண் ஒருவரைத் திருமணம் செய்து குழந்தையும் இருக்கிறதாம்!"

"இலண்டனில் கூட இது பல பேருக்குத் தெரியாதாம்!" பெண்ணைப் பெற்றவர்கள் பதறிப்போனார்கள்.

தன்னால்தான் மகளுக்கு இந்த நிலைமையென்று திவ்யாவின் தந்தையை குற்ற உணர்வு தாக்கத் தொடங்கியது.

தான் ஆராயாமல் அவசரப்பட்டு எடுத்த முடிவினால்தான் இந்த அநியாயம் நடந்தது என்று நொந்து பலமிழந்து போனார் அவர். சில நாட்கள் கழிய தனக்குத்தானே வருந்தி வருந்தி அவரின் உயிர் பிரிந்து போனது.

தாலி கட்டியவனின் துரோகம், தந்தையின் இழப்பு இவற்றை யோசித்து யோசித்து திவ்யாவிற்கு 'மூளைச் செல்கள்' பாதிப்படையத் தொடங்கின.

அவள் வழமையான திவ்யாவாக இல்லாமல்போக ஆரம்பித்தாள். பார்ப்பவர்களெல்லாம் அவளுக்குப் பைத்தியக்காரப் பட்டம் சூட்டத் தொடங்கினார்கள்.

பெற்ற வயிறு பற்றியெரிந்தது. தாய் மகளைப் பார்த்து கண்ணீர் வடிக்க ஆரம்பித்தாள்.

பாதகமான நிகழ்வுகள் பெற்றோல் தீயைப்போல் விரைவாகவே பரவி விடுகின்றன.

திவ்யாவின் சித்தி ஒருத்தி அவுஸ்திரேலியாவில் இருந்தாள். எப்படியோ யார் மூலமோ அவளும் இந்தச் செய்தியறிந்து பதறிப்போனாள். குழந்தைகளேயில்லாத சித்தி திவ்யாவையும் தாயாரையும் அவுஸ்திரேலியாவிற்கு அழைத்தெடுத்தாள்.

அவுஸ்திரேலியாவிற்கு வந்தும் வராததுமாக பலநாட்கள் ஆஸ்பத்திரி-வீடு என்று கழிந்து கொண்டிருந்தன. ஆனால் பலன் எதுவும்தான் முழுமையாகக் கிடைக்காமல் போயிற்று.

"பழைய திவ்யாவை முற்றாகப் பார்க்க முடியாது!" என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள்.

இருந்தும், எதிர்காலம் சூன்யமாகிப் போன நிலையிலும் திவ்யாவின் பொழுது சந்தோஷமாகவே கழிந்து கொண்டிருக்கிறது.

அவளால் யாருக்கும் எந்தவித தொந்தரவுமில்லாமல் நாட்கள் நகர்கின்றன. காலையில் எழுந்து வாளியைத் தூக்கினால் மாலை வரை திவ்யா நிலத்துக்கு நீரூற்றிக் கொண்டேயிருப்பாள். அவள் நீரூற்றிய இடங்களில் எந்தவித புல் பூண்டும் முளையாதிருப்பது தான் பரிதாபமாக இருக்கும். ●

---

# கரண்ட்

**சுகந்தி**

**அ**ம்மா வீட்டிற்குப் போய் ஐந்து நாட்கள் இருந்துவிட்டு வந்த விமலா வீட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றதும் திடுக்கிட்டாள். ஹோலில், டைனிங் டேபிள் அருகில் எல்லாம் மின்விசிறிகள் ஓடிக்கொண்டிருந்தன!

தான் அம்மா வீட்டுக்குப்போகும் பொழுது கரண்ட் போயிருந்தது ஞாபகத்துக்கு வந்தது விமலாவுக்கு. துணிகள் காய்வதற்காக எல்லா மின்விசிறிகளையும் ஓட விட்டிருந்தாள் அவள். திடீரென்று கரண்ட் போனதும் 'அம்மா வீட்டிற்குப் போகிற அவசரத்தில் ஸ்விட்சுகளை 'ஓஃப்' செய்யாமல் போய்விட்டோமே' என்று வருந்தினாள்.



அவள் கணவன் கோபாலுக்கு தன் மாமனாரைக் கொஞ்சமும் பிடிக்காது. விமலாவை அவள் அம்மா வீட்டுக்குப் போகக் கூடாதென்று கண்டிப்பாய் சொல்லியிருந்தான் அவன். அவள் மனமோ அம்மா-அப்பாவை பார்க்கத் துடித்தது.

அலுவலக விஷயமாக ஐந்து நாட்கள் வெளியூர் போயிருந்தான் கோபால். ஒரு நாள் அம்மா அப்பாவைப் பார்த்துவிட்டு வரலாமென்றுதான் போனாள் விமலா. உடனே திரும்ப முடியவில்லை. கணவர் வெளியூரிலிருந்து திரும்பி வரத்தான் ஐந்து நாட்களாகுமே என்று ஆசை தீர, தாய்வீட்டில் இருந்துவிட்டு வந்தாள். தான் வீட்டில் இல்லை என்பதைக் கணவன் எப்படியாவது கண்டுபிடித்துவிட்டால்..? இவ்வளவு கரண்ட் எப்படியாயிற்று என்று மீட்டரை பார்த்துக் கேட்டுவிட்டால்...? பயம் பிடித்துக்கொண்டது.

ஆறாவது நாள் வந்துவிட்டான் கோபால். வந்ததும் வராததுமாக மீட்டரிடம் போய்ப் பார்த்தான். பிறகு விமலாவிடம் வந்து,"நான் இல்லாத சமயத்தில் நீ அம்மா வீட்டிற்குப் போய்விட்டால்? அதை கண்டு பிடிப்பதற்காக மீட்டர் ரீடிங்கை குறிச்சு வைச்சுக்கிட்டுப்போனேன். நீ வீட்டிலே இல்லாட்டா ரீடிங் அப்படியேதானே இருக்கும்... முப்பத்தஞ்சு யூனிட் அதிகப்படி ஆகியிருக்கு!" என்றான் கோபால்.

தான் சுவிட்சுகளை 'ஓஃப்' செய்யாமல் போனது எவ்வளவு நல்லதாகப் போயிற்று என்று எண்ணி உள்ளுக்குள்ளேயே சந்தோஷப்பட்டாள்.

---

# விரல்கள்

**பர்வதவர்த்தினி**

**ப**ஸ்சின் ஜன்னல் ஓர சீட். ஒரு சின்னப் பையன் வேடிக்கை பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் அவனுடைய தகப்பனார். அடுத்து- வாயை வைத்துக் கொண்டு சும்மா உட்காரத் தெரியாத நான்.

"படிக்கிறாயா?" பையில் இருந்த சொக்கலெட்டை எடுத்து நீட்டினேன்.

"முதலாம் வகுப்பு படிக்கிறான்..."

என்ன காரணமோ தகப்பனாரிடமிருந்து பதில் வந்தது. நானும் கிருஷ்ணா, ராமாவென்று சும்மா இருந்திருக்கலாம். அதைவிட்டு-

"மைடியர் சைல்ட்... நான் ஒண்ணு கேட்கிறேன். பதில் சொல்வியா?" என்றேன்.

பையன் திரும்பி என்னைப் பார்த்தான். அவன் பார்வையில் உறுதி தெரிந்தது.

"உன் கையில் எத்தனை விரல் இருக்கு?"

"அஞ்சு விரல்."

"இன்னொரு கையில்?"

"அஞ்சு!"

"வெரிகுட் காலில்?"

"அஞ்சு"

"இன்னொரு காலில்?"

"இன்னொரு அஞ்சு?"

"மொத்தம் எத்தனை விரல்கள்? ரொம்ப சுலபமான கணக்குத்தானே?"

பதிலைச் சொல்லிவிட்டுப் பையன் என்னை விட்டிருக்கலாம். விடவில்லை. பதில் கேள்வி போடத் தொடங்கிவிட்டான்.

"மொத்தம்னா? காலிலா? கையிலா? எதில?"



"சேர்த்துச் சொல்லு!"

"காலைச் சேர்த்தா? கையைச் சேர்த்தா? மொத்தம் இருபது! ஆனா, ஒவ்வொரு ரகத்துக்கும் எத்தனை விரல்னு உங்களால சொல்ல முடியுமா? கேட்கட்டுமா?" என்றான்.

"கேளேன்?"

"கட்டை விரல் எத்தனை?"

"நாலு, ஒவ்வொரு ரகத்திலும் நாலு விரல்தானே? ஆள் காட்டி விரல், பாம்பு விரல், மோதிர விரல், சுண்டு விரல்..." என்றேன் கம்பீரமாக.

"சிரிப்பு வருது அங்கிள். ஆட்காட்டி விரல் மட்டும் ரெண்டுதான். நாலு இல்லே. கால் கட்டை விரலுக்குப் பக்கத்தில இருக்கிற விரலுக்கு மட்டும் இந்தப் பெயர் பொருந்தாது. நல்லா யோசியுங்க புரியும்!"

பேச்சை நிறுத்திக்கொண்டு சிறுவன் வேடிக்கையில் ஈடுபட்டான்.

"இனிமேல் இந்தக் காலத்துச் சின்னப் பிள்ளைங்ககிட்டல்லாம் வாயைக் குடுக்காதீங்க. உங்க நாள் படிப்பு வேற! இப்பத்து அறிவு வேற.." யாரோ ஒருவர்.

நான் தோற்றதை உறுதி செய்த பிறகு வாயை இறுக்கி மூடிக்கொண்டேன்! ●

---



# காதலித்த அனுபவம்

**பாரதிராஜா**

**அ**ல்லி நகரத்து குக் கிராமத்தில், அரைக் கால் டவுசருடன் சின்னச்சாமியாய் சிறகடித்த பருவம் அது. என் கிராமத்தில் இருந்து, நாலு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த நாடார் சரஸ்வதி உயர்நிலைப் பள்ளியில் நான் நாலாவது, ஐந்தாவது படித்துக்கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். மாலையில் பள்ளி முடிந்தவுடன் பத்தே நொடியில் வீடு வந்து சேர்ந்துவிடுவேன். பைக்கட்டை (புத்தகப்பை) ஒரு மூலையில் போட்டுவிட்டு, முகம் கழுவாமல், தலையில் சல சலவென்று தண்ணீர் மட்டும் தடவி முடியை நெற்றியில் விழுமாறு சுருட்டிவிட்டு, சூடுபறக்க தேய்த்து கர்லிங் வைத்து விடுவிடுவென்று தோட்டத்திற்குச் செல்வேன். சென்று தோட்டவேலையில் இருக்கும் அம்மாவை சமையல் செய்ய வீட்டிற்கு அனுப்புவேன்.

திரும்பிப் பார்த்தால் ஒத்தை கயித்தில் கவனமாக நடக்கும் கழைக் கூத்தாடியைப் போல், என் வயசு முத்துப்பேச்சி அந்த சின்ன வரப்பில் நடந்து வந்து கொண்டிருப்பாள். (தேனி சந்தையில் இருந்து தாத்தா வாங்கி வந்த சீனி உருண்டை என் டவுசர் பாக்கெட்டில் சிணுங்கிக் கொண்டிருக்கும்.) என்னைத் தாண்டி செல்வதற்குள் சீனி உருண்டை அவள் கைக்குச் சென்றுவிடும் வேளையில்,

"பைக்கட்டை வச்சுட்டு வர்றதுக்கு இவ்வளவு நேரமா...?"

"இல்லை. ஆத்தா சந்தைக்கு போயிட்டு இப்பத் தானே வந்தாக! இந்தா.." மடித்து சொருகிய பாவாடைக்குள் இருந்து இரண்டு முறுக்கு என் கைக்கு மாறும்.

அப்பாடி எவ்வளவு பெரிய சாதனை செய்திருக்கிறேன்...!

என் நண்பர்களோடு கிணற்றில் நான் குளிப்பேன், மரத்தில் ஏறி மாங்காய் பறிப்பேன், ஆத்து மணல்ல விளையாடுவேன். அதுக்குள்ள இருட்டிக் கொண்டு விடும். அதுவரைக்கும் என் சம்பந்தப்பட்ட வேலையை எல்லாம் (ஆடு, மாடு பாத்துக்கறதுதான்) முத்துப்பேச்சி தான் பாத்துக்கும்.

சில நேரம் என் சட்டை டவுசரை கூட துவைச்சு கொடுத்திருக்கு.

"சின்னச்சாமி, அந்த சீமை மாடுதான் என் கைக்கு சிக்க மாட்டேங்குது, அதை மட்டும் நீ பத்திட்டு போ, நேரமாச்சு... நான் வர்றேன்..."

முத்துப்பேச்சியின் பரிவர்த்தனைகள் என்னுடைய அன்றாட பாடத் திட்டத்தில் பதிவாகிப் போன ஒன்று.

நாலு மணிக்கு பெல் அடித்து விட்டால், முதல் ஆளாக வீட்டிற்கு வருபவன் நான்தான். இதைப் பத்தி...

"என் புள்ளை மணியடிச்சா அங்கிட்டும் இங்கிட்டும் ஆடிப்பாடி திரியாமே, நேரா வீட்டுக்கு வந்து என் கை வேலையை மாத்துற மாதிரி எவ புள்ளை, பெத்தத் தாய்க்கு ஒத்தாசையா இருக்கு..?"

இப்படி என் அம்மா மத்தவுங்ககிட்ட என்னைப்பத்தி பீத்திக்குவாங்க. ஆனா,

கிராமத்துக் காதலுக்கு கவிதைக் கிரீடம் சூட்டி ராஜசபைக்கு அழைத்து வந்து இலக்கியக் காதலர்களோடு, கை குலுக்க வைத்த திரையுலக ராஜா -இயக்குநர் பாரதிராஜா. அவர் நெஞ்சிலே பொத்தி வைத்த காதல் மொட்டு இங்கே பூத்திருக்கு- வெட்கத்தை விட்டு...

முத்துப்பேச்சிக்காகத்தான் மூச்சிறைக்க ஓடியாறேன் என்கிறது உண்மையிலே, யாருக்குத் தெரியும்?

ஒரு நாள் வரப்பு மேல நின்னுக்கிட்டு ஒரு கொம்பை எடுத்து வீசிக்கிட்டு இருந்தப்ப, பின்னால நின்ன முத்துப்பேச்சி தலையிலே பட்டுச்சு. தலையில இருந்து இரத்தம் குபு குபுன்னு கொட்டிக்கிட்டு இருக்கு. நான் பதறிப் போயிட்டேன்.

அதுக்குள்ள பக்கத்து களத்து மேட்ல இருந்த அவுங்க அம்மா, முத்துப்பேச்சி அலறலைக் கேட்டு என்ன ஏதுன்னு கேட்டுக்கிட்டே ஓடி வந்தாங்க.

"ஏன்டா, என் புள்ளை மண்டைய உடைச்சே?"ன்னு கேட்டா, என்ன சொல்றதுன்னு வெல வெலத்து நின்னேன். அவுங்க அம்மா நெருங்கி வந்துட்டாங்க. அப்ப முத்துப்பேச்சி சொன்னா-

"அம்மா சின்னச்சாமி ஒண்ணும் பண்ணலை... நான் தான் அந்த கல்லுமேல் விழுந்துட்டேன்..."

செத்தேன்னு நினைச்ச எனக்கு அப்பத்தான் உசிரு வந்தது. அதுக்கப்புறம் முத்துப்பேச்சி மேல எனக்கு பிரியம் அதிகமாயிடுச்சு... என்னைக் காட்டிக் கொடுக்காமெ, பொய் சொன்னவளாச்சே!

வயசுகூட கூட, திருவிழாவிலே சந்தையிலே, கண்ட கண்ட இடத்துல, தூர நின்னு பார்த்துக்கிட்டே இருக்கணும்ன்னு தோணும். தொட்டுக்கூட பேசியதில்லை. ஒரு நாள் பாக்காட்டியும், மனசு பாரமாயிடும். இதைத் தானேய்யா சைட் அடிக்கிறதுன்னு சொல்றீங்க...?

கொஞ்ச நாள் கழிச்சு நான் மதுரைக்கும், சென்னைக்கும் அலைஞ்சுக்கிட்டு இருந்தேன். எத்தனை நாள் கழிச்சு அல்லி நகரத்துக்கு போனாலும், முத்துப்பேச்சிக்காக மட்டுமே ஊருக்குப் போறதா ஒரு போதை ஏறும். ஒருமுறை மெட்ராஸ்லே இருக்கறப்ப முத்துப்பேச்சிக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னு யாரோ சொன்னாங்க. மனசுல காரமுள்ளாலே தேய்ச்ச மாதிரி, சுருக்குன்னு குத்திச்சு.

ஏன் தெரியலே... அவளை கல்யாணம் முடிக்கவா காத்துக்கிடந்தேன்...? இல்லையே...

அப்புறம் ஏன் அப்படி ஒரு வலி...?


படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

# பிரிவோம் பிரியாதிருக்க

பிரிவு என்ற ஒன்று
இல்லாவிட்டால்
எந்தக் காதலும்
காவியமாகி இருக்காது!

சோகம் என்ற ஒன்று
இல்லாவிட்டால்
எந்தக் காதலும்
அமரத்துவம் பெற்றிருக்காது!

பிரிவு என்ற வாளால்
காயப்பட்ட
இதயத்தில் இருந்து
சோகம் கொட்டுகிறது!

அதன் ஒவ்வொரு துளியும்
காதலை ஈரப்படுத்தி
இதமாக்குகிறது!

தினமும் அறுசுவை
விருந்து
உண்ண முடிந்தவனுக்கு
உணவின் அருமை
தெரிவது இல்லை!

பசித்தவனுக்குத்தான்
விருந்தின் மகத்துவமறிந்து
புசிக்கத் தெரிகிறது!

அழுகின்ற குழந்தைதான்
பால் குடிக்கும்!

ஒன்றைப் பெறுவதற்காக
போராடும் போதுதான்
அதன் அருமை புரிகிறது!

இலவசமாகக் கிடைத்தால்
தங்கம்கூட
மதிப்பை இழக்கும்!

சும்மா கிடைத்தால்
சுதந்திரம்கூட
பெறுமதி இழந்துவிடும்!

பெறுவது, இழப்பது
பெறுவதற்காக போராடுவது
என்று இயங்கிக் கொண்டிருப்பதே
வாழ்வில் பிடிப்பைத் தருகிறது!

ஒரு குறியை நோக்கி
ஓடிக் கொண்டிருந்தால்தான்
வாழ்க்கை உற்சாகமாக
உருண்டு கொண்டிருக்கும்!

குறி இல்லாத வாழ்க்கை
குறுகிவிடும்!

இருளில் இருந்தால்தான்
ஒளியின் விலாசம்
தேடும் ஆவல் வருகிறது!

வெளிச்சத்தில் இருக்கும்போதே
இருளின் தேவையும்
இரசனைக்குரியதாகிறது!

ஓய்வே இல்லாமல்
தோன்றிக் கொண்டிருந்தால்
சூரியனின் பெருமையும்
சுருங்கிப் போகும்!



நாள் முழுக்க
கோலமுகம் காட்டினால்
நிலவின் அழகும்
சிறுத்தே போகும்!

தினமும் பெய்தால்
மழைக்கு
என்ன மரியாதை!

பூமியை ஏங்கவைத்து
பெய்யும் மழைக்கே
பூரண மரியாதை!

ஏங்கிய பூமியே
ஈரத்தின் இதத்தை
உணர்ந்து கரைகிறது!

காதலும் அப்படித்தான்
காதலர்களும் அப்படித்தான்!

தூரம் அதிகமாகும்போதுதான்
காதல் வேகமாகிறது!

தூரம்தான்
நெருக்கத்தை நேசிக்க
கற்றுத் தருகிறது!

தூரம்தான்
ஒருவரது அருமையை
இன்னொருவருக்கு
எடுத்துக் காட்டுகிறது!

நீயின்றி நானில்லை
என்பதும்,
நீதான். நான்
நான்தான் நீ
என்பதும்
பிரிவின் போதுதான்
உணரப்படுகிறது!

ஒன்று கலப்பது
ஒரு சுகம்!
பிரிந்திருப்பது
இன்னொரு சுகம்!

பிரிவு என்பது
முதலில் சோகம்!
பிரிந்தவர் கூடும்போது
அந்த சோகமே

சுகத்தின்
சுருதியாகிவிடும்!

பிரிந்திருந்து ஒருத்தி
புலம்புகிறாள் கேளுங்கள்!

இந்தப் புலம்பலில்தான்
எத்தனை இதம்!

"எங்கே போனாய்
என் உயிர் காதலா?
நீயும் நானும்
பஞ்சும் தீயும் அல்ல!

தீயும் தீயுமாகவன்றோ
கலந்து சுகித்தோம்!

தீயும் தீயும்
உரசிக்கொள்ளும்
அற்புத கலப்பில்
நம் தேகங்கள் எப்படி
தீய்ந்து போகாமல்
தப்பித்தன?

நீயும் காந்தம்
நானும் காந்தம்.
யாரை யார்
கவர்ந்தோம்
நமக்கே தெரியாது!

நெஞ்சக்கூடு காட்டிடைப்
பொந்தாய் ஆனது!
அங்கொரு அக்னிக்குஞ்சாய்
எம் காதல் ஆனது!

ஊருக்கே தெரிய
எம் காதல்
எரிந்தது!

உறவுகள் எதிர்த்தும்
எம் காதல்
கொழுந்துவிட்டெரிந்தது!

அணைப்பதும் இயலாத
காட்டுத் தீயில்
எம் காமம் குளிர்காய்ந்தது!

உயிரும் உயிரும்
ஒன்று கலந்தன.
உடலும் உடலும்
ஒன்று கலந்தன!

மேகங்கள் மேலே
என்னை வைத்தாய்!
மோகம் தீர
என்னை வதைத்தாய்!

பூமியை விட்டு
வெகுதூரம் போனோம்!
காற்றில் மிதந்து
சுகத்தினில் இலயித்தோம்!

உனக்குள் என்னையும்
எனக்குள் உன்னையும்
ஏந்திச் சுமந்தும்
பஞ்சப் பொதியாய்
எப்படி உணர்ந்தோம்?!

எத்தனை விசித்திரம்
எத்தனை விநோதம்!

பூமியில் இருந்து
வெண்ணெய் போல
நழுவி நழுவி
எங்கே போனோம்?!

உலகில் இருந்து
அந்தப் பொழுதில்
எப்படித் தொலைந்தோம்?!

முத்துக் குளிக்கும்
மீனவர் போல
மூச்சை அடக்கி
பித்துப் பிடித்து
சுகத்தில் குளித்தோம்!

காதல் சுகம்
காமம் இதம்!
காதல் இல்லாத
காமம் ஜடம்!

என் உயிர் காதலா
எப்போது வருகிறாய்?

எப்போதையும்விட
இப்போதுதான்
உன் அருகாமையின்
அருமை புரிகிறது!

இந்தத் தீ
தனித்திருந்தால்
தன்னையே அழித்துக்கொள்ளும்!

இந்தத் தீ
வாழ்ந்ததும் உனக்காக!
இப்போது
வாழ்வதும் உனக்காக!

பிரிவதற்கு சம்மதித்த
என் பேதமைக்காக
இப்போதுதான் வருந்துகிறேன்!

இப்படியொரு கொடூரமானது
என்று தெரிந்திருந்தால்
அன்று சம்மதித்திருப்பேனா?

இனிமேல் பிரியாமல்
இருப்பதற்கு
இந்தப் பிரிவே போதும்!

பொறுத்திருக்கிறேன்-பிரிவுக்கு
உடன்பட்டது நானல்லவா!
நீயாகப் பிரிந்திருந்தால்
உயிர் விட்டிருப்பேன்!
வா இனி
பிரிவின்றி வாழ
இந்தப் பிரிவில்
இருந்து கற்றுக்கொள்வோம்!"

"அரிதாற்றி அல்லல் நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர்"
குறள்: 1160 அதிகாரம்: 116

தருவது **ரசிகன்**

---

## ஸ்போர்ட்ஸ்

### நடுவருக்குத் தண்டனை

இத்தாலி-சிலி அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது லீக் போட்டியில் சிலிக்கு எதிராக வழங்கப்பட்ட 'பெனால்டி' வாய்ப்பு சர்ச்சைக்குள்ளாகியது தெரிந்ததே. தற்போது அந்த சர்ச்சைக்குரிய 'பெனால்டி' வாய்ப்பை வழங்கிய நைஜீரிய நடுவர் லூசியன் அடுத்த போட்டிகளில் நடுவராகப் பணியாற்றமாட்டார் என்று தெரிகிறது.

தான் கொடுத்த 'பெனால்டி' வாய்ப்பு சரியானதுதான். ஆனால் அதற்கு சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தில் ஆதரவு இல்லாதது வருத்தமளிக்கிறது என்று லூசியன் கூறியிருக்கிறார்.



### சிவப்பு அட்டை

உதைபந்தாட்டப் போட்டியில் வீரர்கள் எதிரணி வீரர்களுடன் முரட்டுத்தனம் காட்டினால், நடுவர் சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றுவார் என்பது தெரிந்ததே.

டென்மார்க்-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நடைபெற்ற லீக்போட்டியில் இரண்டு டென்மார்க் வீரர்களும், ஒரு தென்னாபிரிக்க வீரரும் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

இதனால் ஒவ்வொரு அணியிலும் தலா 11 பேர் வீதம் 22 பேர் விளையாடவேண்டிய அந்தப் போட்டியில் மொத்தம் 19 பேர் மட்டும் விளையாடினர். உலகக் கோப்பை உதைபந்தாட்ட வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

### வெளிநாட்டு வீரர்கள்

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டிகளில் ஒவ்வொரு அணியும், வெளி நாட்டு வீரர்களை கொண்டுள்ளன. பிரேஸில் நாட்டைச் சேர்ந்தவர்களான வாக்னர் லோபஸ், ஜோஸ் கிளேடன், லூயிஸ் ஒலிவிரா ஆகியோர் முறையே ஜப்பான், டுனீசியா, பெல்ஜியம் ஆகிய அணிகளில் விளையாடுகின்றனர்.

ஃபிரான்ஸின் டேவிட் ரிகிஸ், ஜெர்மனியின் தோமஸ்டுவே, தென்னாபிரிக்காவின் ரோய்வீக்லி மூவரும் அமெரிக்க அணியில் விளையாடுகின்றனர். குரோஷிய வீரர் இவிகா வாஸ்டிக் ஒஸ்ரிய அணியிலும், ஹொலண்டின் ஹான்ஸ் வோங்க் தென்னாபிரிக்க அணியிலும் ஆடுகின்றனர். இந்தப் பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே செல்கிறது.

### 200ஐ தொடுவாரா?



இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகள் கலந்து கொள்ளும் சுதந்திரக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தற்போது இலங்கையில் நடந்து வருகின்றன.

இலங்கை வந்துள்ள இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே சுதந்திரக் கிண்ணப் போட்டிகளுக்கு முன் இதுவரை 141 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி 193 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். இவரது சராசரி 26.90. இந்நிலையில் சுதந்திரக் கிண்ணப்போட்டித் தொடரில் 7 விக்கெட்டுக்கள் எடுத்தால் 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய 2வது இந்திய வீரர் என்ற பெருமை கிட்டும்.

ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி சார்பாக அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமைக்குரியவர், முன்னாள் கேப்டன் கபில் தேவ், இவர் 253 போட்டிகளில் 224 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். சராசரி 27.43. இவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் கும்ப்ளே, முதல் இடத்திற்கு வர அதிக வாய்ப்புள்ளது.

இவர்களைத் தவிர ஜவகல் ஸ்ரீநாத் 170 விக்கெட்டுக்களையும், மனோஜ் பிரபாகர் 157 விக்கெட்டுக்களையும், ரவி சாஸ்திரி 129 விக்கெட்டுக்களையும், ஒருநாள் போட்டிகளில் அதிகமான விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

### கால்பந்து சாம்பியன்கள்

உலகக் கோப்பைப் போட்டி சாம்பியன்கள் இவர்கள்தான். (போட்டிகள் நடைபெற்ற வருடம், சாம்பியன், போட்டி நடந்த இடம்.)

| | | |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | இத்தாலி | ஃபிரான்ஸ் |
| 1942 | நடைபெறவில்லை | |
| 1946 | நடைபெறவில்லை | |
| 1950 | பிரேஸில் | உருகுவே |
| 1954 | மே.ஜெர்மனி | சுவிற்ஸர்லாந்து |
| 1958 | பிரேஸில் | சுவீடன் |
| 1962 | பிரேஸில் | சிலி |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | பிரேஸில் | மெக்ஸிக்கோ |
| 1974 | மே. ஜெர்மனி | மே. ஜெர்மனி |
| 1978 | அர்ஜென்டினா | அர்ஜென்டினா |
| 1982 | இத்தாலி | ஸ்பெயின் |
| 1986 | அர்ஜென்டினா | மெக்ஸிக்கோ |
| 1990 | மே.ஜெர்மனி | இத்தாலி |
| 1994 | பிரேஸில் | அமெரிக்கா |
| 1998 | ???? | பிரான்ஸ் |

---

## சிந்தியா பதில்கள்

**★ "கவியரசு கண்ணதாசனை வென்றுவிட்டார் வைரமுத்து" என்று கூறியுள்ளாரே சிவாஜி கணேசன்?**

பெ. தேவரஞ்சனி, கொழும்பு-09.

*பின்னவரை உயர்த்தட்டும், அதற்காக முன்னவரைத் தாழ்த்தியது சரியல்ல! 'சிவாஜியை வென்றுவிட்டார் கமல்' என்று கூறுவது போன்றதே அதுவும்!*

**★ 'சிரச தொலைக் காட்சி'யில் சனி, ஞாயிறு தமிழ் நிகழ்ச்சிகள் கலகலப்பூட்டுகிறதே, நீர் பார்ப்பதே இல்லையா?**

அ. தங்கவேல், மட்டக்குளி.

*தொடர் நாடகங்களை முன்பு 'எம்.ரி.வி. சன் விஷ'னில் ஒளிபரப்பிய நேரம் இல்லத்தரசிகளுக்கு சௌகரியமாக இருந்தது. தற்போது சமையல் செய்யும் நேரத்தில் ஒளிபரப்பி சமையல் கட்டுக்கும் முன்கூடத்துக்குமாக ஓடவைக்கிறார்கள்; தொடர்நாடக நேரங்களையாவது மாற்றுதல் நன்று.*

**★ மலையக மின்மாற்றித் தாக்குதலுக்கு பின்னால் ஒருகுழு இருப்பதாக தொண்டமான் அரசுக்கு கூறியுள்ளாராமே?**

வி. ரவிமாறன், இரத்தினபுரி.

*துப்பறியும் தொண்டராகிவிட்டாராக்கும்!*

**★ கருணாநிதி ஆட்சியைக் கவிழ்க்க ஜெயலலிதா இந்தப் பாடுபடுகிறாரே. நியாயமா?**

ஆர். ரத்னா, திருமலை.

*எந்தவொரு அரசியல் கட்சியும் இன்னொரு கட்சியை கவிழ்ப்பதில்தான் குறியாக இருக்கும்! என்ன, ஜெயா தனது வழக்கு நெருக்கடியால் கொஞ்சம் அதிகமாக பகிரங்கமாகவே தனது அவசரத்தைக் காட்டுகிறார்.*



**★ சிந்தியா! "புலிகளுக்கு ஒருபோதும் ஆதரவில்லை" என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே?**

க. இலங்கேஸ்வரன், வவுனியா.

*ஒருபோதும் ஆதரவில்லை என்பதே பொய்தானே? சென்னையில் புலிகளைச் சந்தித்துப் பேசியதை மறந்துவிட்டாராக்கும்!*

**★ மாகாண சபைத் தேர்தல்கள் தள்ளிவைக்கப்படுமா?**

என். நிவாஸ், மட்டக்களப்பு.

*முயற்சி நடக்கிறது. ஆனால் எதிர்க்கட்சி முரண்டு பிடிக்கிறது!*

**★ தன்னடக்கம் என்றால் என்ன?**

எஸ். பிலோமினா, கொழும்பு-09.

*ஜெர்மனியில் பிரடெரிக் என்பவர் சமயப் பிரசங்கம் செய்வார். பொதுவாக சமயப் பிரசங்கம் என்றாலே வயதானவர்கள்தான் கூடுவார்கள். ஆனால் பிரடெரிக்கின் பிரசங்கத்தைக் கேட்க இளம் பெண்களும் ஆண்களும் அலைமோதினர்.*

*"உங்கள் பிரசங்கம் கேட்க மட்டும் இளம் ஆட்கள் கூடும் இரகசியம் என்ன?" என்று ஒரு நண்பர் கேட்டார்.*

*அதற்கு பிரடெரிக் சொன்ன பதில்:*

*"இவர்கள் என் பிரசங்கத்தைக் கேட்க வரவில்லை. நான் பல பெண்கள் கல்லூரிகளுக்கு விரிவுரையாளராகச் செல்லுவதுண்டு. அதனால் இக் கூட்டங்களுக்கு வந்து என்னுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள கல்லூரிப் பெண்கள் வருகிறார்கள். அவர்களைப் பார்க்க ஆண்கள் வருகிறார்கள். அதுதான் இரகசியம்!"*

*பார்த்தீர்களா, பிரடெரிக்கின் தன்னடக்கத்தை!*

**★ குழந்தைகள் துடுக்காகப் பேசுவது தவறா? அனுமதிக்கலாமா?**

திருமதி சே. ராஜேஸ்வரி, கண்டி.

*பேரறிஞர் பெர்னாட்ஷா மூன்று வயதாக இருக்கும்போது, அவருடைய வீட்டுக்கு மாமி வந்திருந்தார்.*

*பெர்னாட்ஷாவிடம், "உன் அப்பா பெயர் என்ன?" என்று கேட்டார்.*

*உடனே பெர்னாட்ஷா, "என் அப்பா பெயர்கூடத் தெரியாமல் எப்படி இங்கு வந்து தங்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாராம்.*

**★ நக்மாவுக்கு போட்டியாக சிம்ரான் வந்தார், சிம்ரானுக்கு போட்டியாக யார் வருவார்?**

எஸ். நிசாம், புத்தளம்.

*யார் வேண்டுமானாலும் வரலாம், சிம்ரான் என்ன சாவித்திரியா? கவர்ச்சியை காவித்திரிபவர்தானே!*



'இதுதான் காதல்' படத்தில் அப்பாஸ்-சிம்ரான்

*இவர் திகட்ட, இன்னொருவர் வருவார்-துணி கழட்ட!*

**★ சிந்தியா! இப்போதெல்லாம் கடன் வாங்கியவர்களைவிட கடன் கொடுத்தவர்கள் தானே கவலையுடன் இருக்கிறார்கள்?**

நூறுன் நிஷா, கல்முனை.

*'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற கம்பனின் விபரிப்பு பொருந்தாது. 'கடன்பட்ட சாமுவேல் புட் போல களிப்புற்றார் 'என்பதே பொருந்தும்.*

*அமெரிக்காவில் வாழ்ந்த நகைச்சுவை நடிகர் சாமுவேல் புட். பெயரும் இருந்தது. புகழும் இருந்தது. அவற்றை மிஞ்சுமளவுக்கு கடனும் இருந்தது.*

*"வசதி இருந்தும் ஏன் கடனாளியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்ட நண்பருக்கு, அவர் சிரித்தபடியே சொன்ன பதில் என்ன தெரியுமா?*

*"கடனாளியாக இருப்பதில் அதிக நன்மைகள் இருக்கின்றன. நான் எப்போதும் பிறர் பணத்தை செலவழித்துக் கொண்டிருப்பதால் வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்ளும் அவசியம் இல்லை. நம்மிடம் மற்றவர்கள் ஏதாவது பண உதவி கேட்டால் கஞ்சத்தனம் இல்லாமல் தாராளமாகத் தரலாம். எல்லோரிடமும் நான் கடன் வாங்கியிருப்பதால் என்னைப் பற்றி எல்லோரும் அவ்வப்போது விசாரித்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு எந்த வியாதியும் வந்துவிடக் கூடாது என்று எனக்காக கடவுளிடம் வேண்டுவார்கள். ஏன், நான் இறந்துவிட்டால் கூட உண்மையாகவே கவலைப்படுவார்கள்!"*

**★ தற்போதுகூட இந்த அரசாங்கத்தை நம்பும் தமிழ்க் கட்சிகளுக்கு அறிவே கிடையாதா?**

ஏ. ஜெகநாதன், மன்னார்.

*அறிவு உண்டு. புத்திசாலித்தனம் கிடையாது! இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்கிறீர்களா?*

*சோக்ரடிஸிடம் அவரது சிஷ்யன் கேட்டான்: "அறிவுக்கும், புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்?"*

*சோக்ரடிஸ் அதற்குச் சொன்னார்:*

*"அதோபார் அங்கே ஒரு வயதான பெரியவர் அமர்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போய், பக்கத்தில் உள்ள கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று கேட்டு வா!"*

*சிஷ்யனும் அந்தப் பெரியவரிடம் சென்று கேட்டான். பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். பதில் சொல்லவில்லை. திரும்பக் கேட்டதும் பதில் வரவில்லை.*

*பெரியவருக்கு தெரியாது போல் இருக்கிறது என்று நினைத்து, சிஷ்யன் வந்த வழியே திரும்ப நடந்தான்.*

*கொஞ்சத்தூரம் நடந்ததும் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார்.*

*"நீ பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ச் சேர பத்து நிமிஷம் ஆகும்!" என்றார்.*

*"ஏன் பெரியவரே! இந்தப் பதிலை அப்போதே சொல்லியிருக்கக்கூடாதா?" என்றான்.*

*பெரியவர் சிரித்தார். பின்னர் கூறினார்: "நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்று பார்க்காமல், எப்படி நீ போய்ச்சேர எவ்வளவு நேரமாகும் என்று சொல்ல முடியும்? அதனால்தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து, நேரத்தைச் சொன்னேன்!" என்றார்.*

*சிஷ்யன் நடந்த கதையை சோக்ரடிஸிடம் கூறினான். அவர் கூறினார்: "அதுக்குப் பேர்தான் புத்திசாலித்தனம்!"*

**★ நிவாரணத்தை குறைத்து வன்னி மக்களைப் பட்டினி போட்டுள்ளதே அரசாங்கம்?**

சி. குலசிங்கம், வவுனியா.

*நிவாரணத்தையே வெட்டும் அரசா நியாயத்தை தானாகத் தரப்போகிறது? குண்டுகள் வாங்கவும் தமிழ் மக்களின் உண்டியில் தான் அடிக்கிறார்கள்!*

**★ "முதலில் நாம் அணுக் குண்டை பாவிக்கமாட்டோம்!" என்கிறாரே வாஜ்பேயி: அதன் அர்த்தம் என்ன?**

கி. சந்திரசேகர், நுவரெலியா.

*முதலடி கிடையாது; பதிலடி உண்டு! என்று அர்த்தம்.*



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 15

எகிப்து நாடெங்கணும் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு தாங்கொண்ணாத உபத்திரவத்தைத் தந்தது. மக்கள் தங்கள் அன்றாட உணவினைத் தயாரிக்கவோ, உண்ணவோ முடியாதபடி எங்கும் வெட்டுக்கிளிகளின் தொல்லை விவரிக்க முடியாத அளவில் பரவியிருந்தது. மக்கள் உறங்கவோ, அல்லது ஓரிடத்தில் அமர்ந்திருக்கவோ முடியவில்லை.

பார்வோன் மோசேயைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தார். அவர் வந்து சேர்ந்ததும், "எப்படியாவது இந்தத் தொல்லையிலிருந்து எம்மைக் காப்பாற்றி விடுங்கள். உங்கள் கடவுளுடைய விருப்பத்துக்கு மாறாக நடந்துவிட்டேன். இந்தமுறை மட்டும் என்னை மன்னித்து வெட்டுக்கிளிகளை அகற்றுங்கள்!" என்று மிகப் பரிதாபமாக வேண்டிக் கொண்டான். மோசேயும் ஆரோனும் அரண்மனையை விட்டு வெளியேறி ஒரு திறந்த வெளியில் நின்றவாறு ஆண்டவரைத் துதித்தனர். அவருடைய கைகளை மோசே மேலே உயர்த்தியதும் பலத்த காற்று வீசியது. எங்கும் பரந்து கிடந்த வெட்டுக்கிளிகள் அனைத்தும் அப்பெருங்காற்றின் வேகத்தால் அடித்துச் செல்லப்பட்டன. சில நொடிகளில், எகிப்து நாடெங்கணும் அப்பிக்கிடந்த வெட்டுக்கிளிகள் செங்கடலில் போய் வீழ்ந்து கடல் முழுவதையும் முடிக்கொண்டன.

வெட்டுக்கிளிகள் அகன்றதும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட வண்ணமிருந்த பார்வோன் முன்னிலையில் மோசேயும் அவர் சகோதரர் ஆரோனும் நின்றனர். ஆனால் ஆண்டவர் மீண்டும் பார்வோனின் மனதைக் கடுமையாக்கினார். இஸ்ரயேலர்களை எகிப்து நாட்டை விட்டு அனுப்ப முடியாதெனக் கூறி விட்டான் பார்வோன்.

## காரிருள் சூழ்ந்தது

அரண்மனையை விட்டு வெளியே வந்த மோசேயிடம் ஆண்டவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மோசே, தனது இரு கரங்களையும் ஆகாயத்தை நோக்கி விரித்தார். உடனடியாக கருமையான மேகங்கள் விண்ணில் மிதந்தன. சூரியஒளி முற்றாக மறைந்தது. எங்கும் காரிருள் சூழ்ந்தது. மக்கள் விளக்குகளை ஏற்றியும் அவைகூட ஒளியைப் பரப்பவில்லை. அருகில் இருப்பவரைக் கூடப் பார்க்க முடியவில்லை. எகிப்திய மக்களனைவரும் தமது கண் பார்வையையே இழந்து விட்டவர்கள் போலானார்கள். தங்கள் இருக்கைகளை விட்டு எவரும் எழுந்திருக்கவே முடியவில்லை.

காரிருள் தொடர்ந்து மூன்று நாட்கள் எகிப்தில் கவிந்திருந்தது. ஆனால் எகிப்து நாட்டில் இஸ்ரயேலர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் மட்டும் எப்போதும்போல் ஒளியுடன் திகழ்ந்தன. இரவு வேளைகளில் இஸ்ரயேலர்கள் ஏற்றிய தீபங்களனைத்தும் ஒளிவீசி எரிந்த வண்ணம் இருந்தன. இந்த விந்தையை இஸ்ரயேலரின் குடியிருப்புக்களைத் தொலைவிலிருந்து பார்த்த எகிப்தியர் கண்டனர். இஸ்ரயேலர்களின் குடியிருப்புக்களை நோக்கிச் சென்றால் தாங்களும் காரிருளின் கொடுமையிலிருந்து விடுபடலாமே! என்றும் பலர் கருதினர். ஆனால் தங்கள் பகுதிகளிலிருந்து இஸ்ரயேலர் பகுதிகளுக்குச் செல்லும் பாதைகள் எதுவும் கண்களுக்குப் புலப்படாமல் எங்கும் இருள் கவிந்திருந்தது.

பார்வோன் தனது காவலரை- மோசேயை அழைத்துவரும்படி அனுப்பிவைத்தான். அவர்களும் இருளில் தட்டுத்தடுமாறி மோசே இருக்குமிடத்தைச் சூழ்ந்திருந்த ஒளியின் உதவியுடன் கண்டுபிடித்தனர். மோசே தன் சகோதரருடன் அரண்மனை நோக்கிச் சென்றார். சகோதரர்கள் இருவரும் சென்ற பாதையில் அவர்களுக்கு மட்டும் இருள் விலகி ஒளிகாட்டியது. அவர்கள் இருவரும் கூட காவலர்களுக்கும் ஏனையோருக்கும் தெரிந்தனர்.



மோசேயிடம் பார்வோன், "நீங்கள் உங்கள் இனத்தவர் சகலரையும் அழைத்துக்கொண்டு போய் விடுங்கள். ஆனால் ஆடு மாடுகளை மட்டும் இங்கேயே விட்டுச் செல்லுங்கள். எங்கு வேண்டுமோ அங்கே போய் உங்கள் கடவுளுக்குரிய வழிபாட்டை நடத்துங்கள்!" என்றான். ஆனால் கால்நடைகளை விட்டுவிட்டுச் செல்ல மோசே இசையவில்லை.

"எங்கள் ஆண்டவருக்கு நாங்கள் நடத்தப் போகும் பலி பூசை எவ்வாறு அமையும் என்று நாங்கள் இப்போது முடிவெடுக்க முடியாது. பூசைக்குரிய இடத்தை நாங்கள் போய்ச் சேர்ந்ததும் எங்களுடன் நாங்கள் கொண்டு செல்லும் எங்கள் கால்நடைகளிலிருந்து பூசைக்கு வேண்டியவற்றைத் தெரிவு செய்தெடுப்போம். ஆகவே எங்களுடைய ஆடுமாடுகளில் ஒன்றைத்தானும் இங்கு விட்டுவிட முடியாது!"

## சினமடைந்த பார்வோன்

மோசே கண்டிப்பாகக்கூறிய இவ் வார்த்தைகளால் பார்வோன் கடுஞ் சினமடைந்தான். அவனுடைய மனத்தை ஆண்டவர் மேலும் இறுக்கமடையச் செய்தார். "என் முன்னே நிற்க வேண்டாம். உடனடியாக இங்கிருந்து போய்விடுங்கள். இனிமேல் நீங்கள் என்முன் தென்பட்டால் அதே நொடியில் நீங்கள் சாவைத் தழுவ வேண்டியிருக்கும்; போய் விடுங்கள்!" என்றான் பார்வோன்.

மோசே, மன்னனைப் பார்த்து, "இனி மேல் உம் முகத்திலும் நாங்கள் விழிக்க மாட்டோம்!" என்று உறுதியாகக் கூறிவிட்டு அகன்றார்.

ஒன்றன் பின் ஒன்றாக எகிப்தில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து எகிப்து நாட்டு மக்கள், மோசே உண்மையில் ஆண்டவரின் அனுக்கிரகம் பெற்ற மாமனிதர் என்று கருதி அவர்மீது மரியாதை காட்டத் தலைப்பட்டனர். மோசே மீது இஸ்ரயேலர்களில் சிலர் கொண்டிருந்த சந்தேகமும் நீங்கி, அனைவரும் ஒரே மனதுடன் மோசேயின் கட்டளைப்படி நடப்பதற்கு ஆயத்தமானார்கள்.

ஆண்டவர் மோசேயை நோக்கி, "மோசே! எகிப்து இது நாள் வரை கண்டிராத பயங்கர அனுபவத்தைப் பெறப்போகிறது. இதனால் இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்தும் விலகிப் போகும்படி பார்வோன் விரட்டிவிடப் போகிறான். ஆகவே, எமது மக்களான இஸ்ரயேலர்களை, மாபெரும் பயணத்துக்கு ஆயத்தமாக இருக்குமாறு தயார் செய்யுங்கள்!" என்றார். அடுத்து நடக்கப்போகும் சம்பவம் எவ்வாறிருக்கப் போகிறது என்பதையும் மோசேயிடம் ஆண்டவர் கூறினார்.

# விடுதலைக்கான நாள்...?



இராஜகுமாரி

ஆண்டவர் கூறியவற்றை தனது மக்களிடம் மோசே தெரிவித்தார்.

"இந்த மாதத்தை ஆண்டவர் எமக்கு தலைசிறந்த முதல் மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இம்மாதம் பத்தாம் நாளன்று ஒவ்வொரு வீட்டுக்கும் உணவுக்காக ஓர் ஆட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த ஆட்டின் மாமிசத்தை உண்பதற்கு உங்கள் வீட்டில் போதுமான ஆட்கள் இல்லையானால் அயலிலுள்ளவர்களில் சிலரை உங்களுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். தேர்ந்தெடுக்கும் ஆடு எக்குறைபாடுமற்ற ஒரு வயதுக் குட்டியாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட நாளன்று மாலையில் ஆட்டை வெட்ட வேண்டும். மாமிசத்தை நெருப்பில் வாட்டி எடுத்து உண்ண வேண்டும். அடுத்த நாள் பொழுது புலர்வதற்கு முன்னர் உணவினை முழுமையாக உண்டுவிட வேண்டும். எலும்பு, தோல் போன்ற எவையேனும் மீதமிருக்குமானால், அவற்றைத் தீமிட்டு எரித்து விடவேண்டும். இறைச்சியுடன் கசப்பான கீரையையும் புளிப்பற்ற அப்பத்தையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

## இரத்தத்தால் அடையாளம்

ஆட்டு இரத்தத்தை எடுத்து இஸ்ரயேலர்கள் வசிக்கும் இல்லங்களின் முன்புறம் கதவுகளில் பூசிவிடவேண்டும். குறிப்பிட்ட தினத்தன்று இரவு கடவுள் எகிப்தின்மீது புறப்பட்டுச் செல்வார். அவர் வரும்போது இரத்தம் பூசப்பட்ட வீடுகள், இஸ்ரயேலர்களுடைய குடியிருப்புகள் என்பதை அறிந்து கொள்வார்.

அவர் எகிப்தியர்களுடைய வீடுகளையும் இஸ்ரயேலர்களுடைய வீடுகளையும் அடையாளம் கண்டு கொள்வதற்கு இரத்தம் பூசப்பட்ட கதவுகளே சான்றாக இருக்கும்.

ஆண்டவர் கடந்து செல்லும்போது எகிப்திய குடும்பத்தில் பிறந்த தலைமகன்கள் அனைவரும் மடிந்து விடுவார்கள். பார்வோனின் தலை மகன் முதல் அடிமைகளாக உள்ள எகிப்திய குடும்பத்துத் தலைமகனும் விதிவிலக்கற்று இறந்து போவார்கள். எகிப்து நாடெங்கணும் பெரும் அவலக்குரல் கேட்கப் போகிறது. ஆடம்பர மாளிகைகளிலும் அடிமைகளின் குடிசைகளிலும் புலம்பலொலி எழப் போகிறது. மனிதர்கள் மட்டுமல்லாமல் எகிப்திலுள்ள ஆடு, மாடு, பறவைகள் அனைத்திடையேயுமுள்ள தலைப் பிறவிகள் அனைத்தின் உயிரும் பிரிந்து விடும்!"

இவ்வாறு ஆண்டவர் தன்னிடம் கூறியவற்றை, இஸ்ரயேலய மக்கள் கூட்டமைப்பின் குழுத்தலைவர்களிடம் மோசே விளக்கமாகக் கூறி, சகல மக்களுக்கும் விவரமாக எடுத்துரைத்து மக்களை வெளியேறுவதற்கு ஆயத்தமாகும் படியும் கூறினார் குழுத்தலைவர்கள் சகல இஸ்ரயேலர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஆண்டவரின் கருத்தை வெளிப்படுத்தினார். நீண்ட கால அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு, சுதந்திர மக்களாக, எகிப்து நாட்டைவிட்டு வெளியேறும் அந்தப் பொன்னான நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருந்தது எபிரேய சமுதாயம்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 13 விடை: நைல் நதி.**

**பரிசு பெறுவோர்:**

1. அ.இ. கஸில்டா, மூதூர்-07.
2. ஜோ. கிலட்வின், 46, பலாக்கெல்ல, லபுக்கெல்ல.
3. ஜ். சாரா ஜ்வரோஜினி, மாதா கோயில் வீதி, பெரியகல்லாறு-01, கல்லாறு.
4. ஜே.எம். ஜின்னா, 257/B, வல்லறம்ப, ஹன்தெஸ்ஸ, கண்டி.
5. ஆயிஸா றிஸ்கா, 30, பண்டாரநாயக்க புர, மல்கடுவாவ, குருணாகல்.

**திருமறை 15 வினா:-** ஆண்டவர் எகிப்தியர் மீது ஏவிய தண்டனைகளை வரிசைப்படி தருக?

ஜூலை 04க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 15–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : நாடாளுமன்றம். |
| தொழில் | : நாடாளுவதல்ல. |
| வயது | : ஐம்பது. |
| எடை | : ஜனாதிபதி ஆட்சிக்குப்பின்னர் குறைந்துவிட்டது. |
| பொழுது போக்கு | : சட்டங்களை நிறைவேற்றுவது (நடைமுறைப்படுத்துவதல்ல) |
| இரசிப்பது | : முழக்கங்களை. இடைக்கிடையே பரிமாறப்படும் கெட்ட வார்த்தைகளை. |
| சாதனை | : ஐம்பது வருடமாக மக்களை ஏமாற்றியது. |
| வேதனை | : காலியாகக் கிடக்கும் ஆசனங்கள்! |
| நண்பர்கள் | : நாற்காலிப் பிரியர்கள். |
| எதிரிகள் | : என்னை அறிந்தவர்கள். |
| கொடுப்பது | : எம்.பி.களுக்கு சம்பளம். |
| கொடுக்காதது | : பிரச்சனைகளுக்கு தீர்வு. |

## பொதி விளையாட்டு




## விழுந்த பறவை



முத்துத்தம்பி: வாரும் கந்தசாமி வாரும், நீர் வருவீர் என்று எதிர்பார்த்தேன். வரும் வழிதோறும்...

கந்தசாமி: என்ன, கண்ணிவெடி வைச்சனீரோ? நான் வருவேன் என்று எப்படித் தெரியும்?

மு.த: பட்சி..பட்சி ஆள்காட்டிப் பட்சி வந்து சொன்னது.

க.சா: பறவை வளர்க்கிறீரோ?

மு.த: வளர்த்தேன் என்று இறந்த காலத்தில்தான் சொல்லவேணு ம்.

க.சா: காரணம்?

மு.த: என்ரை பேரன்தான் காரணம். கெற்றப் பொல்லாலே அடிச்சு விழுத்திப் போட்டான்.

க.சா: வான் பறவை தரையில் விழுந்து போச்சு என்றால், நல்ல கறியாக்கி இருக்கலாமல்லோ.

மு.த: சும்மா நக்கல் பண்ணாதேயும். வளர்த்தது பல பறவை. மிஞ்சி இருந்தது அந்த ஒரு பறவைதான். அதுவும் போச்சுதே.

க.சா: சரி போனதை நினைச்சு என்ன செய்யிறது? ஆனாலும் உம்முடைய பேரன் கெட்டிக்காரன்தான்.

மு.த: பறந்து எச்சம் போட்டதால், அன்பு இல்லாமல் போய்விட்டது, என்று சொல்லிக் கொண்டு திரிஞ்சவன். அதுதான் கள்ளன் காவல் இருந்து அடிச்சுப்போட்டான்.

க.சா: அன்பு... இல்லாமல் போனபிறகு பறவையை விடக்கூடாது என்று நினைச்சுப் போட்டானாக்கும். நாங்கள் அரசியலுக்குள் எட்டிப் பார்ப்போமோ?

மு.த: எட்டிப் பார்ப்பானேன், பிறகு கொள்கைப்பற்றோடு அறிக்கைவிட்டு வெட்டி விலகுவானேன்?

க.சா: உம்மை என்ன வேட்பாளராக நிற்கவோ கூப்பிட்டவை. உங்களை மாதிரி ஆட்களை உள்ளே விட்டால், அங்கிருந்தபடியே பொட்டுக் கேடுகளை அம்பலமாக்கிப் போடுவியள் அல்லோ.

மு.த: எப்பாடுபட்டாலும் இனப் பிரச்சனையை தீர்ப்போம் என்று அரசு சொல்லுது.

க.சா: தமிழ் மக்கள் எப்பாடு பட்டாலும் இன பிரச்சனையை தங்களுக்கு ஏற்ற விதமாக தீர்க்கப்போகினமாக்கும்.

மு.த: யுத்தத்தை நடத்திக்கொண்டு புலிகளுடன் பேசலாம் என்று ஐடியா கொடுத்திருக்கிறாராம். எதிர்க்கட்சித் தலைவர்.

க.சா: அப்படியானால்தானே முறைச்சுக் கொண்டு பேச்சு நடக்கும், கெதியாக முறிவும் நடக்கும்.

மு.த: அதைவிடும், கால்பந்து திருவிழா களை கட்டியிருக்குது. கண்டுகளிப்பதில்லையோ?

க.சா: அந்த கால்பந்தை கண்டதும் களிப்போ வரும்? கண்ணீர்தான் வரும்!

மு.த: ஏன், பந்துக்குள்ளே உமது தலையை வைத்தோ உதைக்கினம்?

க.சா: சும்மா போம் ஐசே. அந்த பந்து எதிர்க்கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் இடையே உருண்டுதிரியும் தமிழ்க் கட்சிகள் மாதிரியல்லோ இருக்குது.

யாவும் கற்பனை

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவல்லர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# மூன்று மட்டும்



↑ சட்டென்று பார்த்ததும் அட மூன்று கால் மட்டும் உள்ள குதிரை போல் தெரிகிறதல்லவா? இல்லை. உற்றுப் பார்த்தால் இன்னொரு கால் தெரியும். எல்லாக் குதிரைப் போலவும் இதற்கும் நாலு கால்கள்தான். ஆனால் இதன் கால்கள் அதிவேகமானவை. அதுதான் ஆச்சரியம்.

குதிரைச் சவாரிகளில் சாதனை படைத்ததாகக் கருதப்படும் ஃபார்லாப் என்ற குதிரைக்குச் சொந்தக்காரர் நியூசிலாந்தைச் சேர்ந்த ஹாரி ரெல்ஃபோர்ட். குதிரைகளைச் சவாரிக்காகப் பயிற்றுவிக்கும் ரெல்ஃபோர்ட், இக்குதிரையை 168 பவுணுக்கு வாங்கினார்.

அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் 1928க்கும் 1932க்குமிடையில் நடைபெற்ற 50 குதிரைப்பந்தயங்களில் 36 பந்தையங்களில் ஃபார்லாப் வெற்றியீட்டியுள்ளது. மெல்போன் கோப்பையை 1930ம் ஆண்டில் இக்குதிரை வென்றது. 14 பந்தயங்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுள்ளது. 1932 மார்ச் மாதம் மெக்ஸிகோவில் இடம்பெற்ற 'ஒளகா கலிவ்ரே' பந்தயத்தில் வென்றது. இதற்கு மிகக் கூடுதலான பணம் பரிசாகக் கிடைத்தது. இப்பந்தயம் இடம் பெற்று 14 நாட்களில் மர்மமான முறையில் இக்குதிரை இறந்துவிட்டது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


# மெதுவா மெதுவா

↓ இந்த வித்தியாசமான ஆமை வைரமுதுகு ஆமை என்று அழைக்கப்படுகிறது. அத்திலாந்திக் சமுத்திரத்தின் தெற்கே அமெரிக்காவின் மசாச செட்ஸ் மாநிலக் கரையோரத்தில் இந்த ரக ஆமைகள் காணப்படுகின்றன.

செதுக்கப்பட்ட வைரக்கற்கள் பதிக்கப்பட்டதைப் போன்ற ஓட்டை உடையதினால் இந்த ஆமைக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உப்புக்கக்கும் சதுப்பு நிலத்தில்தான் இவை சஞ்சரிக்கின்றன. இந்த நிலத்தில் வளரும் பச்சைத் தாவரங்களையும் சிறு நத்தைகள் மற்றும் சிறிய நீர்ப்பிராணிகளையும் உணவாக இவை உட்கொள்ளும்.

ஆண் ஆமைகளைவிட பெண் ஆமைகள் நீளமாக 28 சென்றி மீட்டர் வரை வளரும்.



# வைரமுடி

↘ பிரிட்டிஷ் அரியணையில் ஏறும் அரசனோ அரசியோ ஏறியதும் அவருடைய சிரசில் சூடப்படும் முடியும் செங்கோல்கள், சிலுவையுடன் கூடிய கோளச்சின்னம் மற்றும் மோதிரம், ஆகியவை இங்கே காட்சி தருகின்றன. சுத்த தங்கத்தினால் ஆன இந்த அரச சின்னங்கள் அத்தனையிலும் விலை மதிப்பற்ற இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கு வர்த்தக நோக்கத்துடன் வந்த பிரிட்டிஷார் கிழக்கிந்தியக் கம்பனி என்ற பெயரில் வர்த்தகத்தில் ஈடுபட்டு நாட்டையே அடிமைப்படுத்தினர். 1850ம் ஆண்டு இந்தியாவில் பெறப்பட்ட உலகப் பிரசித்திபெற்ற கொஹிநூர் வைரத்தை இக்கம்பனியார் எடுத்துச்சென்றனர். அந்த வைரக்கல் இந்தக் கிரீடத்தில் பதிக்கப்பட்டிருக்கிறதாம். அழகாக வெட்டப்பட்ட ஆபிரிக்கக் குலினான் வைரக்கல் ஒன்று இப்படத்தில் காணப்படும் சிலுவையுடன் கூடிய செங்கோலில் பதிக்கபட்டுள் ளது. இதன் எடை 530 கரட். இதன் பெயர் 'ஆபிரிக்கத் தாரகை.'



# பழக்கார்



← இது பழம்கார். அதாகப் பட்டது. பழங்களால் உருவாக்கப்பட்ட கார். தோடம்பழம், எலுமிச்சம் பழம் போன்றவற்றால் உருவானது.

தென் ஃபிரான்ஸ்சில் நடைபெற்ற 65வது எலுமிச்சைத் திருவிழாவில் இக்கார் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## திவ்யா 22.05.1998

மட்டக்களப்பு முனைத்தீவு பிள்ளையார் கோவில் வீதி புண்ணிய மூர்த்தி-சுகந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வி **திவ்யா** தனது முதலாவது பிறந்த நாளை 22.05.1998 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, மற்றும் அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், தாத்தாமார், பாட்டிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென பேபி திவ்யாவை வாழ்த்துகின்றனர்.

*தகவல்: மாமா-சுரேன், முனைத்தீவு.*

# 'கோ'லர்

↘ இம்முறை கால் பந்து திருவிழாவின் நாயகன் யார்? உலகெங்கும் உள்ள கால் பந்து ரசிகர்கள் நம்புவது ரொனல்டோவை. இந்த 21 வயது பிரேசில் வீரர்மீது தான் கால் பந்து ரசிகர்களின் முழுக்கவனமும் திரும்பியுள்ளது. இவர் மீது நம்பிக்கை வைத்து பந்தயங்களில் கோடிக்கணக்கான பணம் கட்டப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையை காப்பாற்ற வேண்டுமானால் ரொனால்டோ அதிக கோல்கள் போட வேண்டும். அசத்தலாக எதிர்த்தரப்புக்கு தண்ணிகாட்ட வேண்டும்.

ஆர்ஜென்டீனாவின் முன்னாள் சூப்பர் ஸ்டார் மரடோனா போல இவரும் ஆரம்ப பாடசாலையை தாண்டவில்லை. ஆனால் கால்பந்தாட்டத்தில் சூப்பர் ஸ்டார். படிக்கும் போதே கால்பந்து பைத்தியம். அதனால் ஆரம்ப கல்விக்கு அப்பால் நாட்டம் செலுத்தவில்லை.

கால்பந்து விளையாட்டின் மூலம் மிகப் பெரும் கோடீஸ்வரராக உள்ள ரொனால்டோ அதிவேகமாக பந்தை தள்ளிச் செல்லக் கூடியவர். எக்கச்சக்கமான பட்டங்களையும் பதக்கங்களையும் வாங்கி பத்திரமாக வைத்திருக்கிறார்.

16 வயதில் இரண்டாயிரம் டொலர் ஊதியம் பெற்று ஒரு கிளப்புக்காக விளையாடினார். அந்த சீசனில் 54 கோல் போட்டதும் பிரேசில் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். 17 வயதில் பிரேசில் அணியில் சேர்ந்தார். இத்தனை இளம் வயதில் இவரைத் தவிர தேசிய அணி யில் விளையாடிய ஒருவர் பீலே மட்டுமே.

ஐரோப்பிய நாடுகள் இவரை விலைக்கு வாங்கத் துடித்தன. நெதர்லாந்து அணி இவரை இருகரம் நீட்டி அணைத்தது. ஸ்பெயின் கிளப் ஒன்று எட்டுக் கோடி ரூபா கொடுத்து இவரை ஒப்பந்தம் செய்தது.

தற்போது இத்தாலியின் இன்டர் மிலான் அணியில் விளையாடி வருகிறார். உலகக் கோப்பை போட்டிக்காக மட்டும் தாய்நாட்டுக்காக களம் இறங்கியுள்ளார்.

ரொனால்டோவின் முழுப்பெயர் ரொனால்டோ லூயி நகாரியே லிமா. ஆறு அடி உயரம். எடை 78 கிலோ. குத்துச்சண்டை வீரர்போல தோற்றம். வறுமையில் உழலும் பிரேஸில் கால்பந்து மூலம் உலகை தன் பக்கம் திருப்பியுள்ளது பல சூப்பர் ஸ்டார்களை உருவாக்கியும் உள்ளது.







கிளப்புக்காக ஆட எட்டுக்கோடி



படிப்பகம்